பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 வைகாசி 23 சனிக்கிழமை (05~06~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:193

# கிழக்கில் இராணுவச் சமநிலையை குழப்ப அரசுத் தரப்பு சதித்திட்டம்!

## மேற்குலக நாடுகளுக்கு புலிகள் எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூன்5

**கிழக்கில் இராணுவச் சமநிலையைக் குழப்பி, நிலைமையை மோசமடையச் செய்யும் சதித் திட்டத்தை அரங்கேற்ற இலங்கை அரசு முயல்கிறது. வெளியே சமாதானத்தில் நாட்டம் இருப்பது போல பாவனை பண்ணிக்கொண்டு இராணுவத் தீர்வை நோக்கியே அது நகருகின்றது.**

**- இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமை மேற்கு நாடுகளின் இராஜதந்திரிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்திருக்கின்றது எனத் தெரியவருகின்றது.**

சமாதானப் பேச்சுக்களில் ஆக்க பூர்வமான - அர்த்தபுஷ்டியான - முன்நகர்வு இருந்தால் மட்டுமே இலங்கைக்கு சர்வதேச நிதி உதவி வழங்கப்படும் என்ற திட்டவட்டமான முடிவை இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டது.

அதற்கு, இராணுவத் தீர்வில் நாட்டம் கொள்ளும் இலங்கை அரசின் போக்கை விடுதலைப் புலிகள் தமது தொடர்புகள் மூலம் சம்பந்தப்பட்ட மேற்குலக அதிகார வர்க்கத்துக்கு விளக்கமாக எடுத்துரைத்ததும் மிகமுக்கியமான காரணம் என்று தெரியவருகின்றது.

இடதுசாரிப் போக்குடைய ஜே.வி.பியை பிரதான பங்காளிக் கட்சியாக வைத்துக்கொண்டு ஆட்சிக்கான கொள்கை, கோட்பாடுகளை வகுத்து வரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு குறித்தும், அதன் போக்குக் குறித்தும் மேற்கு நாடுகள் ஏற்கனவே அதிருப்தி கொண்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசின் அரசியல, சித்தாந்த நிலைப்பாடுகள், பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றை வரவேற்காத போக்கில் நோக்கும் மேற்கு நாடுகள், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் இந்த அரசின் நிலைப்பாட்டை உறுதியற்ற - சந்

(16ஆம் பக்கம் பார்க்க)



பிரபாவுடன் பத்திரிகையாளர் கோபு

## பத்திரிகையாளர் கோபுவுக்கு புலிச் சின்னம் பதித்த விருது

கிளிநொச்சி,ஜூன்5

மூத்த தமிழ்ப்பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம்(கோபு) தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் புலிச்சின்னம் பதித்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

வன்னியில் உள்ள பிரத்தியேக இடமொன்றில் தேசியத் தலைவரை எஸ்.எம்.கோபாலரத்தினம் நேற்றுச் சந்தித்தார். அப்போது அவருக்கு விருது வழங்கிக்கௌரவித்தார்.

இதுகுறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலஇரத்தினம் ஐம்பது ஆண்டு

(16ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோரின் மோதலில் சிக்கி மூன்று வயது மகன் உயிரிழப்பு!

### புலோலி கிழக்கில் அதிர்ச்சிச் சம்பவம்

கரவெட்டி,ஜூன்5

பெற்றோரது மோதலின் இடையே அகப்பட்ட 3 வயதுச் சிறுவன் உயிரிழந்தான்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.45 மணியளவில் பருத்தித்துறை புலோலி கிழக்கு சாந்தாதோட்ட முதலி கோவில் பகுதியில் இடம்பெற்றது.

இராசகுமார் இராஜ்குமார் (வயது-3) என்ற சிறுவனே குடும்பத்தகராறில் சிக்கி உயிரிழந்தவராவார். இச்சிறுவனின் தந்தையான இராசதுரை இராஜ்குமார் (வயது-30) தயாரான இஜெயந்தி (வயது-22) மற்றும் ஜெயந்தியின் தாயாரான சுப்பையா இரஞ்சிதம் (வயது-58) ஆகிய மூவரும் இச்சம்பவத்தில் காயமடைந்து ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் நேற்றிரவு கோஷ்டி மோதல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

அரியாலை - புங்கன்குளம் பகுதியில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற கோஷ்டி மோதலில் காயமடைந்த ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடியைச் சேர்ந்த எஸ்சுபாஸ்கரன் (வயது-28) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். (ஒ-7)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!

கொழும்பு,ஜூன்5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைக் கிளிநொச்சியில் சந்தித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களின் தற்போதைய நிலை தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படும்.

கடந்த புதன்கிழமை தமிழ்ச்செல்வனைச் சந்தித்த மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன வலியுறுத்திய விடயங்கள் தொடர்பாகவும் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களும், மலையக மக்கள் முன்னணியின் எம்பிகளும் சேர்ந்து புதுடில்லிக்குச் சென்று இங்குள்ள அரசியல் நிலைவரங்களை புதுடில்லி அரசுக்கு தெளிவுபடுத்துதல்

(16ஆம் பக்கம் பார்க்க)

### வெட்டுக்காயங்களால் முகம் சிதைக்கப்பட்டு

## கைகள் கட்டப்பட்ட நிலையில் வடமராட்சியில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

வடமராட்சி வதிரியில் கைகள் பின்புறம் கட்டப்பட்டு வெட்டுக்காயங்களால் முகம் சிதைக்கப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நவிண்டில் குளங்கரை என்ற இடத்தைச் சேர்ந்த விக்டர் என அழைக்கப்படும் எஸ்.சந்திரமோகன் (வயது-25) என்பவரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலையைச் சேர்ந்த இவர் ரெலோ அமைப்பில் இணைந்து செயற்பட்டுவந்தவர். கடந்த சில வருடங்களுக்கு முன் அந்த இயக்கத்தில் இருந்து விலகி வடமராட்சியில் பெண் ஒருவரைத்திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

வதிரி இரும்பு மதவடியில் உள்ள மடம் ஒன்றிலிருந்து இவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இருகைகளும் 'நைலோன்' கயிற்றினால் பின்புறமாக கட்டப்பட்டிருந்தது. அடையாளம் காணமுடியாத வகையில் முகத்தில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டன. மண்ணிற அரைக்காற்சட்டையும், ரீசேட்டும் சடலத்தில் காணப்பட்டன. வடமராட்சிப்பகுதியில் இச்சம்பவம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## சட்டம் - ஒழுங்கை நிலைநிறுத்தாவிட்டால் கிழக்கைப் புலிகளிடம் விட்டுவிடுங்கள்!

### நிர்வகித்துக் காட்டுகிறோம் என்கிறார் தமிழ்ச்செல்வன்

லண்டன்,ஜூன்5

"கிழக்கில் படைக்கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியாது விட்டால அங்கிருந்து படைகளை விலக்கிக்கொள்ளுங்கள் நாங்கள் அங்கு சட்டம் - ஒழுங்கை சரிவர நிலை நிறுத்தி, நிர்வகித்துக்காட்டுகின்றோம்"

- இப்படிப் படைத்தரப்புக்குத் தாங்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருக்கிறார்.

நேற்று பி.பி.ஸிக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அதில் அவர் மேலும் கூறியதாவது:-

எங்களைப் பொறுத்தவரை சமாதான முயற்சிகள் குழப்பமான சூழ்நிலையில்தான் உள்ளன.

ஜனாதிபதியால் தரப்பட்ட உத்தரவாதங்களும், வாக்குறுதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட சூழலில் பேச்சுக்கள் மீளத் தொடங்குவதற்கான நம்பிக்கை இருந்தது.

ஆனால், ஏற்கனவே இணக்கம் கண்ட விடயங்களில் தீர்க்கமானமுடிவு எடுக்கப்படாததனால் - தீர்க்கமான பதிலை ஜனாதிபதி தராத காரணத்தால் பேச்சுக்கள் மீளத்தொடங்குவது பற்றிய முடிவு இழுபட்டுக்கொண்டு போகின்றது.

*கேள்வி:* உங்கள் அடுத்த நடவடிக்கை என்ன?

*பதில்:* அனுசரணையாளர்களிடம் எங்களின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கியுள்ளோம். ஏனெனில் கடந்த இரண்டரை வருடங்களாக இந்தப்பேச்சுக்களில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. எங்கள் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை.

கடந்தகாலப் பேச்சுக்கள் குழப்பமடைந்ததுக்கும், முடக்கம் அடைந்ததுக்குமான காரணங்களைக் கண்டறிந்து புதிய பேச்சுக்களை ஆரோக்கியமாகவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்வதற்கான புதிய சூழலை உருவாக்கவேண்டும் என்பது எமது தலைமைத்துவத்தின் நிலைப்பாடு. இதற்கான அனுசரணையாளர்கள் ஊடாக நாம் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

அந்த அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் ஆர்வமாக (16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் 'உதயன்-சஞ்சீவி' வெற்றிக்கிண்ணத்துக்காக நடந்த தடகளப் போட்டிகளும் பரிசளிப்புவிழாவும் நேற்று இடம்பெற்றன. விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறைச் செயலாளர் ஆர். தியாகலிங்கம் வீராங்கனை ஒருவருக்குப் பரிசில் வழங்குவதை முதலாவது படத்திலும், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேனுகோபால் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பரிசில்களை வழங்குவதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். ஓட்டப் போட்டியில் ஒரு காட்சியைக் கடைசி இருபடங்களிலும் காணலாம். (படங்கள்:வசந்தன்)

'உதயன்-சஞ்சீவி' கிண்ணத்துக்கான

# தீவக வலயத் தடகளப்போட்டியில் அந்தோனியார் கல்லூரி சம்பியன்

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட உதயன் - சஞ்சீவி வெற்றிக் கிண்ணத்திற்கான தடகளப் போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி இவ்வருடச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

'உதயன்-சஞ்சீவி' அனுசரணையுடனான இப்போட்டிகளின இறுதிநாள் நிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் நேற்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

இதில் சகல போட்டிகளிலும் பங்குபற்றி 181 புள்ளிகளைப் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாம் இடத்தையும், 106 புள்ளிகளைப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

தீவகக் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபால் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை செயலாளர் ஆர். தியாகலிங்கம், தீவகக் கல்வி வலயப பிரதிக் கல்விபணிப்பாளர் எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோர் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கான கேடயங்களையும், கிண்ணங்களையும் வழங்கினர்.(ஓ-5)



வடமராட்சி - வதிரியில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம். (படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

# உலர் உணவு நிவாரணம் வெட்டப்பட்டால் செயலகம் ஸ்தம்பிக்கும் வகையில் மறியல்

## யாழ். மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்5

குடாநாட்டில் உலர் உணவு நிவாரணத்தை வெட்டினால், யாழ். செயலகத்தைச் செயலிழக்கச் செய்யும் வகையில் மறியற்போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை செய்துள்ளது.

ஜனாதிபதியின் பேச்சாளரும் புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீண்ட போரினால் அடிப்படை வசதிகளற்று இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப முடியாமல் தொழிலின்றி, வருமானமின்றி அவல வாழ்வை அனுபவித்துக்கொண்டிருக்கும் யாழ். குடாவின் ஒரு லட்சத்து இருபத்தெண்ணாயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டு குடும்பங்களுக்கு 2004 ஜனவரி மாதம் வரை உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வந்தது.

போரினால் அழிந்துபோயுள்ள குடாநாடு இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலைகளும் காணப்படவில்லை. இதனால், மேற்குறிப்பிட்ட குடும்பங்கள் உலர் உணவு நிவாரணத்தை மட்டுமே நம்பி உயிர் வாழ்கின்றன. இது இவர்களது உயிரைப் பிடித்து வைத்திருக்கிறதே தவிர மூன்று வேளையும் சாப்பிட இந்த நிவாரண உணவு போதுமானதாகவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில், உலர் உணவு நிவாரணம் பெற்று வந்த அறுபத்தொன்பதாயிரத்து முநநூற்று எண்பத்தேழு குடும்பங்களுக்கு முன் அறிவித்தல் ஏதும் இல்லாமலே திடீரென நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனை தங்களுக்கு கடிதமூலமும் நேரிலும் தெரிவித்துள்ளோம். மேலும், இது தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளோம் என்பது தாங்கள் அறிந்ததே.

அதேவேளை, 26.05.2004 அன்று மாவட்ட அரச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தாங்கள் எடுத்த முடிவின்படி நிவாரணம் நிறுத்தப்படாது என்றும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும்வரை தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வந்தது போன்று ஒரு லட்சத்து இருபதெண்ணாயிரத்து ஐநூற்று எண்பத்திரண்டு குடும்பங்களுக்கும் உலர் உணவு வழங்கப்படும் என்று உறுதி கூறியிருந்தீர்கள். ஆனால், உறுதி கூறப்பட்டபடி இன்னும் உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால், உலர் உணவு பெறவிருந்த குடும்பங்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளன.

அன்றைய கட்டத்தில் அரச அதிபர், உதவி அரச அதிபர்கள், திணைகளத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், யூ.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி எனப் பலரும் பங்குபற்றியிருந்தனர். மிகவும் உயர் மட்டக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இப்போது எமக்கு உணவு முக்கியம். ஏற்கனவே, உலர் உணவு பெற்ற வந்த ஒரு லட்சத்து இருபத்தெண்ணாயிரத்து ஐநூற்றி எண்பத்திரண்டு குடும்பங்களுக்கும் உடனடியாக உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் அரை வயிறும், கால் வயிறுமாக பட்டினி கிடக்கும் மக்கள் விரைவில் யாழ். மாவட்ட கச்சேரி முன்பாக அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

பட்டினிச்சாவை எதிர்கொள்ளும் மக்களின் மனிதாபிமான போராட்டதிற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பல்வேறு பொது அமைப்புக்களும் உதவ முன்வந்துள்ளன.

விரைவில் தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றோம். இல்லையேல், உலர் உணவு நிவாரணம் பெறும்வரை கச்சேரி செயலிழக்கும் வகையில் அரச எதிர்ப்புப் போராடடத்தை மக்கள் முன்னெடுப்பர் என்பதை மிகவும் வேதனையுடன் தங்கள் மேலான கவனத்திறகு அறியத்தருகின்றோம். அதேவேளை, உலர் உணவு நிவாரணம் தொடர்பாக அரசினால் கடைப்பிடிக்கும் கொள்கை ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பதையும் இந்நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என உள்ளது. (ஒ-3)

# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்5

சட்டக் கல்லூரிக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான பரீட்சை நவம்பர் மாதம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்றுவோர்களுக்கான வினாத்தாள் மீட்டல் வகுப்புகள் இன்று காலை 9 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் பெறும்.

கொழும்பு சட்டக்கல்லூரி இந்து மகாசபை மாணவர்களினால் இந்த வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (4-185)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்5

ஊரெழு கிராமத்தில் யூ.எஸ். எயிட் திட்டத்தின் கீழ் சர்வோதயம் நிறுவனத்தினால் நடத்தப்படும் கலாசார விழா, இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஊரெழு சர்வசக்தி சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் ந.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக ஊரெழு கணேசா வித்தியாலயத்தின் அதிபர் இ.குலசிங்கமும் கௌரவ விருந்தினராக சர்வோதயத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ந.ஸ்ரீமனோகரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (4-7)

★ ★ ★

யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் வார்ட்டின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 'சிறுவர் பூங்கா' இன்று முற்பகல் 10 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படும்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தலைமையில் இடம் பெறும் இத்திறப்புவிழா நிகழ்வில், சிறுபிள்ளைகள் நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ஏ.ஜே.மோறல் பூங்காவைத் திறந்துவைப்பார். (3-15)

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.பல்கலைக்கழத் திரைப்பட வட்டம் வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில் பிரபாத் ராயின் நெறியாள்கையில் உருவான 'லத்தி' எனும் வங்க மொழித் திரைப்படம், ஆங்கில மொழித் துணைத் தலைப்புகளுடன் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்குப் புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

தொடர்ந்து அ.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் மேற்படி படம் பற்றிய கலந்துரையாடல இடம்பெறும். ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்5

கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகம் நடத்தும் 18 ஆவது திருவள்ளுவர் விழா இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கருணையம்பதி சனசமூக முன்றிலில் நடைபெறவுள்ளது.

கநாகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வேணுகோபால் வாணிதாஸன் ஆகியோர் கலந்துகொள்வர்.

வரவேற்புரையை அதிபர் சி.மகேந்திரனும் வாழ்த்துரைகளை க.பசுபதி, பண்டிதர் க.முத்துவேலு ஆகியோர் நிகழ்த்துவர். யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறும் சிறப்புச் சொற்பொழிவில் 'ஆழமும் பொருளும் அழகும்' என்ற தலைப்பில் ஆறு.திருமுருகனும், 'வள்ளுவமும் வாழ்வும்' என்ற தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரும் உரைநிகழ்த்துவர். (4-5-173)

## கிழக்குப் பல்கலை. 14 இல் ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜூன்5

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன என்று பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 7 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும் என வெளிவந்த செய்திகள் தவறு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதி வசதிக்குத் தகுதியான முதலாம் மற்றும் இறுதி வருட மாணவர் அனைவரும் எதிர்வரும் 13ஆம் திகதி மாலை 6 மணிக்கு முன்னர் விடுதிகளுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் -

காத்தான்குடிக்கும் - வாழைச்சேனைக்கும் அப்பால் வசிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே விடுதி வசதி வழங்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (3)

## கவுணாவத்தை ஆலய பொங்கல் இன்று

வலி.வடக்கு.ஜூன்5

கீரிமலை கவுணாவத்தை ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று காலை இடம்பெறவுள்ளது.

இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இந்த ஆலயத்திற்கு அடியார்கள் இளவாலை - சேந்தான் குளம் பாதை ஊடாகச் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-86)

## உரங்களுக்கான விற்பனை விலை

கிளிநொச்சி,ஜூன்5

விவசாயிகளின் நன்மை கருதி உரங்களின் ஆகக் கூடுதல் விற்பனை விலைகளை நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி நிர்ணயித்துள்ளது. உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக அறிவிக்கப்பட்டுள்ள புதிய விலைகள் பட்டியலாக வெளியிடப்பட்டுள்ளன.

விலைப் பட்டியல் வருமாறு:-

| பசளையின் பெயர் | உற்பத்தி நிறுவனத்தின் பெயர் | வன்னி விற்பனை விலை | | யாழ்.விற்பனை விலை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ | ச | ரூ | ச |
| யூரியா (50 கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 630 | 00 | 645 | 00 |
| | கேலிஸ் | 630 | 00 | 645 | 00 |
| | சீ.ஐ.சீ. | 630 | 00 | 645 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 606 | 00 | 620 | 00 |
| அமோனியா (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 945 | 00 | 960 | 00 |
| | சீ.ஐ.சீ | 1135 | 00 | 1150 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 1065 | 00 | 1080 | 00 |
| ரீ.எஸ்.பி. (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1365 | 00 | 1380 | 00 |
| | சீ.ஐ.சீ | 1535 | 00 | 1550 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 1415 | 00 | 1430 | 00 |
| எம்.ஒ.பி. (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 1180 | 00 | 1190 | 00 |
| | சீ.ஐ.சீ | 1350 | 00 | 1170 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 1365 | 00 | 1380 | 00 |
| வி - 1 (50கிலோ) | ஈ.ரீ.ஏ லங்கா | 1235 | 00 | 1250 | 00 |
| | சீ.ஐ.சீ | 1260 | 00 | 1275 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 1275 | 00 | 1290 | 00 |
| ரீ.டி.எம். (50கிலோ) | ஈ.ரீ.ஏ.லங்கா | 955 | 00 | 1055 | 00 |
| | சீ.ஐ.சீ | 975 | 00 | 1095 | 00 |
| | இலங்கை உரம் (லக்போற) | 955 | 00 | 970 | 00 |

# ஈராக் அதிகாரக் கையளிப்புக் குறித்த இரண்டாவது பிரேரணையிலும் மாற்றம்

## பாதுகாப்புச் சபை நாடுகள் கோரிக்கை

வாஷிங்ரன்,ஜூன்5

ஈராக் தொடர்பாக அமெரிக்கா கொண்டுவந்துள்ள இரண்டாவது நகல் பிரேரணையிலும் மாற்றங்கள் செய்யவேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஈராக்கின் ஆட்சி அதிகாரம் அந்நாட்டு மக்களிடம் மாற்றப்படுவதால், எதிர்வரும் 30ஆம் திகதி இடைக்கால அரசு பொறுப்பேற்கவுள்ளது. இதற்கு ஐ.நாவின் ஆதரவைப் பெற அமெரிக்காவும், பிரிட்டனும் முதலில் ஒரு நகல் பிரேரணையைத் தாக்கல் செய்தன. அந்தப் பிரேரணையில் ஈராக் இடைக்கால அரசுக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்கள் மற்றும் கூட்டணிப் படைகள் ஈராக்கில் எவ்வளவு நாள் நீடிக்கும் என்பது பற்றிய விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை எனப்பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகள் குற்றஞ்சாட்டின. இதையடுத்து, திருத்தப்பட்ட ஒரு பிரேரணையை அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்கல் செய்தன.

இந்நிலையில், இரண்டாவதாக தாக்கல் செய்யப்பட்ட பிரேரணையும் திருப்தி அளிப்பதாக இல்லை. அதில் மாற்றங்கள் செய்யவேண்டும் என பிரான்ஸ், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஈராக்கில் உள்ள கூட்டணிப் படைகளுக்கும், அந்நாட்டில் பொறுப்பேற்கவுள்ள இடைக்கால அரசுக்கும் இடையேயான தொடர்புகள் பற்றித் தீர்மானத்தில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். ஈராக்கின் பொலீஸ் மற்றும் இராணுவத்தின்மீது இடைக்கால அரசு முழுக்கட்டுப்பாடு கொண்டிருக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் தீர்மானத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என்று அந்த நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இருப்பினும், இந்தக் கோரிக்கையை அமெரிக்காவும், பிரிட்டனும் ஏற்றுக்கொண்டு, தீர்மானத்தில் மாற்றங்களைக் கொண்டுவருமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. ஆனாலும், இந்த இரண்டாவது நகல் பிரேரணை உறுப்பினர் நாடுகளால் நிராகரிக்கப்பட வாய்ப்பு இல்லை என மாற்றங்கள் கோரிய நாடுகளின் தூதர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் - அமெரிக்கப் படைகளை வெளியேறும்படி கூறுவதற்கான அதிகாரம் ஈராக்கில் பொறுப்பேற்கவுள்ள இடைக்கால அரசுக்கு வழங்கப்படாது. கூட்டணிப் படைகள் அந்த அரசுடன் ஒரு பங்குதாரராக இணைந்து செயல்படும் - என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

அமெரிக்கா தொடர்பான ரகசியங்களை அகமது சலாபி வெளியிட்டாரா என்பது குறித்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

சதாம் ஹுசைன் ஆட்சிக்காலத்தில் ஈராக்கில் இருந்து வெளியேற்றப்பட்டு பின்னர் நாடு திரும்பியவர் அகமது சலாபி. இவர் ஈரான் உளவு நிறுவனத்தின் தகவல் தொடர்புகளை அமெரிக்கா கண்காணித்து வருவதாகச் செய்தி வெளியிட்டார். பக்தாத்தில் அவர் இந்தத் தகவலை தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. அமெரிக்கா இரகசியமாகச் செய்து வந்த இந்த விடயங்கள் எப்படி சலாபிக்கு தெரிந்தன என்பது குறித்து அந்நாட்டின் புலனாய்வு நிறுவனமான சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

அதேபோல், அமெரிக்காவின் மற்றொரு புலனாய்வு நிறுவனமான எப்.பி.ஐயும் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தகவல்கள் எப்படி ஈரானிற்கு தெரியவந்தன என்று மற்றொரு கோணத்தில் விசாரணை நடத்திவருகின்றது. இது தொடர்பாக சலாபியிடமும் விசாரணை நடத்தப்படலாம் எனக் கூறப்படுகிறது. (க)

# வெள்ளிக் கிரகத்தை வெறும் கண்களால் பார்க்காதீர்; விஞ்ஞானிகள் எச்சரிக்கை!

சூரிய வட்டப்பாதையில் சுற்றி வரும் வெள்ளிக்கிரகத்தை வெறும் கண்களால் பார்க்கக்கூடாது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

சூரியக் குடும்பத்தில் உள்ள கோளகள் சூரியனைச் சுற்றிவரும் காட்சியை பூமியிலிருந்தபடி பார்க்கக் கூடிய வாய்ப்புக் கிடைப்பது மிகவும் அபூர்வம். சில நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை சூரிய வட்டப்பாதையைச் சுக்கிரன் (வெள்ளி) கடந்து செல்லும் காட்சியை பூமியிலிருந்து பார்க்க முடியும். எதிர்வரும் 8ஆம் திகதி சூரியவட்டப் பாதையை வெள்ளி கடந்து செல்கிறது.

இந்தக் காட்சியை சூரியனில் ஒரு புள்ளி வடிவத்தில்தான் காண முடியும். இருப்பினும் இந்தக் காட்சியை வெறும் கண்ணால் பார்க்கக்கூடாது என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். அப்படிப் பார்த்தால் கண் குருடாகும் வாய்ப்பு உள்ளது என ஆராய்ச்சியாளாகள் தெரிவிக்கின்றனர். தொலைநோக்கி மூலமாகவும் உரிய பாதுகாப்பு இல்லாமலும் பார்க்கக் கூடாது என விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர். வெள்ளியினுடைய விம்பத்தை திரையில் விழச்செய்து பார்ப்பது தான் பாதுகாப்பானது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

122ஆண்டுகளுக்குப் பின் இந்த அபூர்வக் காட்சி கிடைப்பதால் இதை படம் எடுக்க மேலை நாட்டு விஞ்ஞானிகள் எல்லா ஏற்பாடுகளும் செய்துள்ளனர். இந்த முறை வெள்ளியைப் பார்க்கத் தவறினால் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6ஆம் திகதிதான் மீண்டும் இக் காட்சியைப் பார்க்க முடியும். (க-4)

# இஸ்ரேல் பிரதமரைச் சந்திக்கத் தயார்! பலஸ்தீன தலைவர் அரபாத் அறிவிப்பு!

ஜெருசலேம்,ஜூன்5

மத்திய கிழக்கின் சமாதானப் பேச்சுக்காக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் தொலைக்காட்சிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் அளித்த சிறப்புப் பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

சமாதானத்துக்கான விருப்பம் ஷெரோனுக்கு இருந்தால் சந்திப்புக்கு எதுவும் தடையாக இருக்காது என்றும்-

"சமாதானப் பேச்சுக்காக புதிய பக்கத்தை உருவாக்க வேண்டிய அவசியமில்லை . ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தில் பேச்சைத் தொடங்கலாம்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - பலஸ்தீன இடைக்கால அமைதி ஒப்பந்தம் 1993 இல் ஏற்பட்டது. ஆனால் அதற்கான செயல்முறை 2000 ஆண்டில் தடைப்பட்டு போனதை அடுத்து இரு தரப்பிலும் வன்முறை தலைதூக்கியது. (க).

### பொலீஸ் சுட்டு பாகிஸ்தானில் ஒருவர் பலி!

இஸ்லாமாபாத்,ஜூன்5

பாகிஸ்தானின் வடக்கு நகரான கில் கிட்டுக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியிலுள்ள நாட்டின் வடக்குபுற நகர்களிலும் உடனடியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பகுதிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

சுனி இன முஸ்லிம்களே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் நகருக்குள் நுழைய முயன்றதையடுத்து அவர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் மோதல ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் வசம் துப்பாக்கிகள் இருந்தன என்றும் கூறப்படுகின்றது. அவர்கள் சுட்டதில் காயமடைந்தனர் என்று கூறப்படும் பொலீஸார் இருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### இந்திய - அமெரிக்க உறவு குறித்து ஆய்வு

வாஷிங்ரன்,ஜூன்5

இந்தியா - அமெரிக்கா இடையிலான இரு தரப்பு உறவு குறித்து வாஷிங்ரனில் கடந்த புதன்கிழமை ஆய்வு நடத்தப்பட்டது. இந்திய அமெரிக்க கொள்கை வகுப்புத் தினமான கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கருத்துக் கணிப்பாளர்கள், நிர்வாகிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தியாவில் புதிய அரசு அமைந்துள்ளது. ஆண்டின் முடிவில் அமெரிக்காவிலும் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில், இரு தரப்பு உறவுகள் குறித்தும் ஆராய்ச்சி நடத்தப்படுவது முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்திய - அமெரிக்க அரசியல் நடவடிக்கைக் குழுவின் நிர்வாக இயக்குநர் சஞ்சய்புரி, இந்தியத் தூதரகத்தைச் சேர்ந்த அஷோக் சஜ்ஜன்ஹர் மற்றும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### உலக அரங்கில்

# கொன்றார், சமைத்தார், தின்றார்

காத்மண்டு,ஜூன்5

கணவரைக் கொன்று துண்டு போட்டு, இறைச்சி சமைப்பதுபோல அதைத்தின்றார் அவரது மனைவி.

தென்கிழக்கு நேபாளத்தின் மொராங் மாவட்டம் மிருகலியா கிராமத்தில் இச்சம்பவம் நடந்துள்ளது.

கோபி கிருஷ்ணா (வயது 48) என்பவர் நேபாள அரச உணவு நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தவர். இவரது மனைவி இந்திரா.

3 நாள்களாகத் தமது பெற்றோரைக் காணவில்லை என்றும் வீட்டில் துர்நாற்றம் வீசுவதாகவும் அவர்களது மூன்று மகன்களும், மகளும் புகார் செய்தனர். அதையடுத்து பொலஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோதனையிட்டனர்.

வீட்டின் உட்புறமாகத் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு அறைக்குள் இருந்தார் இந்திரா. கதவை உடைத்து உள்ளே சென்றனர் பொலீஸார்.

பிரஷர் குக்கருக்குள் கோபி கிருஷ்ணாவின் தலை வெந்தபடி இருப்பது தெரியவந்தது. பொலீஸார் இந்திராவிடம் விசாரித்தனர். கணவரைக்கொன்று துண்டு துண்டாக வெட்டி சமைத்துத்தின்றதாக கூறினார்.

மே 25 ஆம் திகதி கணவர் தூக்கத்தில் இருந்தபோது இந்திரா அவரைக் கொன்று உடலத்தை அறைக்குள் மறைத்துவிட்டார். பின்னர் உடலத்தை வெட்டி சமைத்துத்தின்றுள்ளார் அவர்.

கணவனின் கொடுமைகளால் மன அழுத்தத்துக்கு உள்ளான நிலையிலேயே இந்திரா இவ்வாறு நடந்து கொண்டார் என்று விசாரணை நடத்திய பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஓ)

# சாள்ஸ் – கமீலா திருமணத்துக்கு லண்டன் ஆர்பீஷப் ஆதரவு!

லண்டன்,ஜூன்5

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸின் நீண்டநாள் காதலி கமீலாவைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று பிரிட்டன் ஆர்பிஷப் டாக்டர் ரோவன் வில்லியம்ஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் 1971 இல் கமீலா என்பவரைச் சந்தித்தார். இவர்களது சந்திப்பு காதலில முடிந்தது. அதன் பின்னர் டயானாவைக் காதலித்து சாள்ஸ் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரு மகன்கள் பிறந்தனர்.

இதற்கிடையே-

மீண்டும் கமீலாவுடன் சாள்ஸ் நெருங்கிப் பழகிவந்தார். 1994 இல் தொலைக்காட்சிப் பேட்டியில் இதை சாள்ஸ் ஒப்புக்கொண்டார். இது சாள்ஸ் - டயானா தம்பதிகள் பிரிவுக்குக் காரணமாக அமைந்தது. 1996 இல் இவர்கள் விவாகரத்துப் பெற்றனர்.

காதலருடன் டயானா காரில் சென்றுகொண்டிருந்தபோது விபத்தில பலியானார். இந்நிலையில் சாள்ஸ் 1995 இல் விவாகரத்துப்பெற்ற கமீலாவும் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தனர்.

இதற்குப் பிரிட்டன் ஆர்பிஷப் டாக்டர் ரோவன் வில்லியம்ஸ் எதிர்ப்புத் தெரிவித்தார். தற்போது இவர் தனது முடிவை மாற்றிக் கொண்டுள்ளார்.

விவாகரத்துப் பெற்ற சாள்ஸ், கமீலா இருவரும் சர்ச்சில் வைத்து திருமணம் செய்துகொள்ளலாம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். (க-4)

# கப்பல் பயணிகளுக்கு மர்ம வைரஸ் நோய்

கப்பலில் சுற்றுலா சென்ற பயணிகளில் சுமார் 350 பேர் மர்ம வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கனடா நாட்டிலிருந்து 'பிரின்சஸ்' என்ற கப்பலில் சுமார் 3ஆயிரம் பேர் சுற்றுலா சென்றனர். தென்கிழக்கு அலாஸ்கா அருகே வரும்போது 308 பயணிகளும் 40 கப்பல் சிப்பந்திகளும் ஒருவித வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டனர்.

முதலில் அவர்களுக்கு வயிற்று வலி உண்டாகி பின்னர் வாந்திபேதி ஏற்பட்டது. இவ்வாறு 48 மணி நேரம் வரை இந்த வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தனி அறையில் வைக்கப்பட்டுள்ளனர். உணவு மற்றும் குடி தண்ணீர் மூலமாகவும், நோய் பாதிக்கப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களுக்கும் இந்த வைரஸ் நோய் பரவியது. இந்நோய் குறித்து அட்லாண்டாவில் உள்ள நோய் ஆராய்ச்சி மையம் சோதனை மேற்கொண்டு வருகிறது. (4)

# ஈராக்கில் கடத்தப்பட்ட இத்தாலியர்கள் உயிருடன்

## வீடியோநாடா ஒளிபரப்பு

ஈராக்கில் கடத்தப்பட்ட இத்தாலியர் கள் உயிருடன் இருப்பதைக் காட்டும் வீடியோ நாடாவை அரேபியத் தொலைக்காட்சி அல் - ஜஸீரா கடந்த புதன்கிழமை ஒளிபரப்பியது.

கடந்த ஏப்ரல் 12 ஆம் திகதி ஈராக்கில் தனியார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 4 இத்தாலியர்கள் கடத்தப்பட்டனர். அவர்களில் பேப்ஜியே குவாத் ரோச்சி என்பவர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். அவர் தூக்கிலிடப்படுவதைக் காட்டும் வீடியோவையும் அல் - ஜசீரா ஒளிபரப்பியது. ஆனால், எஞ்சிய 3 பேரின் நிலைமை குறித்து தகவல் தெரியாமல் இருந்தது.

புதன்கிழமை ஒளிபரப்பிய வீடியோ நாடாவில் எஞ்சிய மூன்று பேரும் நாற்காலியில் அமர்ந்து சாப்பிடுவதும், தாடி வளர்த்து சோகமே உருவாக இருப்பதும் தெரிந்தது.

இவர்கள் மூவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அதற்கான பேச்சுவார்த்தையை கடத்தல் காரர்களிடம் இத்தாலிய அரசு நடத்திவருவதாகவும் கூறப்படுகிறது. (க-4)

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடலை வந்தடையும் பிளாஸ்டிக் கழிவுகளால் சுமார் ஒரு மில்லியன் கடற்பறவைகளும் ஒரு லட்சம் கடற்பாலூட்டி விலங்குகளும் எண்ணுக்கணக்கில்லாத மீன்களும் ஆண்டுதோறும் பலியாகி வருகின்றன.

# முதியோரை மதிக்கின்ற பண்பு இளைய தலைமுறையிடம் மிகஅரிது

## விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணா உரை

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்ப்பாண சமூகத்தில் முதியோர்களை மதிக்கின்ற அவர்களது அறிவுரைகளைக் கேட்கின்ற பண்பு இளைய தலைமுறையினரிடம் அருகி வருகிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணா.

யாழ்.அகவொளி குடும்பவள நிலையத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற "யாழ்ப்பாண சமூகமும் முதுமையும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பங்குகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அறிவியலால் வெல்லப்படாத இயற்கை நியதிகளுள் முதுமையும் ஒன்று. இறப்புக்கு முன்பாக அமையக்கூடியது முதுமை. அத்துடன் பன்முக நிலையில் அணுகத்தக்கது முதுமை.

உடலியல், உளவியல், மெய்யியல,சமுதாய, பண்பாட்டு ரீதியில் என வெவ்வேறான விளக்கங்கள் முதுமைக்கு அளிக்கப்படுகின்றன.

முதுமையை ஓர் அழகியலாகக் கூட அனுபவித்த சமூகம் எங்கள் சமூகம்.

முதுமையின் இயல்புகளாக மாதவிடாய் நிற்றல், பாலியல் உநதுதலில் பிரச்சினை, மூன்றாவது பால்நிலை நரை, திரை, மூப்பு, பார்வை, கேட்டல், தசை, எலும்புத்தொகுதி மாற்றம், தோல்பாதிப்புக்கள் என்பன காணப்படுகின்றன.

முதுமையை உளரீதியான மாற்றங்கள், சமூகப்பெறுமான மாற்றங்கள், சிந்தனை எண்ணப்பாட்டு மாற்றங்கள் எனப் பிரித்து நோக்கலாம்.

முதுமை தொடர்பான ஆய்வுகள் 1930களில் முனைப்புப்பெற்றது. 2 ஆம் உலகப்போர், கைத்தொழில் மயமாதல், நகரமயமாதல் போன்றவை தந்த விளைவுகள் சமூகவியலாளர், மானிடவியலாளர்களினால் முதுமை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

முதுமை ஒரு பிரச்சினையா என்று நோக்கும்போது குழந்தைப்பருவம், இளமைப்பருவம் பிரச்சினையாக இருக்கவேண்டும். குழந்தை, இளமைப் பருவங்கள் பிரச்சினை இன்றி இருக்கும்போது முதுமை மட்டும் எப்படி பிரச்சினையாக இருக்க முடியும்.

1950ஆம், 1960ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்த முதுமை தொடர்பான கருத்தியல் இன்று பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது.

எமது பிரதேசத்தில் நீண்ட காலமாக நிகழ்ந்து வந்த போர்ச்சூழலை முதன்மைப்படுத்தியே இந்த மாற்றங்களை ஆய்வாளர்கள் விளக்குகின்றனர்.

எனினும், போர் சம்பந்தப்படாத சமூகபண்பாட்டுப் பரவுகை வழிவநத மாற்றங்களும் முதுமை தொடர்பான கருத்தியல்களில் பல்வேறுவிதமான மாற்றங்களை உண்டுபண்ணின.

ஒருபுறம் சமூகமாற்ற விளைவுகள், மறுபுறம் முதுமை தொடர்பான கருததியல் மாற்றங்கள். இவை இரணடும் பாரிய இடைவெளிகளுக்கு அப்பால் உள்ள இரண்டு எல்லைப்புள்ளிகளாகி வந்துள்ளதாலேயே முதுமையடைதல் ஒரு பிரச்சினையாக உணரப்படும் நிலைமை ஏற்பட்டது என்று தெரிவித்தார். (4-12)

# தமிழ் ~ முஸ்லிம் கலைஞர் விவரங்களை ஊடகத்துறை அமைச்சுக் கோருகிறது

## பெயரேடு தயாரிக்க வசதியாக

நாடு முழுவதும் உள்ள தமிழ் முஸ்லிம் கலைஞர்களின் விவரங்கள் அடங்கிய பெயரேடு ஒன்றை தகவல ஊடகத்துறை அமைச்சு தயாரிக்கவிருக்கின்றது.

இந்த ஏட்டைத் தயாரிப்பதற்காக விவரங்களை அனுப்புமாறு அந்த அமைச்சின் செயலாளர் கலைஞர்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இயல், இசை, நாடகம் போன்ற துறைகளிலும் அச்சு இலத்திரனியல் ஊடகத்துறைகளிலும் இலங்கை தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் காத்திரமான பங்களிப்புக்களைச் செய்து வநதுள்ளனர். தொடர்ந்துவந்த காலங்களில் நமது தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் கலைத்துறைக்கு ஆற்றிய சேவைகளும், தொண்டுகளும் மதிக்கப்படாமல் காலஓட்டத்தினுள் அமிழ்ந்து அவை பற்றிய ஒரு தெளிவின்மை தொடர்ந்து வருவதினை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்நிலை தொடருமானால் நமது இருப்புக்களுக்குச் சவாலான உத்தரவாதமற்ற சமூகங்களாக இலங்கைத் தமிழ்மொழிச் சமூகங்கள் மாறிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

எனவே, இன்று எம்மிடையே வாழ்ந்துவரும் தமிழ், முஸ்லிம் கலைஞர்களையும் அவர்கள் கலைத்துறைக்கு ஆற்றிவருகின்ற பங்களிப்புக்களையும் அறிந்துகொள்வதற்கும் இன்னோரன்ன இதரதேவைகளுக்காகவும் மேற்படி அகில இலங்கைத் தமிழ், முஸ்லிம் கலைஞர் பெயரேட்டின் அவசியம் காலத்தின் மிக முக்கிய தேவையாக உணரப்படுகின்றது.

தகவல் ஊடகத்துறை அமைச்சின் அனுசரணையுடன் தொகுக்கப்பட இருக்கின்ற மேற்படி கலைஞர் பெயரேட்டில் இடம்பெறுவதற்காக இலங்கையின் சகல பாகங்களிலும் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் தத்தமது புகைப்படத்துடன் பெயர், விலாசம், தாம் கலைத்துறைக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய விவரங்களைத் தமது மாவட்டச் செயலகத் தகவல் ஊடகத்துறை அமைச்சின் அதிகாரியினால் உறுதி செயது தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அகில இலங்கைத் தமிழ், முஸ்லிம் கலைஞர் பெயரேடு" எனக் குறிப்பிட்டு "செயலாளர், தகவல், ஊடகத்துறை பிரதியமைச்சர், தகவல், ஊடகத்துறை அமைச்சு, 18 ஆவதுமாடி, மேற்குக் கோபுரம், உலகவர்த்தக நிலையம், கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வேண்டப்படுகின்றனர் - எனறுள்ளது. (-3)

# நூல் வரிசை



நூல்: **முடிவு அவள் கையில்**

ஆசிரியர்: பொன்னரசி கோபாலரத்தினம்

வெளியீடு: முத்தமிழ் வெளியீட்டு மன்றம்

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழரில் ஆக்கத்திறன் படைத்த பலரும் தம் உணர்ச்சி அனுபவங்களினைக் கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை என்ற பல வடிவங்களிலே வெளியிட்டுப் 'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' என்னும் புதியதொரு வகைமையினை அறிமுகஞ் செய்து அதற்கு ஒரு காத்திரத்தன்மையும், வழங்கிவருகின்றனர்.

இவ்வகையில் திருமதி பொன்னரசி கோபாலரத்தினம் 'கர்ச்சிக்க முடியாத சிங்கம்' (நோர்வேச் சிறுவரிடையே வழங்கிவரும் கதைகளைத் தமிழாக்கிய) பாலர் கதைத்தொகுதி ஒன்றினை முன்பு வெளியிட்டார். இன்று அவரது இரண்டாவது நூல 'முடிவு அவள் கையில்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது. இது அவரின் 19 சிறுகதைகளின் தொகுதி. 1990 தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரை நோர்வே நாட்டின் மோலோய் என்னும் இடத்திலுள்ள தமிழர் சங்க வெளியீடான 'எமது சஞ்சிகை' (காலாண்டுச் சஞ்சிகை)யில் இவை வெளியிடப்பட்டன.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்துகொண்டு அந்நாடுகளிலே தாங்கள் பெறும் அவலங்களையும், அனுபவங்களையும் அந்த அனுபவங்களோடு இணைந்து தம்மைப் பாதிப்புக்குள்ளாக்கும் தங்களின் தாய்நாட்டு உறவுகளையும் கருக்களாகக்கொண்டு ஏக்கம், சோகம், உருக்கம், ஏமாற்றம், வெறுமை இவற்றினிடையே ஆசை அருமையாகக் கிடைக்கும் இனிமையான அனுபவங்கள் என்பவற்றைச் சித்திரிக்கும் கலைஞர் சிலரின் வரிசையிலே திருமதி பொன்னரசி கோபாலரத்தினமும் குறிப்பிடத்தக்க இடத்தினை வகித்து வருகின்றார் என்பதற்கு 'முடிவு அவள் கையில்' என்ற சிறுக்கதைத் தொகுதி நல்ல எடுத்துக்காட்டு.

அ.முத்துலிங்கம், சித்தார்தகே குவேரா, நட்சத்திரன் செவ்விந்தியன், ஸ்ரீதரன், முதலாம் படைப்பாளர்கள் தமது படைப்புக்களில் ஏற்படுத்தியுள்ள சாதனை, புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் கொடுமுடிகளாக விளங்குவதுபோன்ற மகத்தான படைப்புக்கள் திருமதி பொன்னரசியின் சிறுகதைகளும் என்று சொல்வது பொன்னரசிக்கு விமர்சகன் செய்யக்கூடிய தீமையும், அவா வளர்ச்சிப்பாதையின் குறுக்கே இடப்படும் தடையும் என்ற உணர்வோடுதான் இவரின் கதைகளை அணுகவேண்டியுள்ளது.

ஆனால், அவர்களின் இலக்கிய சாகசங்கள், உத்திகள், நுணுக்கங்கள், குறிப்புப்பொருள் உணர்த்தும் திறன்களுக்கு அப்பாலான ஒன்று பொன்னரசியின் சிறுகதைகளில் சுட்டிப்பான கவனத்திற்கு உள்ளாகின்றது.

அது என்ன?

பொன்னரசியின் சமூகப்பொறுப்பு வாய்ந்த உண்மையை உண்மையாக எவ்வித அலங்காரமும் இன்றி எடுத்துரைக்க முற்படுகின்ற நல்லுள்ள வெளிப்பாடுதான் அது.


தாம் கண்டவற்றை, உணர்ந்தவற்றை உணர்த்தவேண்டும் என்று தாம் சத்தியபூர்வமாக நம்புவனவற்றைச் சிறுபிள்ளைகளுக்குச் சொல்வது போல எளிமையும் யதார்த்தமும் அமையக் கூறியிருப்பதே பொன்னரசியின் வெற்றியென்று கூறலாம்.

எதிர்காலத்தில் பொன்னரசியின் படைப்புக்கள் பட்டைதீட்டிய வைரங்களால் ஒளிர்வதற்குக் கால்கோளாக அமைந்த இச்சிறு கதைகளைக் படிப்பதன் மூலம் புலம்பெயர விழைவோருக்கான எச்சரிக்கைகளை அவர்கள் பெறுவதாகிய நற்பயனும் கிட்டும் என்பது உறுதி.

ஓவியர் 'ரமணி'யின் எழிலார்ந்த சித்திரங்களும் அட்டைப்படமும் நூலின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

**- சோனா -**

✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻




நூல்: **தூண்டி - காலாண்டிதழ்**

ஆசிரியர்: செல்வமனோகரன்

ஈழத்தின் இதழியல் வரலாற்றில் வெளியிடப்பட்ட இதழ்களின் எண்ணிக்கை பலவேயாயினும் அவற்றின் ஆயுட்காலம் என்பது குறைவாக இருக்கின்றன. யாழ்ப்பாண இடப்பெயர்வின் பின் வெளிவந்த முதற் சஞ்சிகை தூண்டி. இக்கட்டான அந்தச்சூழ்நிலை காரணமாக முன்னெடுப்பு முயற்சிகளின் மத்தியிலும் 6 இதழ்களோடு தடைப்பட்டது. தற்போது இச்சஞ்சிகை மீளக்கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

புதுப்பொலிவுடன் வெளிவந்துள்ள தூண்டிஇதழ் பல்வேறு பல்சுவை அம்சங்களைத் தாங்கிவந்துள்ளது. சமூகம், கலை, இலக்கியத்தை மையப்படுத்தியே உள்ளடக்கம் அமைந்துள்ளது.

'சட்டநாதன்' உடனான நேர்காணலில் அவரது முழு ஆளுமையும் வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன், வளர்ச்சிப் படிநிலையையும், பின்னணியினையும் அறியக கூடியதாக உள்ளது.

அஸ்வகோஷ் சு.விஸ்வரத்தினம், பா.அகிலன் போன்றோரது புதுக்கவிதைகள் பல்வேறுபட்ட குறியீடுகளைக் கொண்டு சமூகத்தைப் பார்க்கும் முயற்சி உன்னதமானது.


நந்தினி சேவியரதும், திசெரா, அசோக ஹந்தகம போன்றோரதும் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளது.

"உள்வெளி" என்ற அ.யேசுராசாவின் எழுத்துவண்ணம் "திரை" போட்டுச்செல்கிறது. பல்வேறுபட்ட மொழித் திரைப்படங்களையும் அறிமுகப்படுத்தி நல்ல கலைப்படைப்புக்களை அறிமுகப்படுத்த எத்தனிக்கின்றார்.

பா.இரகுவரனின் "மருத்துவிச்சியும் அந்தக்கால பிரசவங்களும்" என்ற பகுதி அன்றைய காலங்களிலே வீடுகளிலே நடந்த பிரசவங்களையும், அதோடு ஒட்டிப்போன எமது பண்பாட்டினை விரசமூட்டும் உணர்வைத்தராது அப்படியே தெளிவுபடுத்த எடுத்த முயற்சி போற்றுதற்குரியது. கே.ரி.கணேசலிங்கம் ஆர்.ஜெயந்தினியினதும் கலாநிதி பரமு.புஷ்பரட்ணம் ஆகியோரின் கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

மற்றும் பல நூல் விமர்சனங்களையும், நூல் அறிமுகங்களையும் கொண்டு காலாண்டிதழாக தூண்டி நன்றே துளிர்விட்டுள்ளது.

**- லோ.துஷிகரன்**




நூல்: A Hand Book to all Computer Users
A Hand Book on Administration and Communication

தடையின்றி இயந்திரமாய் ஓடும் இந்த அவசர உலகில் கைகோர்த்து உலாவரும் ஒரே நண்பன் கணனி என்றால் மிகையாகாது......

தகவல் தொழில்நுட்பக் கல்வி பயிற்சிகளில் முதன்மை இடம் பெறும் இந்தக் கணனித்துறையை இன்றைய இளைய தலைமுறை தலைசாய்ந்து ஏற்றுக்கொண்டபோதும்... அது எம்மில்...வளர்ந்துவரும் இலங்கை போன்ற நாடுகளில் முழுமையாய் உள்வாங்கிக் கொண்டதாக யாரும் ஒப்புக்கொண்டதில்லை.

கட்டாய கல்வியாய் அத்தியாவசிய தேவையாய் கணனித்துறை வந்தபிறகு வீணாய் பணத்தை விரயம்செய்து முழுமையற்ற அறிவைப்பெறுவதே வாடிக்கையாய் ஆகிவிட்டது.

ஏன், ஒரு சிறந்த நூலின் துணையுடன் கூட சிக்கனமாய் நமக்குத் தேவையான கணனி அறிவையும் அதன் ஊடாக ஆங்கில அறிவையும் விருத்தி செய்யக்கூடாது.?

எழுத்தாளர் திரு.ஏ.எஸ்.உதயசங்கர் 18 வருட கணனி முகாமைத்துவ அனுபவமும் அரச தனியார்சார்ந்த கணனியில் கைதேர்ந்த வல்லுநர்களுடனும் தொழில்நுட்ப வடிவமைப்பாளர்களுடனும் பணியாற்றிய பெருமையுடையவர். அவர் நமக்கு அளித்துள்ள கொடை சகல கணனிப்பாவனையாளர்களுக்குமான ஒரு கைநூல் **A Hand Book on Administration and Communication** (நிர்வாகம் மற்றும் தொடர்பாடல் பற்றிய ஒரு கைநூல்).

இவ்விரு நூல்களும் இன்று இலங்கைபூராகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. யாழ். பரியோவான் கல்லூரியில் கல்விகற்ற அவர் 1000இற்கு மேற்பட்ட ஊழியர்கள், மாணவர்கள், கணனிப் பாவனையாளர்களைப் பயிற்றுவித்து இன்று இலங்கைபூராக மட்டுமன்றி வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ள பெருமை திரு.உதயசங்கரைச் சாரும.

அவரது முதல்வெளியீடான **A Hand Book to all Computer users** என்ற நூல்.

மாணவர்கள், ஆசிரியர்கள், சகல உத்தியோகஸ்த தரப்பினர்களுக்கும் ஏற்ற வகையில் இல்கு ஆங்கிலத்தில் மிக அருமையாக விளக்கஉரையுடன் எழுதப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல கணனி பற்றி அறிந்துகொள்வதுடன், மிக இலகுவாக ஆங்கில அறிவையும் விருத்தி செய்யவும் இந்நூல் துணைபுரிகிறது.

**A Hand Book on Abministration and Communication** என்ற அவரின் இரண்டாவது நூல்.

மேல்மட்ட முகாமை அதிகாரிகளுக்கு ஏற்படும் நிர்வாகத்துறைக் குறைபாடுகளைக் குறைத்து பெரும் நன்மைகளைச் சுட்டிக்காட்டுவதுடன் -

நிறுவன உரிமையாளர்கள், இயக்குநர்கள், வெளிநாட்டு தொடர்பாளர்கள் மற்றும் மேல்மட்ட உத்தியோகத்தர்கள் முகாமைத்துவத்தை திறம்பட மேற்கொள்ள இந்நூல் துணை புரிவதுடன் தனது முகாமைத்துவ படிமுறைகளான திட்டமிடல், வழிநடத்தல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய முகாமைத் தத்துவங்களை முகாமை ஆலோசகர்களின் ஊடாக மேற்கொள்வதை இலகுபடுத்தித் தானாகவே முகாமை நடவடிக்கைகளில் ஈடுபட துணைபுரிகிறது.

**- வல்லவன**

✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻




நூல்: **பரராசசேகரம் - பாலரோக நிதானம்**

உரைஆசிரியர்: வைத்திய கலாநிதி **வல்லிபுரம் சிவப்பிரகாசம்**

பதிப்பாசிரியர்: ஆர்.சி.மோகன்

பதிப்பகம்: தாமரை நூலகம், சென்னை.

மருத்துவ நூலாராய்ச்சியிலும் நூற்பதிப்பிலும் முன்னோடியாகத் திகழ்ந்து இந்தியாவிலும் புகழ்பெற்றவர் ஏழாலை ஐ.பொன்னையபிள்ளை. 1928-35 காலப்பகுதியில் "பரராசசேகரம்" வரிசை நூல்களையும் செகராசசேகரம், பிற யாழ்ப்பாண மருத்துவ நூல்களையும், பதிப்பித்தார். இந்திய சுதேச மருத்துவக்கல்லூரிகளிலும் அந்த நூல்கள் உபயோகப்பட்டன. சென்ற தசாப்தத்தில் வெளிவந்த மருத்துவ நூலோதியிலும் (Bibliography) அவருடைய இருநூல்கள் இடம்பெற்றன.

இந்நூல் எவையும் வைத்திய மாணவருக்குக் கிடையாதநிலையில் ஈழத்து முதல் ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியான லங்கா சித்தஆயுள்வேத மருத்துவக்கல்லூரி 199.. இல் இருந்து பரராஜசேகரம் மூன்று பாகங்களை வெளியிட்டது.

இந்திய "ஹெல்த்" சஞ்சிகையிலும் அவை பற்றிய விமர்சனங்கள் வந்தன.

அவற்றின் சிறப்பையறிந்து பிரபல சித்தமருத்துவ வெளியீட்டகமான சென்னை தாமரை நூலகம், மேற்படி மருத்துவக்கல்லூரிக்கு எழுதி, இந்தநூல் வரிசையைத் தாங்கள் சென்னையில் பிரசுரிக்க அனுமதிகோரியது. மார்கழி 2003 இல் பாலரோக நிதானத்தைப் பிரசுரித்துள்ளது. காலஞ்சென்ற வைத்திய கலாநிதி வல்லிபுரம் சிவப்பிரகாசத்தின் அணிந்துரை அப்படியே தரப்பட்டுள்ளது.

அதன் பதிப்பாசிரியர் ஆர்.சி.மோகனின் பதிப்புரையில்,

"தங்களது கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கும் இந்தப்புத்தகம் ஈழத்துச் சித்தமருத்துவ நூல் ஈழமண்ணில் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் நமது தமிழ்ச்சகோதரர்கள் வழிவழியாகப் பயன்படுத்தி வந்த தமிழ்மருத்துவத்தையும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.......... பரராசசேகரன், செகராசசேகரன் எனும் இருஈழத்து மன்னர்கள் சித்தமருத்துவத்திலும் ஈடுபட்டு வந்ததாகத் தெரிகிறது.

இதரபாகங்களையும் விரைவில் வெளியிட அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்".

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியின் பவளவிழா கொண்டாடப்பட்ட அதே காலப்பகுதியில் இந்தநூல் சென்னையில் வெளிவந்தமை தமிழ் ஈழத்தவருக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

**- டாக்டர் எஸ்.பிரேமானந்தி**

**உதயன்**

## மாணவ சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பு

தமிழர் தாயகம் எங்கும் நாளை மாணவர் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அடக்குமுறைக்கு எதிராக இளம்வயதிலேயே கிளர்ந்தெழுந்து, எதிரியிடம் உயிருடன் சிக்கக்கூடாது என்ற உயர்ந்த கொள்கைக்காய் சயனைட்டிடம் தனது உயிரைக்காவு கொடுத்த முதல் போராளி தியாகி பொன். சிவகுமாரனின் 27 ஆவது நினைவுதினம் இன்றாகும்.

இன்றைய ஜூன் 5 ஆம் திகதி ஐ.நாவின் பிரகடனப்படி சர்வதேச ரீதியில் உலக சுற்றாடல் தினமாக அனுஷ்டிக்கப்படுவதால், தியாகி சிவகுமாரனின் நினைவு தினத்துக்கு அடுத்த நாளாகிய ஜூன் 6 ஆம்.திகதி மாணவர் எழுச்சி தினமாக தமிழ் சமூகத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டு, தமிழர் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

தமது இருப்புக்கும், வாழ்வியலுக்குமான உரிமைகளுக்காக சுமார் இரண்டரை தசாப்த காலம் அஹிமசை வழியில் - சாத்வீக நெறியில் - சத்தியசோதனை நடத்திய ஈழத் தமிழர்களின் விடுதலை வேட்கை, எழுபதுகளின் நடுப்பகுதியில் ஆயுதவழி என்ற புதிய புரட்சிப் பாதையை நோக்கித் திரும்பிய வரலாற்றுத் திருப்புமுனைக்காலத்தில் சமூகத்தின் மத்தியிலிருந்து சீறிப் புறப்பட்ட சக்தியின் குறியீடாக வெளிப்பட்டவர் தியாகி சிவகுமாரன்.

பேரினவாதத்தின் அடக்குமுறைக் கரங்கள் 1972இல் புதிய அரசமைப்பாகவும், உயர்கல்வித்துறையில் தரப்படுத்தல் என்ற கேடுகெட்ட வழிமுறையாகவும் வெளிப்படுத்தப்பட்டு நமது இனத்தின் மீது வலிந்து திணிக்கப்பட்டபோது, ஈழத் தமிழினத்தின் இளம் தலைமுறை இனியும் அடங்கிப்போவதில்லை என்ற வீச்சோடு சினந்து சீறிப்பாய்ந்து வெளிப்பட்டது.

அப்போது இளம் சமூகத்தின் - குறிப்பாக மாணவ சமுதாயத்தின் - எரிதணல் நெருப்பாகப் பீறிப்பாய்ந்த பெருஞ் சுவாலைகளுள் ஒன்றாக மிளிர்ந்தவர் தியாகி சிவகுமாரன்.

அடக்குமுறையின் சுற்றிவளைப்பில் அந்தச் சுவாலை அணைந்தது என்னவோ உண்மைதான். ஆனால், அன்று இலங்கைத் தீவில் அனுமன் இட்ட தீ போன்று அக்கால கட்டத்தில் தியாகி சிவகுமாரன் போன்ற தீச்சுவாலைகள் வைத்த நெருப்பு இன்று தமிழ் இனத்தின் தேசிய பேரெழுச்சியாக - அணையா நெருப்பாக - கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கின்றது.

தியாகி சிவகுமாரன் மாணவனாக இருந்த காலத்திலேயே மண்பற்றும், இனப்பற்றும், தமிழ்மொழிப் பற்றும் அவனது இதயத்தில் நீங்கா இடங்கொண்டிருந்தன. பாடசாலை மாணவப் பருவத்தைக் கடந்து இரண்டாம் நிலைக் கல்விக்கான மாணவப் பருவத்திலே அவன் தனது சமூக, சமுதாயக் கடமையுணர்ந்து, தன்னலம் துறந்து, விடுதலைப் போராளியானான். தன் இனத்துக்காக உயிர்துறந்த அவனின் நினைவு நாளையொட்டி தமிழ்ச் சமுதாயம் மாணவர் எழுச்சித் தினத்தை அனுஷ்டிப்பது மிகப்பொருத்தமானதே.

ஒரு தேசத்தின் மாபெரும் சொத்தாகத் திகழ்பவர்கள் மாணவர்கள். நாளைய சமூகத்தைச் செதுக்கப் போகும் சிற்பிகள் அவர்களே. வெறும் புத்தகப் பூச்சிகளாக பட்டத்தையும், ஊதியத்தையும், உழைப்பையும் இலக்காகக் கொண்டு அவற்றைத் தேடி அலையும் பட்டாம்பூச்சிகளாகவும், பத்தாம்பசலிகளாகவும் அவர்கள் வளர்க்கப்படக்கூடாது. இன, மொழி, தேச, தேசியப்பற்று மிக்கவர்களாகவும், சமுதாயத்துக்கு வலிமைசேர்த்து உயிர்ப்பூட்டுபவர்களாகவும் அவர்கள் மிளிரவழி செய்யப்பட வேண்டும்.

அதற்கான ஆக்கபூர்வமான திட்டங்களையும் வழிகாட்டு நெறிகளையும் வகுப்பதற்கு சமுதாயத்தை ஆற்றுப்படுத்தும் நாளாக இந்த மாணவர் எழுச்சி தினம் அமைய வேண்டும்.

ஏனைய பிரதேச, இன, தேச மாணவர்களோடு ஒப்பிடும்போது இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாணவர்கள் வேறுபட்ட சூழலில், வித்தியாசமான நெருககடிக்கு மத்தியில், அடிப்படை வசதி வாய்ப்புக்கள் கூட இல்லாத நிலையில் தங்களது மாணவப் பருவச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

ஒருபுறம் தாயகத்துக்கான அர்ப்பணிப்புக் கடமை, மறுபுறம் கல்வி கற்பதற்கான உரிமையும், கட்டாயமும், பொறுப்பும். இவற்றுக்கு நடுவே அவர்களை சரியான திசையில் வழப்படுத்த வேண்டிய பொறுப்பு சமுகத் தலைவர்கள் -சமுதாய வழிகாட்டிகள் - மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

அடக்கு முறைகளுக்கும், அத்தியாவசிய - அடிப்படைத தேவைகளின் மறுப்புக்கும் மத்தியில் இந்த மாணவ சமுதாயத்தை பக்குவமாக வழிநடத்தி, நாளைய விடியலுக்காய் அவர்களைத் தயார்செய்வது என்பது மிகவும் பொறுப்பான பணி; கஷ்டமான காரியம்.

அடக்கு முறைகளை உடைத்தெறிந்து, சிறகுகளை விரித்துச் சுதந்திரமாகப் பறக்கத் துடிக்கும் ஆவலில் கிளர்ந்து நிற்கின்ற இந்த மாணவப் பறவைக் கூட்டத்தை சரியான திசையில் வழிநடத்த சமுகம் தயாராக இருக்கின்றதா? நாளைய மாணவ எழுச்சி நாளையொட்டி சமூகம் தன்னைத்தானே பார்த்து எழுப்பி, பதில் காணவேண்டிய கேள்வி இது.

குடாநாட்டு வர்த்தக நிலையங்களில்

# நிதித்துறையினர் திடீர்ச் சோதனை காலாவதியான பொருள்கள் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜூன்5

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் கடந்த சில நாள்களாக மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது காலாவதியான உணவுப் பொருள்கள் பல கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. யாழ்நகரப்பகுதி, திருநெல்வேலி, கல்வியங்காடு, தென்மராட்சி உட்பட பல பகுதிகளில் இந்தத் திடீர் சோதனை நடத்தப் பட்டது. இதன்போது குழந்தைகளுக்கான லக்ரோஜன் பால்மா பக்கற்றுக்கள், கேக், பேக்கிங் பவுடர், ஜாம்போத்தல்கள், கோடியலகள், நூடில்ஸ், பிஸ்கட் வகைகள், சொக்லேட் வகைகள், இனிப்பு வகைகள், உட்படப் பல்வேறு வகையான உணவுப் பொருள்கள் காலாவதியான நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். குடாநாட்டின் வர்த்தக நிலையங்களில் மக்களின் நலத்திற்கு கேடுவிளைவிக்கக் கூடிய உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவது அவதானிக்கப் பட்டிருப்பதாகவும் இதனையடுத்தே, விடுதலைப் புலிகளின் நிதித் துறையின் விலைக் கட்டுப்பாட்டுப்பகுதியினர் பொருள்களின் விலை மற்றும் அவற்றின் தரம் என்பவற்றை பரிசோதித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

திடீர் சோதனைகளின்போது கண்டுபிடிக்கப்படும் காலாவதியான உணவுப்பொருள்கள் உடனடியாக சம்பந்தப்பட்டவர்களின் வர்த்தக நிலைய உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்படவுள்ளதாக நிதித்துறையினர் தெரிவித்தனர். (4-12)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஏற்புத்தடை ஊசிமருந்து இல்லை

மருந்துகட்டும் துணிக்கும் தட்டுப்பாடு

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் ஏற்புத் தடைக்கான ஊசிமருந்து முடிவடைந்துள்ளதுடன், புண்ணுக்கு மருந்து கட்டும் துணிக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இருவாரங்களுக்கு மேலாக ஏற்புத்தடைக்கான ஊசி மருந்து முடிந்துள்ளமையால் புதிதாக ஏற்புத் தடை மருந்து ஏற்றவேண்டியவர்களும் மற்றும் இரண்டாம் தடை ஊசி போட வேண்டியவர்களும் ஊசிமருந்து முடிவடைந்துள்ளதாகக் கூறி திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், புண்ணுக்கு மருந்து கட்டும் துணியும் முடிவடைந்துள்ளமையால் பிளாஸ்ரர் கொண்டே புண்ணுக்கு மருந்து கட்டப்பட்டு வருகின்றது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதிலும் அரசினால் இவ் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு வரும் மருந்தின் அளவு குறைவாக இருப்பதனாலேயே இத்தகைய நிலைமை ஏற்படுகின்றது எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது. (4-86)

## தேசிய இளைஞர் மாநாடு 8ஆம் திகதி மகரகமவில்

யாழ்ப்பாணம்,ஜூன்5

இலங்கை இளைஞர்கழக சம்மேளனத்தின் தேசிய மாநாடு எதிர்வரும் 8ஆம் திகதி மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் சம்மேளனத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த இளைஞர் சேவைகள் மன்றங்களின் பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். (4-7)

வடமராட்சி கிழக்கில்

## 'நிக்கொட்' அபிவிருத்திக்கு இரண்டு கிராமங்கள் தெரிவு

செம்பியன்பற்று,ஜூன்5

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் 'நிக்கொட்' நிறுவனத்தின் துரித அபிவிருத்திக்கு இரண்டு கிராம்ங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆழியவளை, உடுத்துறை ஆகிய கிராமங்களே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இக்கிராமங்களின் அபிவிருத்திப் பணிகளுக்குத் தலா 70 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைக் கொண்டு இக்கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி, வீதிகள் புனரமைப்பு போன்ற புதிய நிர்மாண வேலைகளும் பொதுமக்களுக்கான தொழிற்பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் சுழற்சி முறைக் கடன்களும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-36)

## உரும்பிராய் பாடசாலைகளுக்கு கனடா பழைய மாணவர் உதவி

வலி.தெற்கு,ஜூன்5

உரும்பிராயில் உள்ள பாடசாலைகள் சிலவற்றின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்விமேம்பாட்டுக்கும் உதவும் வகையில் கனடாவில் உள்ள உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நிதிஉதவி வழங்கியுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் என்பவற்றுக்கு தலா ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா நிதியும், உரும்பிராய் கிழக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு ஒரு லட்சம் ரூபா நிதியும் மேற்படி கனடாக் கிளையினால் வழங்கப்பட்டிருப்பதாக உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் வி.சோமநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியில் இருந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியின் 'வித்தியா' சஞ்சிகை வெளியீட்டுக்கென 45ஆயிரம் ரூபாவும், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் 'கற்பகம்' சஞ்சிகை வெளியீட்டுக்கென 45ஆயிரம் ரூபாவும், லேசர் பிரின்டர் கொள்வனவுக்கென 35ஆயிரம் ரூபாவும் பயன்படுததப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (4-152)

**நாளை**

வைகாசி 24
ஞாயிற்றுக்கிழமை
(06.06.2004)
திதி : சதுர்த்தி
பின்னிரவு 12.54 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
பின்னிரவு 12.14 வரை
சங்கடஹர
சதுர்த்திவிரதம்
சுபநேரம்: 8.52-10.22
ராகுகாலம்: 4.22-5.52
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஒன்றாகச் சேர்வது ஆரம்பம், ஒன்றாக இருப்பது முன்னேற்றம், ஒன்றாகவுழைப்பது வெற்றி.

## மேலும் இருநூறு பேருக்கு வீடமைப்புக் கடன் உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.குடாநாட்டில் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் மேலும் இருநூறு பேருக்கு தேசிய வீடமைப்பு அதிகாரசபை கடனுதவிகளை வழங்கவுள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இக்கடனகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலகங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் இரு அரச அலுவலர்களின் சாட்சிக் கையொப்பங்களையும் பெற்று வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். அலுவலகத்தில் அதனைக் கையளிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15 வருட தவணைக் காலத்தில் வட்டியுடன் இக்கடன்கள் மீளச் செலுத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

இந்த ஆண்டு 400 பேருக்கு கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த மாதம் மட்டும் இருநூறு பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் இவ்வீடமைப்புக்கடன்கள் வழங்கப்பட்டன எனவும் -

மிகுதி இருநூறு பேருக்கு இந்த வருட இறுதிக்குள் வழங்கபடும் என்றும் வீடமைப்பு அிதகார சபையின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (4-7)

## நெடுந்தீவு ஊடாக யாழ். வந்த சிறுவர்களுக்குச் சொட்டுமருந்து

யாழ்ப்பாணம்,ஜூன்5

இந்தியாவில் இருந்து நெடுந்தீவு ஊடாக யாழ்ப்பாணம் வந்து மீளக் குடியமர்ந்துள்ள சிறுவர்களுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.

இதற்கான விவரங்கள் தற்போது கிராம அலுவலர்கள் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டுவருகின்றன.

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இவர்களுக்கான போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-185)

## இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு நாளை நல்லை ஆதீனத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன்5

இலங்கை இலக்கியப் பேரவையின் 1997 - 2002 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிக்குரிய பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம் பெறவிருக்கின்றது.

இலக்கியப் பேரவைத் தலைவரும் வலி. வடக்குப் பிரதேச செயலாளருமான செங்கைஆழியான் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வு நல்லை ஆதீன குருமுதல்வரின் ஆசியுரை யுடன் ஆரம்பமாகும்.

இவ்விழாவில் பரிசளிப்புரையை மூதறிஞர் சிற்பி சரவணபவன் நிகழ்த்துவார். ஆறு.திருமுருகன் சிறப்புரையாற்றுவார்.

அதன்பின் இலக்கியப் பேரவையின் பரிசளிப்பும் கனகசெந்தி கதா விருதுப் பரிசளிப்பும் இடம்பெறவிருக்கின்றன.

இந்த விழாவில் பங்குபற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்களிடையே கலந்துரையாடலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையிலிருந்து மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, கவிஞர் மேமன்கவி, படைப்பாளிகளான ஜின்னாஹ் ஷெரிப்தீன், கே.விஜயன், ப.ஆப்டீன், புலோலியூர் அ.இரத்தனவேலோன், சுதாராஜ் ஆகியோரும் மலைநாட்டிலிருந்து அந்தனி ஜீவா, சாரல் நாடன், புலோலியூர் க.சதாசிவம், ஞானம் ஆசிரியர் ஞானசேகரன், பேராசிரியர் சி.சிவசேகரம் ஆகியோரும், கிழக்கிலிருந்து எழுத்தாளர் ச.அருளானந்தம், ஓ.கே.குணநாதன், கவிஞர் எஸ்.முத்துமீரான், எம்.என்.அமானுல்லா, ஏ.எஸ்.உபைத்துல்லா ஆகியோரும், வன்னியிலிருந்து கவிஞர் அமரதாஸ், தமிழ்க்கவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பட்டப்பின் படிப்புகள் பீடம்

பட்டப்பின் கல்வித் தகைமை (யாழ்ப்பாணம், வவுனியா வளாகம்)
கல்வியாண்டு 2003/2005
பகுதிநேரம் I & முழுநேரம்: முதலாம் பருவத் தேர்வு

**பரீட்சை அனுமதி அட்டை**

15.06.2004 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் மேற்படி பரீட்சைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விண்ணப்பித்த மாணவர்கள், பீடாதிபதி அலுவலகம், உயர்பட்டப்படிப்புகள் பீடத்திலும், வவுனியா வளாகத்தில் விண்ணப்பித்த மாணவர்கள் வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீடத்திலும் தங்கள் அனுமதி அட்டை, நேரசூசி ஆகியவற்றை எதிர்வரும் 07.06.2004 தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். 03.06.2004. (சி-35436) (34-40)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1924 | 2004 |
| 03 | 05 |
| 11 | 06 |

நிகழும் தாரண வருடம் சித்திரை மாதம் 24ஆம் நாள் (06-05-2004) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் கதிரவன் மார்க்கண்டு

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (05-06-2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

*ஆர்.பி.எஸ். வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
- குடும்பத்தினர்.
(32733)(4212-19-40)

உ
ஓம் சிவசக்தி துணை

## 45 ஆவது நாள் நினைவு



### செல்வன் கனகராசா வசீகரன்

**மீண்டும் உயிர்ப்பாய் எம்முடனே!**


விளக்கிலிருந்து ஒளிபெறவேண்டுமாயின்
திரி கருகத்தான் வேண்டும்! அது உண்மைதான்!!
அண்ணா!
ஆனால்..
உன்னைக் கருக்கி எமக்கு ஒளி கொடுக்க முனைந்தவேளை
நீ முழுமையாக உடைந்து போய்விட்டாயே!
உன் ஒளியில் வாழ்ந்த நாம் உடைந்த விளக்காய்
உனைக் கண்டோம்! ஆனாலும்
மீண்டும் உயிர்ப்பாய் எம்முடனே!

இன்று (05.06.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வில் கலந்து அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி க.திருப்பதி (தாய்),
சகோதரர்கள்: நளாயினி, மனோகரன்,
ரவிகரன், மாலினி, விஜிகரன்.

*கம்பர்மலை,*
*வல்வெட்டித்துறை.* (32736)(37-12-19-40)

## நெஞ்சகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 | 20 |
| 11 | 05 |
| 1954 | 2003 |

### அமரர் பொன்னுத்துரை சிதம்பரநாதன் (மோகன்)

திதி: திருதியை 05.06.2004

குடும்பத்தின் குல விளக்கே - அப்பா!
பாசத்தின் திருவுருவே -அப்பா!!
கோடி உறவு வந்தாலும் உங்கள்
உறவு போல் ஆகுமா?
ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை
எம் துயரம்? - அப்பா!!!
இனி எப்பிறப்பில் உங்கள்
இனிய உறவைக் கொள்வோமோ?

11/11. செம்மணி வீதி.
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
(32737)(35-12-19-40)

உங்கள் ஆத்ம சாந்திக்காக
எந்நாளும் பிரார்த்திக்கும்:
மனைவி,
பிள்ளைகள்: ஜீவிதன், கீர்த்திகா.

**வெளிவந்துவிட்டது!**
*விற்பனையாகின்றது!!*

**தரம் 6 ஆங்கிலப் பயிற்சி**

புதிய பாடத்திட்டம்
2004



ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
(32747)(37)

## கனகாம்பிகைக்குளம் புனரமைக்கப்படுகிறது

நியாப் திட்டத்தின்கீழ் கனகாம்பிகைக்குளம் 6 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குளத்தின் கால்வாய்ப் பகுதியில் தடுப்புச் சுவர்கள் அமைத்தல், குளம் தரப்படுத்தல், நீர்ப்பாசனக் கால்வாய்கள் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன. இக்குளத்தின் புனரமைப்பின்மூலம் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (4-36)

## கூறுவிலை கோரல்

யாழ். செயலகத்தினால் யூ.என்.ஏச்.சீ.ஆர். நிதியுதவியுடன் நலன்புரி நிலையங்களில் குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தினை மேற்கொள்வதற்குப் பொருள்கள், மேசன்வேலை, தச்சுவேலை என்பனவற்றுக்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.


வேலை மேற்கொள்ள விரும்புவோர் 10.06.2004 ஆம் திகதிக்கு முன்னதாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உள்ள யூ.என்.ஏச்.சீ.ஆர். திட்ட அமுலாக்கல் பிரிவுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களையும், உரிய படிவங்களையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழப்பாண மாவட்டம்.
(C/35430)(40-19-12)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### 05.06.2004





குணசேகர் - ஊர்மிளா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### செல்வன் அபிலாஸ்
### (அபி)

இன்று (05.06.2004) சனிக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை
சுவிஸில் உள்ள தனது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
சுவிஸில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா, அசோக் சித்தப்பா, சர்மிளா சித்தி,
அஸ்வினி குட்டி, சந்திரன் பெரியப்பா குடும்பம், கலா அத்தை குடும்பம்,
மீசாலையில் உள்ள அம்மப்பா, அம்மம்மா, மாமா வினோத்,
சித்திமார்களான புவனா, விஜி, கணேசபுரத்தில் வசிக்கும் அப்பம்மா,
மாலா அத்தை குடும்பம், சோபா அத்தை குடும்பம்
மற்றும் உற்றார், உறவினர் அனைவரும்
அபிக் குட்டியைப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
வினோதன் (மாமா).

மீசாலை. (32742) (24-13)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் தாரண வருடம் வைகாசி மாதம் 24ஆம் நாள் நாளை (06.06.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் பி.ப 12.30 மணிவரையுள்ள சிங்கலக்கினமும் உத்தராட நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,




இறைவன் திருவருள் துணையுடன் அத்தியடி சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் தங்கள்குடும்பசமேதரராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வசித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

(C/35427)

| திருமதி நடராசா | திருமதி உருத்திரசிங்கம் |
|---|---|
| இல.177, நாவலர் வீதி. | மண்கும்பான் மேற்கு. |
| யாழ்ப்பாணம். | 5ஆம் வட்டாரம். வேலணை. |
| T.P:- 0777-300 185. 0777-283 676. | T.P:-0372248436 |

(இருவீட்டார் அழைப்பு)

# சினிமா மாயை தமிழகத்தில் தகர்ந்தது!

நடந்துமுடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் கலைஞர் கருணாநிதி தலைமையிலான கூட்டணி வரலாறு காணாத விதத்தில் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றிவாகைசூடிச் சரித்திரம் படைத்துள்ளது. இந்த வெற்றிக்கான காரணங்களையும் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட பரிதாபத் தோல்விக்கான காரணங்களையும் தேர்தல் நடைபெற்றவேளையில் தமிழகத்திற்கு விஜயம் செய்திருந்த 'உதயன்' சிறப்புப்பிரதிநிதி "கஜனி" அலசி ஆராய்கிறார்.



அ.தி.மு.க மேடையில் ஜெனிபர் சந்திரன்.

**2001** இல் இடம்பெற்ற சட்டசபைத் தேர்தலில் கூட்டணிக்கட்சிகளின் ஆதரவினால் அ.தி.மு.க. பல சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிபெற்றது. ஆனால், அத்தேர்தலில் அக்கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களோ அமைச்சர்களோ அதன்பின்னர் தமது தொகுதிகள் பக்கம் தலை வைத்துக் கூடப்படுக்கவில்லை. மூன்றுவருடங்களாகத் தங்களைத் தேடிவராத சட்டமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் இம்முறை மக்கள் வெறுத்தொதுக்கினர். நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காக அ.தி.மு.க. சட்ட சபை உறுப்பினர்களும் அமைச்சர்களும் கிராமங்களுக்குச் சென்றபோது பல கிராமங்களில் மக்கள் அவர்களைக் கிராமங்களுக்குள் அனுமதிக்கவில்லை. சில இடங்களில் கல்வீச்சுக்களும் இடம்பெற்றன.







### முன்னாள் அமைச்சரின் குத்துக்கரணம்

"தாதா" என்று கருதப்படுபவரான வெங்கடாசலப் பண்ணையார் என்பவரைக் குறிவைத்து பொலீஸார் "கவுண்டவுண்" என்ற நடவடிக்கையை மேற்கொண்டனர். வெங்கடாசலப் பண்ணையார் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். திருச்செந்தூர் தொகுதிக்கு வெங்கடாசலப் பண்ணையாரின் மனைவி ராதிகா செல்வியை தி.மு.க. சார்பில் கருணாநிதி வேட்பாளராக நிறுத்தினார்.

ராதிகா செல்வியை ஆதரித்து முன்னாள் அமைச்சர் ஜெனிபர் சந்திரன் தீவிரமாகப் பிரசாரம் செய்துவந்தார். ஆனால், 30.04.2004 அன்று ஜெயலலிதா திருச்செந்தூர் தொகுதிக்குத் தேர்தல் பிரசாரத்திற்குச் சென்றபோது ஜெனிபர் சந்திரனும், அவரது குழுவினரும் ஜெயலலிதாவின் பிரசார மேடைக்கு வந்து அ.தி.மு.க [illegible] இணைந்து கொண்டனர். அதற்கு முதல் நாள் வரை திருச்செந்தூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா செல்வியே என முழங்கிவந்த ஜெனிபர் சந்திரன் மறுநாள் திருச்செந்தூர் எம்.பி. தாமோதரனே எனக் குத்துக்கரணமடித்தார். இது தொகுதி மக்களிடையே தி.மு.க.சார்பான புதிய ஆதரவு அலையை உருவாக்கியது. சாத்தான்குளம், திருச்செந்தூர், காயல்பட்டணம், கன்னியாகுமரி எனத் தொகுதியின் பல ஊர்களுக்கும் இத்தகவல் செல்லவே அன்றே ராதிகா செல்வியின் வெற்றி உறுதியாகிவிட்டது.

### சித்திரை விழா

சித்திரைத் திருவிழா மதுரை மாவட்டத்தில் பெருமெடுப்பில் நடைபெறுவது வழக்கம். மதுரை மீனாட்சி அம்மன்கோவிலிலும், கள்ளழகர் கோவிலிலும் விமரிசையாக இவ்விழா நடைபெறும். சித்திரா பௌர்ணமி அன்று கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குவது பிரசித்திபெற்ற நிகழ்வாகும். இந்தவருடம் வைகை அணையின் நீர்மட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது. எனவே, ஆற்றில் தண்ணீரைத் திறந்துவிடமுடியவில்லை. காலாகாலமாகக் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கத்தை மாற்றமுடியாத நிலையில் அதிகாரிகள் ஒரு சிறு பள்ளத்தை அகழ்ந்து அதில் 8 லொறிகளில் நீரைக் கொண்டுவந்து நிரப்பினர். வைகை நதியில் இறங்கும் கள்ளழகர் இம்முறை லொறித் தண்ணீரில் இறங்கினார். மழைஇல்லாததால் வைகை அணைக்கட்டின் நீர்மட்டம் குறைந்தது. இதற்கு ஜெயலலிதா பொறுப்பலல. ஆனால், இந்தச் சம்பவத்திற்கும் மக்கள் ஜெயலலிதா மீதே குற்றஞ்சாட்டினர். அக்கிரம ஆட்சி காரணமாகவே வானம் பொய்த்தது எனக் குறை கூறினர். ஆஸ்திகர்கள் நிறைந்த மதுரைமாவட்டத்தில் பின்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் (மாக்ஷீட்) வேட்பாளர் மோகன் மிக இலகுவாக வெற்றிபெற மக்கள் ஜெயலலிதா ஆட்சி மீது கொண்ட வெறுப்பே முக்கிய காரணமாக அமைந்தது.

### ஆசிரியர்களின் ஆத்திரம்

தமிழகத்தில் பெரும்பாலான ஆசிரியர்கள் ஏப்ரல் - மே மாதங்களில் ஓய்வுபெறுகிறார்கள். அவ்வாறு ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்குப் பிரிவுபசார வைபவங்கள் நடைபெற்றன. ஜெயலலிதாவின் அரசினால் பழிவாங்கப்பட்ட ஆசிரியர்கள் தங்களது ஆதங்கங்களை (அரசுக்கு எதிரான பிரசாரங்களை) அரங்கேற்றும் மேடையாக இந்தப் பிரிவுபசார வைபவங்களைப் பயன்படுத்தினர்.

## தமிழகத் தேர்தல் வெற்றி: உள்ளிருந்து வரும் பார்வை

அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி அதைத்தொடர்ந்து அரசு எடுத்த நடவடிக்கைகளால் எப்படியெல்லாம் பாதிக்கப்பட்டோம் என்பதைச் சிலர் உணர்ச்சிபூர்வமாக எடுத்துக் கூறினர்.

போராட்டத்தின்போது இறந்த ஊழியர்களின் உறவினர்களை அழைத்து அவர்களது கணணீக் கதைகளையும் கூறச்செய்து தம்மை இந்தநிலைக்கு ஆளாக்கியவர்களுக்குத் தக்க பாடம் புகட்டவேண்டும் என முழங்கினர்.

நாகை மாவட்டத்தில் நடைபெற்ற இவ்வாறான பிரிவுபசார வைபவத்தில் இந்தியப் பாடசாலை ஆசிரியர் கூட்டமைப்பின் அகில இந்தியச் செயலாளர் நடேசன் பங்குபற்றினார். அவர் தனது பேச்சில் 12 லட்சம் ஆசிரியர்களின் உரிமைகளை இரண்டே இரண்டு ஆசிரியர்கள் (வாஜ்பாய், ஜெயலலிதா) பறித்துவிட்டனர். 40 இற்கும் அதிகமான உயிர்களை நாம் பறிகொடுத்து விட்டோம். நல்ல சமயமிது. நழுவவிடவேண்டாம். பதிலடி கொடுப்போம் என உணர்ச்சிபொங்க உரையாற்றினார். இந்த வைபவங்களுக்குத் தமிழகப் பத்திரிகைகள் பல முன்னுரிமை கொடுத்தன.

இதற்கிடையில், "அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிந்தனைக்கு" என்ற பெயரில் 16பக்கங்களைக் கொண்ட சிறு குறிப்பேட்டை கம்யூனிஸ்ட் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு. வெளியிட்டது. இந்தக் குறிப்பேடு தேர்தல் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் குறிப்பாக வழங்கப்பட்டது.

அதில் 'சிந்திப்பீர்! பகைவன் யார்? நண்பன் யார்?, கடந்தகாலத்தில் உங்களை நிராயுதபாணியாக்கியது யார்? அதற்கான பொறுப்பு அ.தி.மு.க. அரசே. பா.ஜ.கட்சி பக்கபலமாக இருந்து அந்தக் கொடுமையை ஆதரித்தது. தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், காங்கிரஸ், பா.ம.க., ம.தி.மு.க. ஆகியன அரணாக இருந்து எம்மைப் பாதுகாத்தன. எம்மை ஆதரித்த காரணத்தினால் அந்தக் கட்சிகளின் தலைவர்கள் மீது தமிழக அரசு "டெஸ்மா" சட்டத்தை ஏவியது.

"தாக்கியவர்கள் ஓர் அணியாகவும் தாக்குதலில் இருந்து காத்தவர்கள் ஓர் அணியாகவும் உள்ளனர். மே 10 ஆம் நாள் அவர்களுக்குப் பாடம்புகட்ட வேண்டியநாள்".

"உங்கள் வாக்குகளையும் உங்களைச் சார்ந்தவர்களின் வாக்குகளையும் உங்களுக்காகக் குரல் கொடுத்தவர்களுக்கு வழங்குங்கள்" எனக் கூறப்பட்டிருந்தது.

இந்தக் குறிப்பேடும் பிரிவுபசார வைபவங்களும் அரச ஊழியர் மற்றும் ஆசிரியர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கின. அவை அ.தி.மு.க.வுக்கு எதிரான உணர்வலைகளாக உருவெடுத்தன.

### தேர்தல் ஆணையகத்தின் கிடுக்கிப்பிடி

முதலமைச்சர் தமிழ்நாட்டில் திக்விஜயம் மேற்கொள்ளும்போது கொடிகள், தோரணங்கள், "கட்டவுட்டுகள்" வீதியோரங்களில் வைக்கப்படுவது வழக்கம். ஆனால், கடந்த பொதுத் தேர்தலின்போது தேர்தல் ஆணையகம் இவற்றிற்கு தடைவிதித்திருந்தது.

பாண்டிச்சேரியின் பா.ஜ.கட்சி வேட்பாளர் லலிதா குமாரமங்கலத்தை ஆதரித்துப் பேசுவதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா பாண்டிச்சேரிக்கு விஜயம்செய்தார். அவரது வருகையையொட்டிப் பாண்டிச்சேரி அ.தி.மு.க. அமைப்பாளர் அன்பழகன் முதல்நாளே கொடிகள், தோரணங்கள், "கட்டவுட்டுகள்" ஆகியவற்றை .வைத்து பாண்டிச்சேரியை விழாக்கோலம் ஆக்கினார். ஆனால், அவை தேர்தல் விதிமுறைகளை மீறும்செயல் எனக்கூறி, பொலீஸார் அவற்றை அகற்றிவிட்டனர். இருப்பினும், ஜெயலலிதா விஜயம் செய்தவேளையில் அவை மீண்டும் வீதியெங்கும் காணப்பட்டன. இது அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறல்


ரஜனியின் பிர சார ஒ[illegible]ாவை வெளியிடுகிறார் ரஜனி மன்றத் தளபதி சத்திய நாராயணா [illegible]து)

எனவும், ஒருவிதத்தில் அந்தச் [illegible]ல் தேர்தல் ஆணையகத்திற்கு விடுக்கப்[illegible]ட [illegible]ல் போன்றதாகும் எனவும் தேர்தல் ஆ[illegible] எடுத்துக் கொண்டதுடன் இதுகுறித்து [illegible]ண்டிச்சேரி அ.தி.மு.க. அமைப்பாளர் அன்பழகனிடம் விளக்கம் கேட்டது. அவரது விளக்கம் திருப்தியான ஒன்று அல்ல எனவும் பாண்டிச்சேரியில் அ.தி.மு.கவின் அரசியல்கட்சி அங்கீகாரத்தை ஏன் ரத்துச்செய்யக்கூடாது எனவும் தேர்தல் ஆணையகம் அன்பழகனுக்கு கடிதம் எழுதியது. அதற்கான விளக்கத்தை அனுப்புவதற்கு அன்பழகன் காலஅவகாசம் கோரியுள்ளார்.

### பாண்டிச்சேரி வேட்பாளர்

அத்வானியின் கோரிக்கைக்கு அமையவே பாண்டிச்சேரித் தொகுதியை பா.ஜ.கட்சிக்கு ஜெய லலிதா ஒதுக்கினார். பா.ஜ. கட்சி லலிதா குமாரமங்கலத்தை வேட்பாளராக அங்கு நிறுத்தியது. லலிதா குமாரமங்கலம் குறித்துப் பல்வேறு புகார்கள் உள்ளன.

ஊனமுற்றோருக்கான சங்கம் ஒன்று தனது வேலைத்திட்டத்தை வெளிநாட்டைத் தலைமையகமாகக் கொண்ட தொண்டர் நிறுவனத்திடம் சமர்ப்பித்தது. பல்வேறு பரிசீலனைகளுக்குப் பின்னர் அந்தத்திட்டம் ஏற்கப்பட்டுப் பல லட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆனால், அந்தச் சங்கத்திற்கு டில்லி வங்கிகள் எவற்றிலும் கணக்கில்லை. எனவே சங்கத்தினர் லலிதா குமாரமங்கலத்தை நாடினர். லலிதா குமாரமங்கலத்தின் டெல்லி வங்கிக்கணக்கிற்கு அந்தப் பணம் அனுப்பப்பட்டது. பணம் கிடைத்ததும் கதையே மாறிவிட்டது. ஊனமுற்றோர் சங்கத்திற்குத் தானே பொறுப்பு எனவும், அந்தச் சங்கத்தின் முழுக்கட்டுப்பாடும் தனதே எனவும் லலிதா குமாரமங்கலம் தெரிவித்துள்ளார். லலிதா குமாரமங்கலத்துடன் முட்டிமோதும் ஆற்றல் இல்லாதநிலையில் சங்கத்தினர் நிர்க்கதி நிலையில் உள்ளனர். இது தொடர்பான தகவல்கள் வெளிவந்து மக்கள் கொதிப்படைந்திருந்த வேளையிலேயே முதலமைச்சர் ஜெயலலிதா லலிதா குமாரமங்கலத்தை ஆதரித்து பிரசாரம் செய்வதற்குப் பாண்டிச்சேரி சென்றிருந்தார்.

தேர்தல் பிரசாரங்களுக்காக வெளிமாவட்டங்களுககு ஜெயலலிதா சென்றபோது அங்குள்ள பிரபல ஹோட்டல்களில் தங்கினார். தேர்தல் பிரசார நிகழ்ச்சிநிரல்கள் தயாரிக்கப்பட்டு கூட்டங்களுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. ஆனால், திடீரென பலகூட்டங்களை அவர் ரத்துச் செய்துவிடுவார். தொகுதி சம்பந்தப்பட்ட அமைச்சர்களையும், பிரமுகர்களையும் ஹோட்டலில் சந்திப்பார். திடீரென ஒருசில கூட்டங்களுக்குச் செல்லுவார். அவரது கன்னியாகுமரி விஜயத்தின்போது வீதியோரத்தில் உருவச்சிலை ஒன்றை ஜெயலலிதா திறந்துவைத்து உரையாற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. பெருந்திரளான மக்களும் அவரை வரவேற்கக் காத்திருந்தனர். கார் பவனியில் வந்த முதல்வரின் கார் சிலையருகே நிறுத்தப்பட்டது. திரை நீக்குவதற்கான "சுவிச்சை" கோரி காரிலிருந்த வாறே 'சுவிச்சை' இயக்கி திரை நீக்கியதும் கார் பவனி மீண்டும் ஆரம்பித்தது. மக்களுக்கு பெரும் ஏமாற்றம் - அதிருப்தி. தேர்தல் வேளையில் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ளக் கூடாதோ, அவ்வாறெல்லாம் ஜெயலலிதா நடந்து கொண்டார்.

### ரஜனியின் நிலைப்பாடு

தேர்தல்வேளையில் நடிகர் ரஜனிகாந்த் எடுத்த நிலைப்பாடு காரணமாக, அ.தி.மு.க. - பா.ஜ.கட்சிக் கூட்டணிக்கு ஒருபுறத்தில் ஆதரவும் மறுபுறத்தில் எதிர்ப்பும் உருவாக ஆரம்பித்தன. 'வன்னியர்கள் மத்தியில் பா.ம.க, நிறுவுநர் டாக்டர் ராமதாஸ்'க்கு ஆதரவில்லை என்பதைக் காட்டும்நோக்கில் வன்னியர் இனத்தைச் சேர்ந்த மற்றைய தலைவர்களான வன்னியர் சங்கத்தலைவர் ஏ.கே.நடராஜன், முக்கியஸ்தரான தீரன் மற்றும் வாழப்பாடி ராம மூர்த்தியின் மகன் சுகந்தன் ஆகி

(9ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் பொங்கல் திருவிழா

**நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ தில்லைவெளிப்பிடாரி அம்பாள்**

**ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா**

**இன்று 05.06.2004 சனிக்கிழமை காலை அம்பாளின் பொங்கல் திருவிழா நடைபெறத் திருவருள்பாலித்துள்ளது.**

*அடியார்கள் அனைவரும் திரளாக வந்து அம்பாளைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

*நாட்டில் போர் அவர்த்தங்கள் ஒழிந்து சாந்தியும் சமாதானமும் நின்று நிலைத்து நிலவ வேண்டுமெனவும் மக்கள் சீர் சாரக வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ தில்லைவெளிப் பிடாரி அம்பிகையை பணிந்து வேண்டுகின்றோம்.*

ஸ்ரீ தில்லைவெளிப் பிடாரி அம்பாள் கூட்டுப் பிரார்த்தனைச் சபையினர்.

நயினாதீவு

(32741) (38-21-13)


## காவலரண் அகற்றப்பட்டது

வரணி,ஜுன்5

சுட்டிபுரம் - மிருசுவில் வீதிச் சந்தியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ பொலீஸ் காவலரண் அகற்றப்பட்டுள்ளது.

சுமார் 6 மாதங்களுக்கு முன்பு இச்சந்தியில் புதிதாக இக்காவலரண அமைக்கப்பட்டது. தற்சமயம் சுட்டிபுரம் அம்பாள் ஆலய வருடாந்த உறசவம் ஆரம்பமாகியுள்ளதால் பக்தர்களின் வழிபாட்டு வசதி கருதியே இக்காவலரண் நீக்கப்பட்டதாக கூறப்பட்டது. (4-170)


முதலாவது ஆண்டு நிறைவு திருமண வாழ்த்து



ஜேர்மனியில் வசிக்கும்

**ரவிச்சந்திரன்-வதனா**

தம்பதியினர்

இன்று (05.06.2004) சனிக்கிழமை தமது திருமண வாழ்வின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

இவர்கள் இருவரும் -

ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறுகளும் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் பல்லாண்டு வாழ மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா, அண்ணாகுமார், தம்பி யசோ (லண்டன்) கேதீஸ்வரன் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்,

(32743)(40-21-13)

மடத்தடிகிழக்கு, சாவகச்சேரி.



**3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**



கரந்தன் மேற்கு, நீர்வேலியைச் சேர்ந்த செலஸ்றீன்-யூலியற் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**மிதுர்ஜன்**

தனது 3 ஆவது பிறந்தநாளை இன்று (05.06.2004) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணாமார், அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார், மாமிமார், மாமா பாபு (சுவிஸ்), மாமா பாலா (ஜேர்மனி), சித்தி சோபா (கொழும்பு), அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், உற்றார், உறவினர்கள் ஆகியோர் ஹென்றி அரசர் அருள்பெற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: அப்பா.

கரந்தன் மேற்கு. (32730) (40-13-17)



யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்

**இலவச ஆங்கில நேரடி வகுப்பு**

ஒரு மணிநேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்.

சந்தேகம் வேண்டாம். இதுவரை இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சி பெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி.

இடம்: றிமர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ் மத்திய கல்லூரி அருகில்

காலம்: 05.06.2004, 06.06.2004 மற்றும் 07.06.2004
சனி, ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை

வகுப்புகள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)
காலை 9.00 முதல் 10.00 காலை 10.00 முதல் 11.00
மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00
மாலை 4.00 முதல் 5.00 மாலை 5.00 முதல் 6.00

**அனுமதி இலவசம்**

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள்.

அனைவரும் கலந்து கொள்ளலாம்

கலந்து கொள்ளும் அனைவருக்கும்
கற்கைநெறி வழிகாட்டியும்
கலந்து கொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

**குறிப்பு:** கடந்த காலங்களில் வகுப்புக்களில் கலந்து சான்றிதழை பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப்பெறாதவர்களும் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். (35416)(42-21-13)

**Psalm Institute of Engineering and Technology**


# மாநகரசபை, யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல் 2004

கீழ்க்குறிப்பிட்டுள்ள வீதி வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன. பதிவுசெய்யப் படவேண்டிய தரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி: 21.6.2004 பி.ப 3.00 மணி

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 22.6.2004 ந.ப 12.00 மணி

கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி: 22.6.2004 பி.ப.2.00 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு *மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்* என முகவரியிடப்பட்டு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

மேலதிக விவரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆகக் குறைந்த தரம் | மீளளிக்கக் கூடிய வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திர கட்டணம் 'வற்' உட்பட |
|---|---|---|---|
| 01. நாயன்மார்கட்டு வீதி | 08 | 10700/= | 500/= |
| 02. முருகமூர்த்தி வீதி | 09 | 5700/= | 500/= |
| 03. புங்கன்குளம் வீதி | 09 | 7300/= | 500/= |
| 04. சேர் துரைச்சாமி வீதி பெட்டி மதகு | 09 | 5700/= | 500/= |
| 05. அரச வீதி | 10 | 3000/= | 500/= |
| 06. பண்டாரக்குளம் வீதி | 10 | 2600/= | 500/= |
| 07. முதலியார் வீதி | 10 | 2300/= | 500/= |
| 08. பிரப்பங்குளம் வீதி | 10 | 3000/= | 500/= |
| 09. கற்பக விநாயகர் வீதி | 10 | 2700/= | 500/= |
| 10. ஆறுகால்மடம் பழம் வீதி பெட்டி மதகு | 10 | 3500/= | 500/= |
| 11. கந்தப்பசேகரம் வீதி பெட்டி மதகு | 10 | 4100/= | 500/= |
| 12. மணிக்கூட்டு வீதி ஒழுங்கை | 10 | 2900/= | 500/= |
| 13. பற்றிக்ஸ் வீதி | 10 | 3600/= | 500/= |
| 14. கோவில் வீதி ஒழுங்கை | 10 | 2500/= | 500/= |
| 15. கதிட்ரல் வீதி | 10 | 2200/= | 500/= |
| 16. அத்தியடி புது வீதி | 10 | 1700/= | 500/= |
| 17. மணிக்கூட்டு வீதி | 10 | 1600/= | 500/= |
| | | 65100/= | 8500/= |

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*03.6.2004.* (C/35421)(42-13-21)


Join with pending A/L results

abe

**Association of Business Executives - UK**

**Obtain a degree in 2 ½ years**



**Planning for internationally recognized study programme:**

Certificate With O/L (6 months) → Diploma With A/L (1 year) → Advanced Diploma (6 months) → B.Sc. Degree in 1 year

**English Language with Business Administration**
(Part-Time/FullTime)

**English Language with Business Information Systems**
(Part-Time/FullTime)

*New batch commencing on 14th June 2004*

Contact Academic Advisors: (சி-35413)

**UNIVENTURES INSTITUTE OF BUSINESS MANAGEMENT**

Address: *55 Martin Road, Jaffna.*

Tel: 021 2227666/ 0777318280 Web: www.abeuk.com

(21-13)

சர்வதேச தரமுள்ள

# வியாபார முகாமைத்துவ நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கிளை திறந்துள்ளது

பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத யாழ்.குடாநாட்டு மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்காகக் கொழும்புக்கும் வெளிநாடுகளுக்கும் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், சமாதானச் சூழலைத் தொடர்ந்து பல உயர் கல்வி நிறுவனங்கள் தமது கிளைக்களைக் குடாநாட்டில் நிறுவியுள்ளனர். இவை மாணவ சமுதாயத்தின் எதிர்காலத்தொழில் வாய்ப்புக்களுக்குப் படிக்கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்பதற்கும், உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெறக்கூடிய சர்வதேச தரத்திலான கற்கை நெறிகளை வழங்கும் ஒரு நிறுவனமான யுனிவென்சஸ் வியாபார முகாமைத்துவ கல்வி நிறுவனம் தனது கிளையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றது.

இந்த நிறுவனம் இங்கிலாந்து வணிக மேலாண்மைக் குழுவில் பதிவு செய்யப்பட்டு, சர்வதேச தரத்திலான சான்றிதழ்களை வழங்கும் நிறுவனமாக, அகில இலங்கை ரீதியில் முதன் முதலாக யாழ்.குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது குடாநாட்டு மாணவர் சமுதாயத்திற்கு இன்றியமையாததே.

கடந்த பெப்ரவரி மாதம் இல.16, கந்தப்பசேகரம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் மேலதிக இடவசதி காரணமாக இல. 55, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவருகிறது. இந்த நிறுவனத்தின் இயக்குநர் விபு விக்கிரமசிங்கா. இவர் இங்கிலாந்தில் வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணப் பட்டத்தைப் பெற்றவர். அத்துடன், முகாமைத்துவக் கல்வி ஆலோசகராகவும் இருக்கின்றார்.

இந்த நிறுவனம் வியாபார நிர்வாகம் (Business Administration), வியாபார தகவல் முறைகள் (Business Information Systems) ஆகிய துறைகளில் சான்றிதழ் (Certificate), டிப்ளோமா (Diploma), உயர்தர டிப்ளோமா (Advanced Diploma) கற்கை நெறிகளையும், சர்வதேச ஆங்கில மொழிப் பரீட்சை முறைகள் (IELTS) மற்றும் பேச்சு ஆங்கிலக் கற்கை நெறிகளையும் (Spoken English) வழங்குகின்றது. O/L படித்துவிட்டு A/L உயர்தரம் படிக்காதவர்களும், உயர்தரம் படித்துக்கொண்டு இருப்பவர்களும் பகுதிநேரமாக இந்தக் கற்கை நெறியை முதல் ஆறு மாதம் சான்றிதழுக்கான கற்கை நெறியை (Certificate Course) முடித்து டிப்ளோமாவைத் (Diploma Course) தொடர முடியும். உயர்தரப பரீட்சையில் எந்தத் துறையிலாவது (கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்) இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரும், உயர்தரப்பரீட்சை எழுதிவிட்டுப் பெறுபேறுகளுக்காக காத்திருப்போரும் நேரடியாகவே டிப்ளோமா கற்கைநெறி ஒன்றைத் தொடரலாம். டிப்ளோமா பகுதி I, பகுதி II என ஒருவருட காலப்பகுதிக்கான கற்கை நெறியாகும்.

இவ்வாறு இந்நிறுவனத்தில் டிப்ளோமா கற்கைநெறி ஒன்றை பூர்த்தி செய்யும் ஒருவர் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசிலாந்து, கனடா போன்ற 13 நாடுகளிலுள்ள 72 பல்கலைக்கழகங்களில் ஏதாவதொன்றில் பட்டப்படிப்புக்காக இரண்டாவது வருடத்தில் இணைய முடியும்.

டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர்ந்து ஆறு மாதங்கள் உயர்தர டிப்ளோமா கற்கைநெறியையும் பூர்த்தி செய்யும் ஒருவர் மேற்குறிப்பிட்ட நாடுகளிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டப்படிப்புக்காக மூன்றாவது வருடத்தில் இணைய முடியும்.

இங்கு ஆங்கில மொழிமூலமே கற்கைநெறிகள் யாவும் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் குடாநாட்டில் உள்ள விரிவுரையாளர்கள் அழைக்கப்பட்டு மேலதிக தமிழ் விளக்கங்களும் வழங்கப்படுகின்றன. அதே நேரம் இம்மாணவர்களுக்காகப் பிரத்தியேக ஆங்கில வகுப்புக்களும் இலவசமாக நடத்தப்படுகின்றன. இந்த ஆங்கில வகுப்புக்களுக்குக் கொழும்பிலிருந்தும் விரிவுரையாளர்கள் வருகை தருகின்றனர். இந்தக் கற்கை நெறியானது மிகக்குறைந்த வயதில் அதாவது 20 வயதிலேயே பட்டதாரியாகும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுகின்றது. அத்துடன் இவ்வாறு பட்டம் பெற்ற ஒருவர் மூன்று வருட தொழில் அனுபவத்துடன் முதுமாணிப் பட்டப் படிப்பையும் (MBA) தொடரலாம்.

இங்கு உயர் கற்கைநெறிகளைத் தொடரும் மாணவர்கள் கல்வி கற்கும் போதே உள்ளகப் பயிற்சிகளை வழங்குவதற்காக, யாழ்.குடாநாட்டில் உள்ள தனியார் வங்கிகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இவ்வாறான தொழில்சார் உயர்கல்வி யாழ். குடாநாட்டு மாணவர் சமூகத்திற்குப் பயனுள்ளதாகவே அமையும்.

# கணனித்துறையில் பட்டப்படிப்பு விரைவில் இங்கும் ஆரம்பம்

SCC உம் ARAM Limited (India) உம் இணைந்து யாழ்ப்பாணத்தில் உலகத்தரம் வாய்ந்த கணனிக் கல்வியை வழங்கி ஒரு வருடத்தைப் பூர்த்தி செயகிறது.

யாழ்.மாணவர்களைக் கணனித் துறையில் வல்லுநர்கள் ஆக்குவதற்கான இந்தியாவின் Aram Limited உடன் இணைந்து Soft View Computer College உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்கிக் கொண்டிருக்கிறது.

தொழில் வளம்

Aram Limited ஆனது இன்றைய சூழலில் முன்னணியிலுள்ள Microsoft, IBM, Sun Micro System, HP ஆகிய நிறுவனங்களுககான மென்பொருள் உற்பத்தி, வன்பொருள் நடவடிக்கைகள், வலைப்பின்னல் அமைப்புகள் என்பவற்றுக்காக கூட்டு நடவடிக்கை நிறுவனமாகும். இன்று உலகம் முழுவதும் பரவியிருக்கின்ற பல கணனி வல்லுநர்களை உருவாக்கிய நிறுவனமாகும். இதில் எங்கள் மாணவர்களும் நாளைய பார் பேசும் கணனி வல்லுநர்களாக உருவாக வேண்டும் என்ற நோக்கத்துடன் யாழ். தட்டாதெருச் சந்தியில் Soft View Computer College உடன் இணைந்து செயற்படுகின்றது.

முழுக்க முழுக்க செய்முறைப் பயிற்சிகளைக் கொண்ட பாடக் கோவைகளுடன் இன்றைய மாணவர்கள் நாளைய கணனி வல்லுநர்கள் ஆவார்கள் என்ற உறுதியுடன் பன்னெடுங் காலமாக அனுபவம் வாய்ந்த இந்திய விரிவுரையாளர்களால் விரிவுரைகளும் செய்முறைப் பயிற்சிகளும் அத்துடன் உலகத்தரம்வாய்ந்த சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றது.

மாணவர்கள் சுயமாக வன்பொருளைக் கையாள்வதற்காக HardWare Engineering உம், உலகம் முழுவதும் தேவையான மென்பொருள் பாவனையாளர்களை உருவாக்குவதவற்காக Professional Microsoft Office XP உம், இன்றைய முதன்மை நிறுவனங்களுக்குத் தேவையான மென்பொருள் உற்பத்தியாளர்களை உருவாக்குவதற்காக Computer Programming பயிற்சி நெறிகளையும் Network Engineering, Auto CAD, DTP பயிற்சிகளும் மாணவர்களுக்கு இன்றைய தேவைகளான System Side, Applicatin Side, Network Side உற்பத்தி நுணுக்கங்கள் யாவும் இநதியாவில் இருந்து பல்லாண்டு காலம் அனுபவம் வாய்ந்த பொறியியலாளர்களால் கற்பிக்கப்பட்டு Diploma சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

SCC London Queen's Park College இற்கான இலங்கை முகவர்களாகத் தற்போது நியமிக்கப்பட்டு அவர்களுடன் இணைந்து லண்டனில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றது. விரைவில் பட்டப்படிப்புக்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்கு எமது கிளை நிறுவனம் ஒன்று (இல.1 வெங்கடேஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்) எனும் முகவரியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது எங்கள் மாணவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம். ஏனென்றால், குறைந்த செலவில் வல்லுநர்களாக ஒரு சிறந்த வழி இதுவே. அத்துடன், நன்றாகத் தேறும் மாணவர்களுக்கு இலவசமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கணனிசார் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவுள்ளோம்.

- என்று நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் கணனிப் பயிற்சியை முடித்துக் கொண்டோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், யாழ் பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜசுந்தரம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் , நடுவில் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் கே.அன்னலிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:வடமராட்சிச் செய்தியாளர்)

# கைத்தொழில் வளர்ச்சி நிலையம் குடாநாட்டில் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜுன்5

யாழ்ப்பாணத்தில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான கைத் தொழில் வளர்ச்சி நிலையம் இம்மாத இறுதிப் பகுதியில் இங்கு ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் யாழ்மாவட்ட வணிகர்கழகத்தில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.

இதில் வியாபார மற்றும் இணைந்த சேவைகள் நிர்வாகப் பணிப்பாளர் 'மாறு வான்ஸ் ரீன்வைக்' யாழ்.வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராசா, உப தலைவர் இ.ஜெயசேகரம் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இம்மாதம் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் செயற்படவுள்ள இந்த தொழில் வளர்ச்சி நிலையம் மூலம் குடாநாட்டில் கைத்தொழில் தொடர்பான அறிவு மேம்பாடு அடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள தொழில் வளர்ச்சி நிலையம் மூலம் யாழ்ப்பாணத்தின் கைத்தொழில்துறை அபிவிருத்தி அடைவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(4-12)

# சினிமா மாயை தமிழகத்தில்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோரையும் அழைத்து ரஜனி உரையாடினார். பாட்டாளி மக்கள் கட்சியினரைப் பற்றியும், அதன் தலைவர் ராமதாஸ் குறித்தும் ரஜனி அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்.

ரஜனியின் அறிக்கைக்குப் பெரியார் திராவிடக் கழகம், நெடுமாறன் தலைமையிலான உலகத் தமிழர் பேரவை மற்றும் டில்லி தமிழ்ச் சங்கம் உட்படப் பல தமிழ் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்தன. இவ்வாறான பல அமைப்புக்கள் பாட்டாளி மக்கள் கட்சி போட்டியிட்ட 6 தொகுதிகளிலும் தீவிரமாக ரஜனி எதிர்ப்புப் பிரசாரங்களில் ஈடுபட்டன. இந்த ஆறுதொகுதிகளிலும் நெடுமாறன் தலைமையிலான குழுவினர் பிரசாரங்களை மேற்கொள்வர் எனவும் அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் ரஜனியின் பத்திரிகையாளர் சந்திப்பும், அவரது பேச்சுக்களும் பலதரப்பட்ட பிரச்சினைகளை உருவாக்கின.

இருப்பினும், பல தொகுதிகளில் ரஜனி ரசிகர்கள் தாம் விரும்பிய வேட்பாளர்களை ஆதரிக்கத் தொடங்கவே அவர்களுக்கிடையே முரண்பாடுகள், மோதல்கள் இடம்பெறத் தொடங்கின.

ரஜனியின் பத்திரிகையாளர் மாநாட்டு விவரங்கள் முழுமையாக மக்களைப் போய்ச் சேரவில்லை என்பதால் ரஜனியின் அறிக்கையை அவரது குரலிலே ஒலிப்பதிவுசெய்து ரஜனி ரசிகர் மன்றங்கள் ஊடாக பா.ம.கட்சி போட்டியிடும் 6 தொகுதிகளில் ஒலிபரப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ரஜனிமன்றத்தினர் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். சென்னை கோடம்பாக்கத்திலுள்ள 'பத்மராம்' திருமண மண்டபத்தில் வைத்து அந்த ஒலிநாடாக்களை விநியோகித்தனர். பா.ம.கட்சி போட்டியிட்ட ஒவ்வொரு தொகுதிக்கும் தலா 30 ஆயிரம் ஒலிநாடாக்கள் வீதம் மொத்தமாக 1 லட்சத்து 80 ஆயிரம் ஒலிநாடாக்கள் வழங்கப்பட்டன. இந்தத் தகவல்கள் உடனடியாகக் கசியவரவே பா.ம.கட்சியினர் உஷாரடைந்தனர். ஓர் ஒலிநாடாவின் விலை 30 ரூபாவாக இருந்தாலும் 1 லட்சத்து 80 ஆயிரம் ஒலிநாடாக்களுக்கான மொத்தச்செலவு 54 லட்சமாகும். ஒரு வேட்பாளர் தேர்தல் செலவாக மொத்தமாக 25 லட்சம்வரை மட்டுமே செலவுசெய்யலாம். எனவே இந்த 54 லட்சத்தை யார் கணக்கில் சேர்ப்பது? இதுகுறித்து பா.ம. கட்சியினர் தேர்தல் ஆணையகத்தினருக்குப் புகார்மனுவை அனுப்பினர்.

ரஜனி அடுத்துத் தயாரிக்கவிருந்த ஜக்குபாய் படத்தின் பெயரைப் பயன்படுத்தி திருப்பரங்குன்றத்தில் ரஜனி ரசிகர்கள் ஜக்குபாய் பேரணி நடத்தினர். ஜக்குபாய் படத்தில் ரஜனி தோன்றுவதைப் போல் உடையணிந்து மோட்டார் சைக்கிள்களில் ஊர்வலம் நடத்தினர். அனல் ஆறுமுகம் என்னும் ரஜனி ரசிகர் ரஜனியைப் போலவே வேடமிட்டு வாகனம் ஒன்றில் ஊர்வலத்தில் சென்றார்.

ரஜனிக்குத் தமிழகத்தில் மக்கள் ஆதரவு உள்ளது எனப் பல ஆண்டுகளாகவே ஒரு கருத்து நிலவியது. 1996 இல் ரஜனியின் ஆசீர்வாதம் இருந்த காரணத்தாலேயே கருணாநிதி ஆட்சிக்கு வந்தார் எனவும், 2001 இல் ரஜனி நடுநிலைமை வகித்ததாலேயே கருணாநிதியால் ஆட்சிக்கு வரமுடியவில்லை என்றும் கூறப்பட்டது. ஆனால், 2004 பொதுத்தேர்தலில் ரஜனியும், ரஜனிரசிகர் மன்றங்களும் கருணாநிதிக்கு எதிரான அணியினருக்கு வெளிப்படையாகவே களத்தில் இறங்கியும் எத்தனையோ சாகசங்களைப் புரிந்தும் பலனேதும் கிட்டவில்லை. ரஜனி தனது கையைத்தானே சுட்டுக்கொண்டது தான் மிச்சம். பா.ம.கட்சி சார்பில் போட்டியிட்ட எந்தவொரு வேட்பாளரையும் இது பாதிக்கவில்லை. பதிலாக ரஜனியின் இவ்வாறான நடவடிக்கைகளால் பா.ம.கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு பெருகியது. சும்மா கிடந்த சங்கை ரஜனி ஊதிக்கெடுத்துவிட்டார். தேர்தல் முடிவு களை நீங்கள் அறிந்திருப்பீர்கள் தானே.

தமிழ்நாட்டில் ரஜனி ரசிகர் மன்றங்கள் ஒரு பலம்வாய்ந்தசக்தி எனக் கருதப்பட்டன. ஆனால், இந்தத் தேர்தல் முடிவுகள் தமிழ்நாட்டில் சினிமா மாயைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கையின் ஆரம்பம் எனக்கூறலாம்.

தமிழ்நாட்டில் மதுரை, தென்காசி, நாகர் கோவில் மற்றும் கோவை ஆகிய தொகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள போட்டியிட்டன. கூட்டணியைச் சேர்ந்த அனைத்துத் தலைவர்களும் அனைத்துத் தொகுதிகளுக்கும்சென்று பிரசாரங்களை மேற்கொண்டனர். ஆனால், இந்த நான்கு தொகுதிகளிலும் கம்யூனிஸ்டுகள் வித்தியாசமான முறையில பிரசாரங்களை மேற்கொண்டனர். இக கட்சிகளின் தலைமைப் பீடங்கள் தமது கட்டுப்பாட்டில் உள்ள தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களை நேர காலத்துடன் இந்தத் தொகுதிகளுக்குச் சென்று பிரசாரத்தில் இறங்குமாறு பணித்தன. அதன்படி தெருக் கூத்துக்கள், மேடை நாடகங்கள் என்பன இந்தத் தொகுதிகளின் பல்வேறு இடங்களில நடத்தப்பட்டன. சாதாரண கிராமமக்கள் இவற்றால் ஈர்க்கப்பட்டனர். அவர்களது பிரசார உத்திகள் எவ்வாறு மக்களைத் தம்வசம் இழுத்தது என்பதற்கு நாகர்கோவில் தொகுதியில் முன்னாள் அமைச்சர் பொன்.ராமகிருஷ்ணன் (பா.ஜ. கட்சி) புதுமுக வேட்பாளர் பெல்லார் மின்னிடம் தோல்வியடைந்ததை உதாரணமாகக்கூறலாம்.

(வளரும்)



பண்டத்தரிப்பு புனித பத்திமா அன்னை ஆலயத்தின் திருத்தல நேர்ந்தளிப்பு ஓராண்டு நிறைவை முன்னிட்டு, அண்மையில் நடைபெற்ற "நன்றியால் பாடுகின்றேன்" என்ற ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திரு.நீ.மரியசேவியர் அடிகளார் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். இவ்விழாவுக்கு தலைமை வகித்த பண்டத்தரிப்பு பங்குத் தந்தை அருட்திரு.ம.பெ.ஞானரத்தினம் அடிகளாரும் அருகில் உள்ளார்.

(படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்.)

## நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 21 | 28 |
| 11 | 05 |
| 1934 | 2002 |



### திருமதி பூமணி சிவசுப்பிரமணியம்

துணையாக நின்று, தூய நல்வழிகாட்டி
நிறையாத வேளையில், நீங்கள் பிரிந்ததேனோ?
அணையாத விளக்காய் அவனியிலே என்றும்
அன்புயர்ந்த தெய்வமே, அம்மா எம் அகங்களில்
வாழ்ந்திடுவீர்.

*10/2 புகையிரத வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(32715) (38-21-13)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 10 | 02 |
| 01 | 06 |
| 1918 | 1999 |



### அமரர் ஏரம்பு சின்னத்துரை

திதி: 05-06-2004

ஐந்து ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்!

*"துரை மலர்ப்பொய்கை",*
**கனகேந்திரா தொலைத் தொடர்பு நிலையம்,**
*செட்டிவளவு லேன்,*
*இணுவில் மேற்கு, இணுவில்.*
T.P.No.Local 021-222-3715
Idd 0094 212223715

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
சகோதரன், சகோதரி,
மச்சான், மச்சாள்மார்.

(32415)(42-21-13)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

07-06-2004 திங்கட்கிழமை
- பகல் 11 மணி - கொடியேற்றம்.

11-06-2004 வெள்ளிக்கிழமை
- மாலை 7 மணி - தண்டிகைத் திருவிழா

14-06-2004 திங்கட்கிழமை
- மாலை 7 மணி - சப்பரத்திருவிழா

15-06-2004 செவ்வாய்க்கிழமை
- பகல் 10 மணி - தேர் உற்சவம்

16-06-2004 புதன்கிழமை
- பகல் 10.30 மணி - தீர்த்தோற்சவம்.
- மாலை 6 மணி - கொடியிறக்கம்.

17-06-2004 வியாழக்கிழமை
- மாலை 7 மணி சண்டேஸ்வரர் உற்சவம்.

*அடியார்கள் வருக! அருள் பெறுக!*

(சி-35389)(21-13)

கோயில் அறங்காவலர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
| --- | --- |
| 06 | 27 |
| 09 | 05 |
| 1957 | 2002 |



### அமரர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி

(SB மினிபஸ் உரிமையாளர்)

திதி: 05-06-2004

புன்னகை மாறா உன் அன்பு வதனம்
இன்றும் எம் கண் முன்னே நிழலாடுகிறது
உங்கள் கனவுகள் நனவாகும் முன்பே
காலன் கரம் பிடித்து சென்றதேனோ?
காலத்தின் வேகத்தில் மனத்தின் காயங்கள்
என்றும் ஆறுவதில்லை
உங்கள் அன்பும் பாசமும் அறிவுரைகளும்
எங்கள் நெஞ்சை விட்டு அகலாது
மறைந்துபோன அத்தியாயத்தின் அன்பு நினைவுகள்
கண்ணீரால் காணிக்கையாகும் அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*கரணவாய் தெற்கு*
*கரவெட்டி.*

உங்கள் நினைவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரன்
உற்றார், உறவினர்

(சி-35398)(21-13)

## நெஞ்சங்களை நெருடி நிற்கும் நீங்காத நினைவஞ்சலிகள்

### 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 11 | 26 |
| 06 | 04 |
| 1936 | 2004 |



நீர்வேலி வடக்கு, மாசிவன்

### கந்தையா சண்முகலிங்கம்

முன்னாள் முகாமையாளர்
(வலி. கிழக்கு ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கம்)

ஆண்டு தாரண ஆனதொரு சித்திரையீரேழு
பூண்டனைய பூர்வச் சப்தமியே ~ நீண்டபுகழ்
நிகரில் சண்முகலிங்க மெய்ந் தாயோன் தனவும்
உலகில் பிரிந்திட்ட நாள்.

இன்று (5-6-2004) சனிக்கிழமை அன்னாரின் 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன. பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*மாசிவன்,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

அன்பு மனைவி பூபதியம்மா,
மகன் மகாதேவன்
குடும்பத்தினர்.

### 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 30 | 23 |
| 03 | 05 |
| 1965 | 2001 |



### திருமதி சசிலேகாதேவி செந்தில்நாதன்

திதி: பிரதமை (19-5-2004)

ஆண்டு மூன்று போனாலும் ஆறிடுமோ எம் கவலை
வேண்டுமென்றோ பிரித்தான் வேலையில்லாக் காலனவன்
வயது முப்பத்தாறினிலே பிரித்துவிட்டான் உன்னை
கணவன் துயர் மாறவில்லை யிங்கே ~ இன்னும்
பிள்ளைகள்தான் ஆறவில்லை அம்மாவின் பிரிவால்
பெற்றோரும் கலங்கியே நிற்கின்றார்கள் உனைப்பிரிந்து
என்றுதான் மாறிடுமோ எம் கவலை ஏங்குகிறோம்
உன் நினைவால் இங்கே?

அன்புக் கணவர் முன்னாள் தே.வ.லிகிதர்
செந்தில்நாதன்.
பிள்ளைகள்: ஜயநிதா, நிஷானி.
தாய், மாமி, மைத்துனிமார்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(32609)(42-21-13)

## சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,ஜூன்5

அராலி, ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இறுதி நாளான இன்று சனிக்கிழமை பொங்கல், மடை, அபிஷேகம், விசேட பூசை என்பன நடைபெறவுள்ளன. (10-135)

☆ ☆ ☆

கொழும்புத்துறை,ஜூன்5

பாண்டியன்தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் 6 மணி வரை பெருமானுக்கு பால் சாத்தும் நிகழ்வும் நாளை காலை 7 மணி முதல் விஷேட அபிஷேகம், பூசைகள, தீப ஆராதனைகள், ஊஞ்சல், உறியடி, பஜனை என்பனவும் இடம்பெறவுள்ளன. (10-30)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஜூன்5

உடுவில், மல்வம், திருக்குடும்ப ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடு இடம்பெறும். நாளை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி, சொரூப ஆசீர் என்பன இடம்பெறவுள்ளன. (10)

☆ ☆ ☆

குடத்தனை,ஜூன்5

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைதோறும் நடைபெற்றுவரும வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவில் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிபர் க.யோகநாதன் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (10-78)

☆ ☆ ☆

வலி.தெற்கு,ஜூன்5

உடுவில் பெரியகுளம் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் விஷேட பொங்கல் பூசைகள், அபிஷேகம் என்பன நடைபெற்று அன்னதானம் வழங்கப்படும். (10-152)

☆ ☆ ☆

தென்மராட்சி,ஜூன்5

சாவகச்சேரி, கச்சாய் வீதி முதலிச்சிபுலம் நடராஜ முருகமூர்த்தி ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும்.

நாளையதினம் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.(10-117)

## இறுதிப் போட்டியும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஜூன்5

நாட்டுப்பற்றாளர் வி.ரி.ஏ.விஸ்வா ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு ஞானவைரவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுளளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக முகாமையாளர் நா.நாகேஸவரனும் சிறப்பு விருந்தினர்களாக புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், யாழ்.மாவட்ட விளையாட்டுப்பொறுப்பாளர் மாதுளன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (4)

## பாடசாலைகளில் நூலகங்கள்

குடத்தனை,ஜூன்5

வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் நிதியுதவியுடன் வடமராட்சி கிழக்கில் உள்ள மூன்று பாடசாலைகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, நடுக்குடத்தனை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றிலேயே நூலகங்கள் அமைக்கப்படுகின்றன. (4-78)


**சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி
2004 பரீட்சையில்
தோற்றியவர்களுக்கு
**A/L DAY Class**
ஆரம்பமாகி விட்டது.
உயிரியல், கணிதம்,
கலை, வர்த்தகம்
சகல பாடங்களும் நடைபெறும்.
(21-13) (32716)

# தமிழரின் அபிலாசைகளை எடுத்துரைக்க மாணவர் தினத்தில் அணிதிரள்வோம்!

## உயர்தொழில்நுட்ப மாணவர் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்5

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளையும், தமிழ் மாணவர்களின் பிரச்சினைகளையும் ஸ்ரீலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துரைக்கத் தமிழீழ மாணவர் எழுச்சி நாளில் ஒன்றுபட்டு அணிதிரள்வோம்.

இலங்கை உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் யாழ். மாணவர் ஒன்றியம் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டுவந்த தமிழ்த் தேசிய இனம் அடிக்கடி எழுச்சிகொண்டு தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையின் மூலம் எமது அபிலாசைகளையும், கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் பல்வேறு வடிவங்களில் எடுத்துரைத்து வருகின்றது. அந்தவகையில் மீண்டும் ஒரு தடவை மாணவ எழுச்சி மூலம் எமது அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் ஒரே குரலில் எடுத்துரைக்க தமிழீழ மாணவ சமூகமே அணிதிரளுங்கள்.

தமிழ்த் தேசிய இனத்தினுடைய விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்க முன்னர் இருந்து இன்று வரைக்கும் காலம் காலமாக எம்மை அடக்கி ஒடுக்கிய சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழ் மாணவர்களினது கல்வியையும் ஏதோ ஒரு வடிவத்தில் நசுக்கிக்கொண்டே வந்துள்ளன. இவற்றையெல்லாம் நாம் எதனையும் அனுமானிக்கமுடியாது.

தமிழ்மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைப்பதற்காக ஸ்ரீமாவோவின் அரசு அறிமுகப்படுத்திய தரப்படுத்தல் முறை தமிழ் மாணவர்கள் அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கியது. அப்போது அதற்கு எதிராகப் பல செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகத் தன்னை தமிழ் மாணவர் பேரவையில் இணைத்துக்கொண்டவர் தான் அண்ணன் சிவகுமாரன். தரப்படுத்தல்முறையை எதிர்க்கும் பல நடவடிக்கைகளை இனவாத அரசிற்கு எதிராக மேற்கொண்டவர் இவரே.

- இவ்வாறு தமிழ் மாணவர்களிற்காகப் பல்வேறு போராட்டங்களை நடத்திய இவர், 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் நாள் ஸ்ரீலங்காப் பொலீஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட போதுதான் உயிர்தப்பமுடியாத சந்தர்ப்பத்தில் தனது பேனாவிலே மறைத்து வைத்திருந்த "சயனைட்டை" உட்கொண்டு சாவடைந்தார். அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற தினமே தமிழீழ மாணவர் எழுச்சி நாளாக மாணவர் சமூகத்தினால் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவரின் மரணத்தைத் தொடர்ந்து விஸ்வரூபம் எடுத்தது ஈழத் தமிழரினுடைய சுதந்திரப்போர். அன்றிலிருந்து இன்றும் தொடர்ச்சியாக எமது மாணவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையானது தமிழ் மக்களினுடைய பலத்தினால் - தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தினால் - உருவாக்கப்பட்டது. இன்று நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையானது 19 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டது.

இவ்வாறான பலம்மிக்க எமது விடுதலைப் போராட்டத்தைப் புரிந்துகொள்ளாத பேரினவாத அரசுகள் எம்மை ஏமாற்ற முற்படுகின்றன. புதிதாக ஆட்சிப் பீடம் ஏறியுள்ள சந்திரிகா அம்மையாருடைய அரசு பேச்சைத் தொடங்கப் பின்னடிப்பது ஏனென்று எமக்கு விளங்கிக்கொள்ளவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கையிலே கூறப்பட்ட விடயங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இன்றும் எத்தனையோ பாடசாலைகள் இராணுவ முகாம்களாகக் காணபபடுகின்றன. மாணவர்கள் சுதந்திரமாகச் சென்று கல்விகற்க முடியவில்லை. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலே எத்தனையோ பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. எமது மக்களின் வாழ்விடங்கள் பல ஸ்ரீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாககப்பட்டுள்ளன. இதன்மூலம் எமது மாணவர்களினுடைய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மக்களினுடைய இயல்புவாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான எமது பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் எடுத்துரைப்பதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அனைத்துத் தமிழீழ மாணவர்களும் ஒற்றுமையுடன் அணிதிரள்வோம் - என்றுள்ளது.

# நடேசனின் குடும்பத்துக்கென புலம்பெயர் தமிழர் உதவி

யாழ்ப்பாணம்,ஜூன்5

படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் குடும்பத்திற்குப் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்கின்ற ஈழத்தமிழர்களால் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமரர் நடேசனின் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வருகின்ற ஈழத் தமிழர்களால் நடேசனின் குடும்பத்துக்கு வழங்கப்பட்ட நிதியினைச் செய்தியாளர் கனகரவி, திருமதி கௌரி நடேசனிடம் கையளித்தார். (9-5-7)



காரைநகர், சின்னாலடியில் இயங்கிவந்த காரைநகர் பிரதேச செயலகம், அண்மையில் வலந்தலையில் 2ஆவது உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மாடிக்கட்டடத்திற்கு மாற்றப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

காரைநகர்ப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய வே.சாம்பசிவம் நாடா வெட்டி அலுவலகத்தைத்திறந்து வைப்பதையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: காரைநகர்ச் செய்தியாளர்)*

# பொது நிர்வாக டிப்ளோமா; கற்கை நெறி விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ். பல்கலைக்கழகப் பட்டப்பின படிப்புகள் அலகின் பொது நிர்வாகப் பட்டப்பின் டிப்ளோமாக் கற்கை நெறியின் புதிய பிரிவு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் குறித்த தினத்தில் சகல ஆவணங்களுடன் யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் பீடாதிபதி அலுவலக மண்டபத்திற்கு வருகை தருமாறு பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.கே.சிற்றம்பலம் கேட்டுள்ளார்.

2004 - 2005 கல்வியாண்டில் விண்ணப்பித்திருந்தவர்களே இந்த நேர்முகப் பரீட்சைமூலம் மேற்படி கற்கை நெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பதாரர் தேசிய அடையாள அட்டை, கல்வித் தகைமை, தொழிற்றகைமை, சேவைச் சான்றிதழ் என்பனவற்றுடன் குறித்த நேரத்தில் வருகை தருமாறு பீடாதிபதி கேட்டுள்ளார்.

மேற்படி கற்கை நெறி ஒரு வருடம் ஆங்கில மொழிமூலம் மாலை நேர வகுப்புகளாக இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (4-185)

## நூல்கள் அன்பளிப்பு

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் நூலகப் பாவனைக்கென ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை கொழும்பிலுள்ள 'ஏசியன் பவுண்டேசன்' அமைப்பினர் அன்பளிப்பாக வழங்கி உள்ளனர். பாடசாலை அதிபர் க.செல்வகுமாரன் இந்நூல்களை கொழும்புக்குச் சென்று பெற்றுவந்துள்ளார். (4-152)

# தமிழீழத்தின் கட்டுமானப் பணிகளுக்கு புலம்பெயர் இளையோர் பங்களிப்பு அவசியம்

## நோர்வே தமிழ் இளையோர் அமைப்புக் கோருகிறது

ஒஸ்லோ,ஜூன்5

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழரில் இளைய தலைமுறை தாம் பெறும் அனுபவங்களைத் தமிழீழத்தின கட்டுமானப் பணிகளுக்கும் அபிவிருத்திக்கும் வழங்கவேண்டுமென்று நோர்வே தமிழ் இளையோர் அமைப்புக் கோரியுள்ளது.

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை ஒட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பு தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி நாளை முற்பகல் 11மணிக்கு நோர்வேயில் ரொம்மன் வளாகத்தில் உள்ள அன்னை பூபதி தமிழ்க்கலைக் கூடத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடக்குமுறைக்குள்ளான மக்களின் உரிமைக் குரலாக ஒலித்து, அம்மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழுகின்ற போர்க்குணத்தை மக்கள் மனங்களில் விதைக்கின்ற ஆற்றல் மாணவர் சமூகத்திடம் அதிகமுண்டு. இனவிடுதலைப் போராட்டப் பாதையில் மாணவ சமூகத்தின் பங்களிப்பென்பது முக்கியத்துவம் வாய்ந்தது. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் மாணவர் சமூகத்தின் பங்களிப்பைப் பதிவாக்கிய தனியான, தனித்துவம் வாய்ந்த அத்தியாயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இன்று தாயகத்தை மீட்டெடுக்கின்ற இலக்கைநோக்கி விருட்சமாய் வளர்ச்சியுற்று, விடியலின் வாசலை நெருங்கியிருக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டவர்களும் அதனை வீறுகொண்டு எழுச்சிகொள்ளச் செய்தவர்களும் அன்றைய மாணவர்களே.

சிங்கள இனவாதத்தால் தமிழ் மக்களுக்கெதிரான கொடுமைகளும், படுகொலைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழ்மக்களின் சுதந்திர இருப்பு சிதைக்கப்பட்டது. இந்நிலையில் தான் அன்று மாணவனாக விருந்த தியாகி பொன்.சிவகுமாரன், தமிழ்மக்களின் உரிமைகள் மீட்கப்படுவதற்கும் சுதந்திர இருப்பை உறுதி செய்வதற்கும் ஆயுதப்போராட்டமே சரியான மார்க்கம் என்பதை உணர்ந்து சிங்கள இனவாதத்திற்கெதிராக ஆயுதமேந்திய போராட்டத்தை முன்னெடுத்தார். தமிழ்மக்களின் விடியலுக்காகப் போராடி தியாகி பொன். சிவகுமரன் அவர்கள் சிங்களப் படைகளால் பலதடவைகள் சிறையில் அடைக்கப்பட்டு மோசமான சித்திரவதைகளுக்குட்படுத்தப்பட்டார். எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்டபோது, எதிரிகளிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற உயர்ந்த இலட்சியத்தைத் தாங்கி சயனைட் அருந்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முதல் போராளியாய் 1977 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் நாள் தியாகி பொன். சிவகுமாரன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். தமிழீழ மக்கள் மனங்களில் விடுதலைத் தீப்பொறியை இட்டுச்சென்ற அம்மாவீரனின் நினைவு நாளாகிய ஜூன் 5இற்கு அடுத்தநாள் (ஜூன் 6, ஜூன் 5உலகச் சுற்றாடல் தினம் என்பதால் சுற்றாடல் தினத்திற்கு மதிப்பளிக்கும் பொருட்டு) தமிழீழ மாணவர் எழுச்சிநாளாக பிரகடனப்படுத்தப்பட்டு தமிழீழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

எனவே, இளைய சமுதாயத்தின் சக்தியென்பது மிகப்பெரியது. இவர்கள் முற்போக்குச் சிந்தனைகளும் வளர்ச்சிநோக்கிய மாற்றத்திற்கான புதிய எண்ணங்களும் கொண்டவர்கள். இன்றைய இளைஞர்கள்தான் நாளைய சமூகத்தை வழிநடத்தப்போகின்றவர்கள். ஆகவே, இளைய தலைமுறையினர் சமூக அக்கறையுடையவர்களாகவும் தேசத்தின் மீதும் தேசியத்தின் மீதும் பற்றுறுதியுடையவர்களாகவும் உருவாகவேண்டும். அந்த அடிப்படையில் புலம்பெயர் தேசங்களில் கிளை பரப்பியுள்ள தமிழ் இளையோர்கள் மீது தமிழீழ தேசமானது மிகுந்த நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இளைய சமுதாயம் ஒன்று திரட்டப்படவேண்டும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலைமைகளும் போராட்டத்தின் நியாயப்பாடும் இளைய தலைமுறையினரால் தெளிவாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும். புலம்பெயர் தேசங்களில் வாழும் இளைய தமிழர்கள் அறிவியல் - தொழில்நுட்பம் மற்றும் ஏனைய துறைசார்ந்து இந்நாடுகளில் தாம்பெறுகின்ற அறிவையும் நிபுணத்துவத்தையும் தமிழீழத்தின் அபிவிருத்திக்கும் கட்டுமானப் பணிகளுக்கும் வழங்கவேண்டும். இது ஒவ்வொருவரினதும் தேசியக் கடமை என்பதை ஒவ்வொரு தமிழ் இளையோரும் உணர்ந்துசெயற்படுவது அவசியமானது - என்றுள்ளது.

## மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி,ஜூன்5

சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் அருட்திரு. ஜே.வசந்தகுமார் அடிகளார் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்துகொள்வார்.(4-117)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ். நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் மன்ற திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

சங்கிலியன் மன்றத் தலைவர் ச.பிறேமதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து நடைபெறும கலை நிகழ்வுகளில் கே.ரி.இராசகுலேந்திரனின் 'ஒரு மண்ணும் தெரியாது' எனும் இசையும் கதையும் மற்றும் தலைமைக் கவிஞர் நல்லை அமிழ்தனின் 'கார்த்திகைப் பூ' எனும் தலைப்பிலான கவிதை அரங்கமும் என்பன இடம்பெறும். (4-6)

# புலிகளின் மருத்துவமனை பாட்டாளிபுரத்தில் திறப்பு

திருகோணமலை,ஜூன்5

திருகோணமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மூதூர் தெற்கு பாட்டாளிபுரம் கிராமத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்திலான மருத்துவமனை ஒன்று நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாட்டாளிபுரம் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களில்வாழும் மக்கள் 24 மணி நேரமும் இங்குள்ள மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொள்ளமுடியும் என விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் காருண்யா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மூதூர் பிரதேச பொறுப்பாளர் தங்கன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

மாவட்ட கட்டளைத் தளபதி சொர்ணம் இந்த மத்துவமனையின் பெயர்ப் பலகையினைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

கேணல் பானு மருத்துவமனையினைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சமூகமளித்திருந்த தமிழீழ சுகாதாரப் பணிப்பாளர் அருண், வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்தகைய பதினொரு மருத்துவமனைகளைப் பொறுத்த வரை திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் -

இதனைத் தொடர்ந்து விடுதலைப புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களின் மருத்துவ சேவையினை மேம்படுத்தும் வகையில் மேலும் பல மருத்துவமனைகளை இந்த மாவட்டத்தில் எதிர்காலத்தில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் - தெரிவித்தார்.

இங்கு தலைமை வைத்தியராக நியமனம்பெற்ற மருத்துவர் வேணியன், நோயாளர்களுக்கான சிகிச்சையினை ஆரம்பித்து வைத்துள்ளார். (4-187)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான Prima, Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் 07-06-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறை கிளையிலும் Suddi Farm வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம் முன்கூட்டி பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (32515)

புறொயிலர் இறைச்சிக்கோழி சுத்தம் செய்துகொடுக்கப்படும், 15 நாள் நிரம்பிய Brown பேட்டுக் குஞ்சும் சேவற்குஞ்சும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சிவகுமாரன், இல.19, புலவனார் வீதி, (பெற்றோல் செற்றுக்கு அண்மையில்) கல்வியங்காடு. (32748)

புறொயிலர் 1KG 180/-, கல்பேட் 150/- மற்றும் கோழி எரு விற்பனைக்குண்டு I.New R S.K. Farm மானிப்பாய் றோட், உடுவில், மதவடி, II. New R.S.K. Farm, மான்ஸ் பாடசாலை வீதி. (32719)

27/17, புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணத்தில் அழகிய மேல்மாடியுடன் (மொட்டை மாடியுடன் - சமுர்த்தி வங்கிக்கு முன ஒழுங்கையில்) நல்ல சூழலில் வாகனத் தரிப்பிட வசதியுடன் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 305533, 0777 570279. (சி-35429)

இரும்புப்பெட்டி, வீணை, ஆட்டுக்கல் என்பன விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் பார்வையிடலாம். தொடர்பு: 34/3, உடையார் லேன், பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (32738)

நல்ல நிலையில் பாவனையிலுள்ள Honda C70 Econo Power, Yamaha Mate 50, England வில்லியர்ஸ் MK 20 நீர் இறைக்கும் இயந்திரம், பழைய Raleigh சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தர்மச்சந்திரன், அரசகேசரிப் பிள்ளையார் கோயிலடி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி T.P. 077 6258191, 0776086140. (32727)

Gx - இலக்கமுடைய குபோட்டா லாண்ட் மாஸ்ரர் கலப்பையுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (32713)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

இந்துக் கல்லூரி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு தயாளன் என்பவரால் கைதடிச்சந்திக்கும் நுணாவில் சந்திக்கும் (A9) இடையில் பெருந்தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இப்பணத்தை உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (32744)

## சைவநெறித்தேர்வுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ். சைவபரிபாலன சபையினரால் வருடாந்தம் நடத்தப்படும் அகில இலங்கை சைவநெறித் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 2முதல் தரம் 12 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் இந்தத் தேர்வுக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று சைவ பரிபாலனசபையின் பரீட்சைச் செயலாளர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர் வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (எ)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்5

யாழ்.மாவட்டப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்விக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்பாகச் சில தரவுகள் திரட்டப்படவேண்டியுள்ளதால் சகலரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (-3)

**சாரதி தேவை**

BUS மற்றும் சகல வாகனங்களும் ஓட்டக்கூடிய சாரதி தேவை வயதெல்லை 40இற்கு மேல். யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
T.P: 0777-110531
0777-738146

(32720) (21)

# அமைதித் தீர்வுக்கான பேச்சை உடன் ஆரம்பிக்குமாறு உதவும் நாடுகளின் இணைத் தலைமை வலியுறுத்து

இலங்கைப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் பேச்சுக்களை விரைந்து ஆரம்பியுங்கள்.

- இவ்வாறு இயன்ற கடுந்தொனியில் தெரிவித்திருக்கின்றன இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமை நாடுகள்.

சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படாதவிடத்து இலங்கைக்கு உதவியளிக்க உதவும் நாடுகள் உறுதியளித்த நிதியுதவிகள் கைநழுவிப் போகும் ஆபத்து உள்ளது என்றும் அவை எச்சரித்திருக்கின்றன.

உதவும் நாடுகளுக்கு வேறு தரப்புகளிலிருந்து பல கோரிக்கைகள், எதிர்பார்ப்புடனான கேள்விகள் இருப்பதால் அந்த நாடுகளின் கவனமும் நிதி உதவியும் - இங்கு சமாதானப் பேச்சுகளில் முன்னேற்றம் காணப்படாவிட்டால் - வேறு இடத்துக்குத் திரும்பிவிடும் எனவும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத்தலைமை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கையின் மீளமைப்பு, அபிவிருத்தி தொடர்பான டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமைகளான அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றின் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை பெல்ஜியம் தலைநர் பிரஸல்ஸில் நடைபெற்றது.

இலங்கை அரசும் - புலிகளும் பேச்சுக்களைத் தொடங்க உறுதி பூண்டிருப்பதை இணைத்தலைமை நாடுகள் வரவேற்றன.

பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான அனுசரணைப் பணிக்கு நோர்வேயை அழைத்த ஜனாதிபதியின் முடிவை அவை பாராட்டியுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இது விடயத்தில் சேர்ந்து உழைப்பதை எதிர்பார்த்திருப்பதாகவும் அவை தெரிவித்தன.

பேச்சை மீள ஆரம்பிப்பதற்கு நோர்வேயை அழைத்து புலிகள் எடுத்த பதில் நடவடிக்கையையும் அவை பாராட்டின.

இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் இந்தப் பேச்சுக்களுக்கு ஆதரவளிக்கும்படி அவை வேண்டின.

அனுசரணையாளர் என்ற சவால் தரும் நோர்வேயின் பங்குபணிக்குத் தொடர்ந்தும் தமது முழு ஆதரவை இணைத்தலைமை நாடுகள் மீள உறுதிப்படுத்தின.

நோர்டிக் நாடுகளின் கண்காணிப்புக் குழுவின் உதவியுடன் யுத்தநிறுத்தம் பரந்தளவில் கடந்த இரண்டு வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையிட்டுத் தாங்கள் மிகுந்த திருப்தியடைவதாகவும் அவை தெரிவித்தன.

எனினும், கிழக்கில் அண்மைக் காலத்தில் படுகொலைகள் அதிகரித்து வருவது தொடர்பாகத் தமது கவலையை அவை வெளிப்படுத்தின.

அத்தகைய அனைத்துக் கொலைகளையும் கண்டித்து அந்நாடுகள், அமைதிக்கான அடிப்படையாக யுத்த நிறுத்த உடன்பாட்டை முழு அளவில் மதித்து, நடைமுறைப்படுத்த இயன்ற அனைத்தையும் செய்வதற்கு முன்வருமாறு இரு தரப்புக்கும் அழைப்பு விடுத்தன.

முழுப் பாதுகாப்பு நிலைமையையும் கண்காணிப்புக் குழுவின் உதவியோடு மேம்படுத்துவதற்கு மட்டக்களப்பில் அரசும், படைகளும், புலிகளும் அண்மையில் இணக்கம் கண்டிருப்பதை இணைத்தலைமை நாடுகள் வரவேற்றிருக்கின்றன.

படையிலிருக்கும் சிறுவர்களை விடுதலைப் புலிகள் விடுவித்திருப்பதும் இதுவிடயத்தில் யுனிசெவ்வுடன் சேர்ந்து இயங்குவதற்குப் புலிகள் உறுதிப்பாடு கொண்டிருப்பதும் தங்களை உற்சாகப்படுத்துவதாக அவை தெரிவித்துள்ளன.

படைக்கு ஆள்கள் திரட்டப்படுவதாக வெளியாகும் செய்திகள் குறித்துக் கவலை தெரிவித்துள்ள அவை வயதுகுறைந்த சிறுவர்களைப் படைக்குச் சேர்ப்பதைத் தவிர்க்கும்படியும், படையில் எஞ்சியிருக்கும் வயது குறைந்த சிறுவர்களை விடுவிக்கும்படியும் புலிகள் அமைப்பை கேட்டுள்ளன.

அவ்வாறு விடுவிக்கப்படும் சிறுவர்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு வீடு இல்லாவிட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பான இடங்களை அமைத்துக்கொடுப்பதற்கான நிதி உதவியை 'யுனிசெவ்' மூலம் வழங்குவது குறித்து உதவும் நாடுகள் பரிசீலிக்கும் என்றும் இணைத்தலைமை நாடுகள் தெரிவித்தன.

ஒழுங்காகத் திட்டமிட்ட பேச்சுகள் ஆரம்பிப்பதையும் அந்தப் பேச்சுக்களின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே அபிவிருத்தி உதவிகள் வழங்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது என்பதையும் கவனித்து, அந்நிலை ஏற்பட்டதும், ஏற்கனவே ரோக்கியோவில் வழங்கிய உறுதிப்பாட்டின் அடிப்படையில் உதவிகளை வழங்கத்தயாராக இருக்கும்படி உதவி வழங்கும் நாடுகளை அவற்றின் இணைத்தலைமை நாடுகள் கேட்டுள்ளன.

அத்தகைய உதவிகள் மிகுந்த வறுமை நிலையையும், பிணக்கினால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் முக்கியமாகக் கவனத்தில் எடுத்து நாடு முழுவதற்கும் விஸ்தரிக்கப்படவேண்டும் என்பதை இணைத் தலைமை நாடுகள் அங்கீகரிக்கின்றன. அதேசமயம், எங்கெங்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவேண்டுமோ அங்கங்கு அவை தொடர்ந்து வழங்கப்படுவது அவசியமாகும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

வலுமிக்க உலக, பொருளாதார மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளையும் அவை தொடர்பாகத் தேவைப்படும் சீர்திருத்தங்களையும் பின்பற்றி நடைமுறைப்படுத்துமாறும் இணைத்தலைமை நாடுகள் அரசைக கேட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக -

வடக்கு-கிழக்குக்கு செயற்றிறன் உள்ள ஒரு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்படும் வரை வடக்கு - கிழக்கில் உதவும் நாடுகளின் நிதியுதவியுடனான அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்றிறனுடன் முன்னெடுப்பதற்கான ஒரு முறைமையைத தரக்கூடிய நிறுவகத்தை ஏற்படுத்தும்படி, சம்பந்தப்பட்ட தரப்புகளை இணைத்தலைமை நாடுகள் ஊக்கப்படுத்தியுள்ளன. (க)

# வீதி விபத்துக்களில் கடந்த ஆண்டு 220 சிறுவர் மரணமாகியுள்ளனர்.

## அமைச்சுச் செயலாளர் வெளியிட்ட தகவல்

கொழும்பு,ஜூன்5

கடந்த வருடம் மட்டும் இரு நூற்று இருபது சிறுவர், சிறுமியர்கள் வீதி விபத்துக்களில் மரணமாகியுள்ளார்கள்.

கடந்த வருடம் ஏற்பட்டுள்ள சுமார் 2 ஆயிரம் வீதி விபத்து மரணங்களில இவர்களும் ஒரு பகுதியாவர்.

பொதுப் பாதுகாப்பு சட்ட ஒழுங்குகள் அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

தினமும் இலங்கை வீதிகளில் குறைந்தது ஐந்து அல்லது ஆறு மரணங்கள் ஏற்படுகின்றன என்று அவர் கூறினார்.

"மரியாதையான சாரதிகள் வாரம்" ஆரம்பிக்கப்படவிருப்பதையொட்டி செய்தியாளர்களிடம் பேசுகையில் கடந்த வருடம் மட்டும் 220 பாடசாலைச் சிறுவர்கள் வீதி விபத்துக்களில கொல்லப்பட்டுள்ளார்கள். 1993 விபத்து மரணங்கள் ஏற்பட்டுள்ளன என்றார் அவர். வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருவது பற்றி கவலை தெரிவித்த அவர், வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு பொதுமக்கள் பொலீஸாருடன ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

"மரியாதையான சாரதிகள் வாரம்" ஜூன் 21 ஆம் திகதியிலிருந்து 28 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் என்றும் வீதிவிபத்துக்களைத் தவிர்க்கும் விடயத்தில் இந்தக் காலபகுதியில் கவனம் செலுத்தப்படும் என்றும் கூறினார்.

கடந்த வருடம் 59, 444 வீதிவிபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாகக் கூறிய ரணவிராஜா இவைகளில் 3,919 விபத்துக்கள் பாரதூரமானவை என்றார். 39,848 விபத்துக்களில் சொத்துக்களுக்கும் வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்துக்கள் அதிகரித்துவரும் அதேவேளை, விபத்துக்களை அடுத்து வீதிகளை பொதுமக்கள் தடை செய்வதும், வாகனங்களைத் தாக்குவதும், தீயிலிடுவதும் கூட அதிகரித்திருக்கிறது என்றார்.

கடந்த ஆண்டில் 311 சைக்கிள் ஓட்டிகள், 399 மோட்டார் சைக்கிலோட்டிகள், 68 பாதசாரிகள் கொல்லப்பட்டிருப்பதாக அவர் தகவல் வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி விபத்துக்களுக்கான பிரதான காரணங்களில் வேகமாக வாகனம் செலுத்தப்படுவது, மதுபோதையில் வாகனம் செலுத்துதல், வீதி ஒழுங்குகளை அனுசரிக்காமல் வாகனம் ஓடடுதல், அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல் மற்றும் பாதசாரிகள் வீதி ஒழுங்கு விதிகளை கடைப்பிடிக்காமை என்று விளக்கினார். வீதிகள் சீராக பராமரிக்கப்படாமை, வீதி சமிக்ஞைகள் அடையாளங்கள் போடப்படாமை போன்றவையும் வீதி விபத்துக்கு காரணமாக அமைகின்றன என்றார்.

இந்த நிகழ்வு பற்றி பொலீஸ்மா அதிபர் இந்திராடிசில்வா கருத்து வழங்கையில் மரியாதையான சாரதிகள் வாரம் தொடர்ந்து அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால் சாரதிகள் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதேசமயம் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும் என்றார். பாதசாரிகள் வீதி ஒழுங்குகளை சரியாகக் கடைப்பிடித்தால் வீதி விபத்தை தவிர்ப்பது சுலபம் என்றும் அவர் கூறினார். (ப)

## உள்ளத்தை உருக்கும் நினைவலைகள்

6 ஆம் ஆண்டு 8 ஆம் ஆண்டு



அமரர் தம்பிஐயா பாலகிருஷ்ணன்

திருமதி யோகேஸ்வரி பாலகிருஷ்ணன்

23.10.1930 ← தோற்றம் → 05.05.1940

12.06.1998 ← மறைவு → 09.05.1996

மாணிக்க பவனம்,
86. நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(32750)(21-12-19)

## மரண அறிவித்தல்

### இராஜேந்திரம் எமிலியானுஸ்



யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரம் எமிலியானுஸ் அவர்கள் 03.06.2004 வியாழக்கிழமை அதிகாலை இறையடி சேர்ந்தார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*இல.9,3ஆம் குறுக்குத்தெரு,*
*பாஷையூர், யாழ்ப்பாணம்.*
*T.P.077-6063827*
*0777-222-215*

(32746)(37)

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

# சுற்றுச்சூழலை மாசடைய வைப்பதன் மூலம் தன் தலையில் தானே மண்போடும் மனிதகுலம்

**ஐ.நா.சபையால் ஜூன் 5 ஆம் திகதி சூழல் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் இம்மாதத்தை சூழல் விழிப்புணர்வு மாதமாக அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**


மனிதன் சூழலை மாசடையச் செய்யும் கொடுமையில் ஒரு துளி.யாழ் நகரை அண்டியுள்ள பொம்மைவெளியில்....!

இயற்கை தந்த பெருஞ்செல்வம் சூழல். உலகத்தில் கவலைதரும் விடயங்களில் சூழல் மாசடைதல் முக்கியமானது. சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினைகளுடன் இன்று சர்வதேச ரீதியில் அலசி ஆராயப்படு கின்ற விடயமாக சூழல் மாசடைதல் (Environmental Pollution) உரு வெடுத்துள்ளது.

இன்று நிலம், நீர், காற்று என்று எல்லா நிலைகளிலும் சூழல் மோச மாக மாசடைந்து வருகின்றது.

சூழல் எனும்போது நிலம், நீர், மண், விலங்குகள், வளிமண்டலம் ஆகியவற்றை இயற்கைச் சூழல் எனலாம் மானிடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்கள், பயிர்கள், நிலங்கள், தொழிற்சாலைகள், சமய, கலை நிர்மாணங்கள் போன்றவை கலாசார சூழல் ஆகும் மனிதனின் பாது காப்புக்காகக் காணப்பட்ட சூழலை இன்று மனிதன் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் சூழலைக் குழப்பும் பிரதான காரணியாக மனிதனே காணப் படுகிறான். எனவே சூழலைப் பேணு வது மனிதனின் கட்டாய கடமையா கவும் ஆகின்றது.

### மாசடைதல்

சூழலில் ஏற்படுத்தப்படும் பாத கமான அதேவேளை மீள முடியாத விளைவுகளே சூழல் மாசடைதல் எனப்படுகின்றது. மாசடைதலுக்குப் பிரதான காரணமாக சனத்தொகைப் பெருக்கம் அமைகின்றது.

**முகுந்தன்**

மனிதன் தனது தேவைகளை நிறைவு செய்வதற்காக சூழலில் மாற் றத்தை ஏற்படுத்துகின்றான்.

இன்று, மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற நிலைக்கு சூழல் மாற்ற மடைந்துள்ளது. மனிதனின் திட்ட மிடாத வேலைத்திட்டங்களினாலேயே இம்மாற்றங்கள் ஏற்பட்டன.

18 ஆம் நூற்றாண்டு வரையில் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களைவிட கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் சூழலில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் அதிகம் எனத் தகவல்கள் கூறுகின் றன. 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சியின் விளைவே சூழலில் ஏற்படுத்தப்பட்ட இந்த மிகப் பெரிய மாற்றத்துக்குக் காரணமாகும்.

சூழலை அவதானிக்காது மனிதன் தனது வளர்ச்சியில் மட்டும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறான்.

### இரசாயன வளமாக்கிகள்

நிலம் மாசடைதலில் பிரதானமாக இரசாயன வளமாக்கிகளின் பாவனை குறிப்பிடத்தக்கது. இலங்கையின் நிலப் பரப்பில் சுமார் 3இல் ஒரு பகுதியில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கையில் உள்ள விவசாயி கள் ஒரு ஹெக்ரேயருக்கு 77கிலோ கிராமிலும் அதிகமான வளமாக்கிகளை (Fertilizers) (சில இடங்களில் 124 கிலோ கிராம்) பயன்படுத்துகின்றனர். அதாவது ஏனைய நாடுகளிலும் பார்க்க இது இரண்டு முதல் எட்டு மடங்கு அதிகமான அளவு பாவனை எனப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

விவசாய இரசாயனப் பொருள்களில் (Agro Chemicals) குறிப்பாக கிருமி நாசினிகளின் பயன்பாடு சூழல் மாச டைதலுக்கு முக்கிய காரணமாகும். இவை உயர் நச்சுத் தன்மை கொண்ட வையாகும். இலங்கையில் கிருமி நாசினிகளின் பாவனை விரைவாக அதிகரித்து வருகின்றது எனப் புள்ளி விவரங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகளில் இருந்தும் மற்றும் மனிதனின் செயற்பாட்டின் மூலமும் தோற்றுவிக்கப்படும் இரசா யனப்பொருள்கள் சூழலில் நஞ்சாக் கத்தை ஏற்படுத்துகின்றன.

### அழிக்கும் அகழ்வு

இலங்கை உயர்ந்த அளவில் கனிய வளங்களைக் கொண்டுள்ளது. கனிமங் களை அகழ்ந்தெடுப்பது (Mineral mining) சூழலியல் ரீதியில் பல தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

இரத்தினக் கற்கள் அகழ்ந்தெடுப்பு, முருகைக்கற்கள் (கடல்வாழ் சீலந்தி ரேற்றாக்கள்) அகழ்ந்தெடுப்பு மற்றும் மணல் அகழ்ந்தெடுப்பு என்பன பல சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்து கின்றன. ஆற்றுப்படுக்கையில் இருந்து உயர் அளவில் மணல் அகழ்ந்தெடுக் கப்படுவதனால் கரையோரப் பிரதே சத்தில் ஏற்படும் இழப்பு ஈடுசெய்யப் படமாட்டாது.

கல் உடைக்கும் தொழிலால் ஏற் படும் சூழல் மாசாக்கலும் மோசமா னது. இதனால் வளியுடன் தரைப் பிரதேசமும் பாதிக்கப்படுகின்றது.

வாகனங்களில் எரிபொருள் தகன மடையும்போது வெளியேறும் பதார்த் தங்களால் வளி மாசடைகிறது. இம் மாசடைவைக் கட்டுப்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை (Central Environmental Authority) சில திட்டங்களை முன்வைத்துள்ளது.

### காற்றுக்கு ஏற்படும் தீங்கு

மனிதர்களின் செயற்பாட்டினால் வளிமண்டலத்தில் கலக்கும் பொருள் களினால் வளி மாசடைகின்றது. தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு தீமை ஏற்படுத்தும் துணிக்கைகள் வளிமண்டலத்தில் காணப்படுதலே வளிமாசடைதல் எனக் கூறப்படுகிறது.

அதிகரித்துவரும் உலக சனத் தொகையும் அதனுடன் தொடர்பான தொழிற்சாலை மயமாக்கல், வீடமைப புக் குடியேற்றத் திட்டங்கள், அதி கரிக்கும் போக்குவரத்து என்பன வளிமாசடைதலுக்கு முக்கிய காரணங் களாகும்.

வளி மாசடைதலால் பாதிப்படையும் கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வ தற்கு அமெரிக்க அரசு, 20 லட்சம் டொலர்களைச் செலவு செய்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் பிரதான வளிமாசாக்கியாத காபன் மொனொக்சைட்டும் (Co) அதற்கு அடுத் ததாக கந்தகவீரொட்சைட்டும் ($SO_2$) கருதப்படுகின்றன.

### தண்ணீர் மாசடைதல்

தண்ணீரை உபயோகப்படுத்த முடியாத நிலை, தண்ணீரின் இயற் கைத் தன்மை மாறுபடல் மற்றும் தண்ணீரில் வேறு பொருள்கள் சேர்தல் போன்றவை தண்ணீர் மாசடைதலைக் குறிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் அபிவிருத்தித் திட்டம், இந்த ஆண்டில் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய சூழற்பிரச்சினையாக, கடல் களையும், சமுத்திரங்களையும் அடை யாளப்படுத்தியுள்ளது. 'தேவை! கடல களும் சமுத்திரங்களும்.பிணமாகவா - உயிருடனா?' (wanted! seas and oceans: dead or Alive) என்பது இம்முறை கருப்பொருள் ஆகியுள்ளது.

தெற்கு ஆசியாவிலேயே கூடுதலான கடல்வள வாய்ப்பை இலங்கையே பெற்றிருக்கிறது. அதிலும் தமிழர் தாயகம் எனப்படுகின்ற வடக்குக் கிழக்குப் பகுதியின் கடல் வளம் பல சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் மொத்த கரையோர நீளமாகிய ஆயிரத்து 739 கிலோ மீற்றர்களில் ஆயிரத்து 162 கிலோ மீற்றர்கள் (அதாவது 67 சதவீதம்) தமிழர் தாயகத்துக்குரியது. உவர் நீர் ஏரிகளிலும் 70சதவீத கடற்பரப்பு மட்டக்களப்பு, திருகோணமலை, முல் லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் விரிந்து கிடப்பதாக தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிக் கிறது.

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமை யாததாக தண்ணீர் விளங்குகின்றது.

இதனால் தண்ணீர் மாசடைவதால் உயிர்கள் பெருமளவில் பாதிக்கப்படு கின்றன. தண்ணீரை அசுத்தப்படுத் தல், தண்ணீரை வீண் விரயம் செய்தல் என்பன தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. இன்று, இலங்கையில் 114 மில்லியன் லீற்றர் தண்ணீர் வீணடிக்கப்படுவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. 21 ஆம் நூற்றாண்டில் நீரைப் பகிர்ந்து கொள் ளும் பிரச்சினையில் யுத்தம் ஏற்பட வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடப் பட்டுள்ளது.

வீட்டு விலங்குகள் மற்றும் தொழிற சாலைக் கழிவுகளால் தண்ணீர் மாச டைகிறது. நச்சுப்பதார்த்தங்கள், போச ணைப் பதார்த்தங்கள், எண்ணெய்கள், நுண்ணங்கிகள் மற்றும் படிவுகள் போன்றன நீர் நிலைகளை அடைந்து மாசாக்கின்றன.

### கடலுக்கும் கேடு

எண்ணெய்க் கிணறுகள் மற்றும் தாங்கிகளில் இருந்து வெளியேறும் கழிவுகளும் கப்பலில் எடுத்துச் செல்லப் படும் போது சிந்தப்படும் எண்ணெயும கடல் நீரை மாசுபடுத்துகின்றன. ஒவ் வொரு ஆயிரம்தொன் எண்ணெய்க்கும் ஒரு தொன் எண்ணெய் சமுத்திரத்தை அடைவதாகப் புள்ளி விவரமொன்று கூறுகின்றது.

கொழும்பு நகரில் வாழும் மொத்த சனத்தொகையில் 10 -15 வீதமானவர் கள், கழிவுகளை மேற்பரப்பு நீர் இணைப புத் தொகுதிக்குள் செலுத்துகின்றனர். களனி ஆற்றினுள் நாள் ஒன்றுக்கு 90 ஆயிரம் கனமீற்றர் வரை கழிவு பாய்ச்சப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் கழிவகற்றல் ஒரு வழித்தொகுதியாகக் காணப்படுவத னால் கழிவுகள், சுண்ணாம்பு பாறை களில் காணப்படும் பிளவுகள் மூலமா கச் சென்று நிலக்கீழ் நீரை மாசுபடுத்து கின்றன. யாழ்ச் சுநாட்டில் காணப் படும் நீர் நிலைகளே இலங்கையில் உயர் செறிவில் நைத்திரேற்று அயன் களைக் (200mg/l) கொண்டுள்ளன.

### பச்சைவீட்டு விளைவு

பூமியின் மேற்பரப்பின் வெப்ப சமநிலை பேணலிலும் தற்போது குழப்பம் ஏற்பட்டுள்ளது. பச்சை வீட்டு விளைவு (Green house effect) எனப்படும் தோற்றப்பாட்டால் பூமியின் மேற்பரப்பின் வெப்பநிலை அதிகரித்துள்ளது. இந்த விளைவின் காரணமாக 2050 ஆம் ஆண்டில் பூமி யின் வெப்பநிலை $1.5^{\circ}c$-$4.5^{\circ}c$ வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பினால் உலக காலநிலை யிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

### ஓசோன் சிதைவு

பூமியின் வளிமண்டலத்தில் காணப்படும் ஓசோன்($O_3$) வாயுப்படை சிதைவடைந்து வருகிறது. இதனால் தீங்கு விளைவிக்கும் பிற ஊதாக் கதிர்கள் பூமியை அடைகின்றன. ஓசோன் படையில் ஏற்படும் 16வீத இழப்புக் காரணமாக பூமியை அடை யும் தீங்குவிளைவிக்கும் கதிர்களின் அளவு 14வீதத்தால் அதிகரிக்கி றது.

தொழிற்சாலை மயமாக்கலும் கூட்டு எரிபொருள்களின் பாவனையின் அதி கரிப்பின் காரணமாகவும் எழுந்துள்ள விளைவு அமில மழைஆகும் வளிமண் டலத்தில் கந்தகவீரொட்சைட்டின் ($SO_2$) அளவு அதிகரிப்பதால் அமில மழை என்ற தோற்றப்பாடு ஏற்படுகிறது.

$$SO_2(g) + H_2O(l) \rightarrow H_2SO_3(aq)$$
$$\downarrow O_3$$
$$SO_3 + H_2O(l) \rightarrow H_2SO_4(aq)$$

**அமிலமழை உருவாகுவதற்கான இரசாயனச் சமன்பாடு**

நைதரசன் ஒட்சைட்டு மற்றும் காபன துணிக்கைகளும் ஒட்சியேற்றப்பட்டு அமில மழையின் உருவாக்கத்தில் பங்கு கொள்கின்றன. தூய மழைநீரின் pH பெறுமானம் 5.6-6வரை ஆகும். அமிலமழையின்pH பெறுமானம் 4-4.5 வரை வேறுபடலாம்.

### கதிர் வீச்சுகள்


அணுசக்தி உருவாக்கலின்போது ஏற்படும் கதிர் வீசல், இயற்கையான கதிர் வீசலிலும் பார்க்க இரண்டு மடங்காக வெளியாகும்.

அறிவியல் மறுமலர்ச்சியும் நவன தொழில் நுட்பமும் ஏற்படுத்தியுள்ள தீமையான விளைவுகள் மிக மோச மானவையாக உள்ளன. கதிர்த் தொழிற்பாட்டின் அசைவு 500rem ஆக இருப்பின் மனிதனுக்கு இறப்பு ஏற்படும் கதிர் வீசலால் உடற் சேதத்துடன் (Somatic damage) பிறப்புரிமைச் சேதமும் (Genetic damage) ஏற்படு கின்றது.

### காடழிப்பு

இயற்கைச் சூழலைப் பேணும் காரணியான காடுகள், குறிப்பிட்ட பிரதேசத்தின் காலநிலையைத் தீர் மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின் றன. இலங்கையில் ஒரு வருடத்திற்கு 50 ஆயிரம் ஹெக்ரெயர் வரையான காடுகள் அழிக்கப்படுகின்றன.

இலங்கையில் இயற்கைக் காடுகளின் பரம்பலை காலப்பகுதியுடன் ஒப்பிடும் வரைபு




### மிகை ஒலி

தற்போதைய உலகம் சத்தத்தி னாலும் மாசடைகின்றது என்பது முக்கிய பிரச்சினையாகும்.

சூழல் மாசடைதல் எனும்போது கலாசாரச் சூழல் பாதிப்பும் கவனத் துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சமூக நிலையும் மானிடப் பண்புகளும் பாதிப் படைந்த நிலைமையையே இது காட்டுகின்றது.

பூமிப்பந்து இன்று உலகப் பேர ழிவு என்ற ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தப் பேராபத்திலிருந்து பூமியைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு மனிதனுக்கு வரவேண்டும். சுற்றாடலைப் பாதுகாக் கத தகுந்த திட்டங்கள் நடைமுறைப படுத்தப்படவேண்டும். இந்த அவசி யத்தை இன்று அனைத்து நாடுக ளும் உணரத் தொடங்கியுள்ளன.

முக்கியமாக ஒவ்வொரு சூழலின ஆக்கக் கூறாக விளங்குவதால சுற் றுச்சூழல் பாதுகாப்பில் மனிதர்க ளின் பங்களிப்பு இன்றியமையாதது.

நிலையான அபிவிருத்தியை அடையவேண்டுமாயின் சூழலியல் கொள்கைகள் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்றே கல்வியியலாளர் கள் வலியுறுத்துகின்றனர். ★



# மலையகத் தமிழ்மக்கள் மீதான தாக்குதல்கள் திட்டமிட்ட சதியின் அடிப்படையிலேயே நடக்கின்றன

## ஈழவேந்தன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்5

புதிய அரசு பதவிக்கு வந்தபின்னர் மலையகத் தமிழ்மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் அரசினதும் பேரினவாதிகளினதும் திட்டமிட்ட சதியாகும். தற்செயலாக, எதிர்பார்க்காமல் நடைபெறுபவை அல்ல.

- இவ்வாறு கடந்தவார இறுதியில் புளத்சிங்கள மில்க் கந்தத் தோட்டத்தில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற வன்செயல்கள் குறித்து வெளியிட்ட அறிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அண்மையில் நாடாளுமன்றத்தில் கந்தப்போல தாக்குதலை ஒட்டி நான் எச்சரித்துக் கூறியது மீண்டும் மெய்ப்பிக்கப்படுகின்றது. ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் இயங்குகின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும மற்றைய கட்சிகளும் கந்தப்பொல தாக்குதலை பெரிதுபடுத்தக்கூடாது என்று தட்டிக்கழித்தபோதும், கந்தப்பொல நிகழ்ச்சியை எதிர்பார்க்காமல் நடைபெற்ற தனியொரு நிகழ்ச்சியாகக் கொள்ளக்கூடாது. இதற்குப் பின்னணி உண்டு. அரசுப் படையினதும் பொலீஸாரினதும் பின்னணி ஆதரவுடன் தான் சிங்களக் காடையர்கள் இத்தாக்குதல்களை நடத்தினர் என்று நான் எச்சரித்தேன் அத்தோடு, 1920 களிலேயே சேர் பொன்.இராமநாதன் காலத்திலேயே இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் துன்புறுத்தி வெளியேற்றப்படும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதை நாடாளுமன்றப் பதிவேட்டுக் குறிப்புகளை மேற்கோள்காட்டி நான் விளக்கினேன்.

ஈழத் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல. இந்திய வம்சாவளி மக்களுக்கும் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டதை டாக்டர் என்.எம். பெரேராவின் கூற்றுக்களை மேற்கோள காட்டியும் விளக்கினேன்.

கந்தப்பொல, இங்கிரிய என்ற வரிசையில் இப்பொழுது புளத்சிங்கள மில்கந்த தோட்டத்தில் சிங்களக் காட்டுமிராண்டித்தனம் தலைதூக்கி உள்ளது. பொதுப்பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு, பௌத்த சாசனம் ஆகியவற்றின் பொறுப்புக்களை அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயகா ஏற்ற சில நாள்களிலேயே வெறிகொண்ட இந்நிகழ்ச்சி- ஈவிரக்க மற்ற நிகழ்ச்சி- நடைபெற்றுள்ளது.

இந்நாட்டு முன்னாள் தலைமை அமைச்சராக விளங்கியவர் இரத்னசிறி விக்ரமநாயகா. இன்று அவர் ஏற்றுள்ள பொறுப்புகளுள் பொதுப் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பௌத்த சாசனம் என்பன அடங்கும். வேறு சொற்களில் விளம்பின் பொதுப்பாதுகாப்பு என்ற பெயரிலும் உலகிற்கு அகிம்சையைப் போதித்த புத்த பகவான் பெயரிலும் இந்த வெறியாட்டம் நடைபெற்றுள்ளது. அவர் பதவியேற்று ஐந்து நாள்களுக்கிடையிலேயே இத்தகைய சிங்கள வெறியாட்டம் நடைபெறுவதாயின், இதனை வெறும் உணர்ச்சி அடிப்படையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியாக நாம் கொள்ள முடியாது மாறாக திட்டமிடப்பட்ட சதியின் அடிப்படையில் தான் இந்நிகழ்ச்சி அரங்கேறியது.

### இணையவேண்டும்

இ.தொ.கவின் தலைவராகத் திரு.தொண்டமான் இருந்த வேளை பின்வரும் கருத்தை அவரிடம் கூறியிருந்தேன்.

"உங்களைப்போல் ஆளுமை படைத்த ஒரு தலைவன் இனிமேல் மலையகத்தில் தோன்றப்போவதில்லை. நீங்கள் இல்லாத காலத்தில் எதிரிகள் முகாம்களில் மலையக மக்கள் பலிக்கடாக்களாக்கப்படுவார்கள். நாங்கள் இல்லாதபோது எமது பிள்ளைகளுக்கு எப்படி ஆயுட் காப்புறுதி எடுக்கிறோமோ, அதே போன்று நீங்கள் இல்லாத காலத்தில் இம்மக்கள் வாழ்வு பெற அவர்களுக்கு அரசியற்காப்புறுதி (Political Insurance) வழங்க வேண்டும்.

மலையகத் தமிழ் மக்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குக் குடியமர்ந்து ஈழத்தமிழ் மக்களோடு ஒன்றிணையவேண்டும். இதனால் ஈழத்தமிழ் மக்களும் மலையக மக்களும் ஒருங்கே காப்பாற்றப்படுகிறார்கள். அத்தோடு ஈழத்தமிழ் மண்ணும் காப்பாற்றப்படுகிறது.

கடல் கடந்த நிலையில் மீண்டும் தமிழ்நாட்டிற்கு இவர்கள் அனுப்பப்பட முடியுமெனில், பக்கத்திலுள்ள வட-கிழக்கு மாகாணத்தில் இவர்கள் குடியேறி வாழ்வது கடினமல்ல. இவற்றை உடனடியாக நிறைவேற்ற முடியாதெனில் ஈழத்தமிழன் நடத்துகின்ற போராட்டத்திற்கு பக்கபலமாக ஓங்கிக் குரலெழுப்ப வேண்டும் என்று கூறினேன்.

அதற்கு அவர் "உங்கள் கருத்து ஆழம் மிக்கது. என் சிந்தனைக்கு எடுத்துள்ளேன்" என்று கூறினார். இதுவே நான் அவருடன் நடத்திய இறுதிச்சந்திப்பு.

இந்த உரையாடல் தமிழ் நாட்டில கீழ்ப்பாக்கத்தில் அவருடைய உறவினர் இல்லத்தில் நடைபெற்றுள்ளது. எனது நாடாளுமன்ற உரையில் இதனை நான் குறித்துள்ளேன்.

தமிழினத்தின் சாபக்கேடு என்னவெனில் கந்தப்பொலவில் நடைபெற்ற கொலைகளை ஒட்டி நான் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய வேளையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாக இருக்கவில்லை. எமக்கு இருக்கின்ற அக்கறை. நேரடிப்பாதிப்புக்கு ஆளாகிய மலையகத்தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கு இல்லை என்பது வேதனைமிக்க நிகழ்ச்சி, மலையக மக்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரம் தொடர்ச்சியாக குரல் எழுப்புகின்றார். மற்றையவாகள் ஏன் அக்கறை காட்டாமல் தூங்கி வழிகிறார்கள் என்பதுதான் கேள்வி.

சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து தங்களை காப்பதற்காக தலைவர் பிரபாகரன் தலைமையில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் காப்பரண் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். மலையகத் தமிழர்களும் தமது பாதுகாப்புக்காக அத்தகைய பாதுகாப்பு அரணை உருவாக்க வேண்டும் என சிங்களப் பேரினவாதிகள் விரும்புகிறார்களா என்று நான் கேட்கவிழைகின்றேன்.

தேனீக்களைப்போல் கடுமையாக உழைக்கும் வர்க்கத்தினர் நம் மலையக மக்கள். அவர்கள் தேநீரை தயாரிப்பதற்கு கொழுந்துகளை கொய்பவர்கள் - இறப்பரை வெட்டித் தொழில் புரிபவர்கள். அவர்கள் அமைதியானவர்கள், வீண் வம்பிற்கு போகாதவர்கள், தாமுண்டு தம் வேலையுண்டு என்று இருக்கின்ற நல்குடிமக்கள். அப்படியான சமுதாயத்திற்கு எதிரான இத்தகைய வன்முறைகள் தேன் கூட்டிற்குள் கல் எறிவது போன்றது. தேனீக்கள் குழம்பினால- சாதுக்கள் மிரண்டால் காடு கொள்ளாது என்று 'உதயன்' நாளிதழின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டதையும் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக நமது மாற்றார் சிந்திக்கவேண்டிய பொருள் பொதிந்த கூற்றாகும் - என்று உள்ளது.

(அ)

## தேர்தல் காலக் கொடுப்பனவு இன்று

யாழ்ப்பாணம்,ஜூன்5

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது பணிபுரிந்த வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களது கொடுப்பனவுகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

(7)

## மதகு சேதம்; பயணிகள் சிரமம்

செம்பியன்பற்று,ஜூன்5

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் அமைந்திருக்கும் கடற்கரை வீதியில் வேம்படியில் உள்ள மதகு பலத்த சேதமுற்றிருப்பதால் இதனூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பெரிதும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பயணம் செய்யும் வாகனங்கள் வீதிக்குச் கீழ் இறங்கிச்செல்ல வேண்டியுள்ளதால் இரவு வேளைகளில் விபத்துக்களும் நேரிடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்த மதகினை உடனடியாகச் சீர்திருத்தி போக்குவரத்தை இலகுபடுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(4-36)

## SRILANKA RED CROSS SOCIETY

**Health and Psychosocial Programme - Jaffna District**

We hereby regret to inform you, that due to changes in the programme structure, we will not be calling for interviews on the advertised post as secretary advertised in the newspaper on the 21 st of April 2004.

We apologise for your inconvenience

Director General
c/o Chairman
Srilanka Red Cross Society
Jaffna District. (32756)(37-11-12)

## வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2004

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 20. 06. 2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00மணிக்கு அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். சகல பெற்றோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை,
யாழ்ப்பாணம். (c/35442)(35-11-12-37) - செயலாளர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபர்
திருமதி ரஜினி ஜெயபாலன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சரவணமுத்து பொன்னையா**

அவர்கள் (03.06.2004) வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருறும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
கிளிநொச்சி (32754)(37-11-12) கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

## விற்பனைக்கு

இல. 15/8, ஓட்டுமடம், செபஸரியார் வீதியில் 5 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடிவீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**த.கனகரத்தினம்**
இல.234/6, செபஸ்ரியார் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3275

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



குருநகரைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட

**சந்தியோ அந்தோனிப்பிள்ளை எட்வேட்**

அவர்கள் 01.10.2003 அன்று யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் புனித பத்திரிசியார், இளவாலை ஹென்றியரசர் கல்லூரிகளினதும் பழைய மாணவரும், வ.இ.போ. சபையினதும் முன்னாள் நிர்வாக அதிகாரியும், பருத்தித்துறைசாலை முகாமையாளரும், அரச அங்கீகாரம்பெற்ற சத்திய மொழிபெயர்ப்பாளரும், அத்துடன் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலய திருஇருதய நாதர் சபையின் செயலாளரும், ஐக்கிய சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினரும், முன்பள்ளி முன்னாள் தலைவரும் ஆவார்.

இவரது சமய, சமூகப்பணிகள் மென்மேலும் சிறப்புற்றுத் திகழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (32757)(37-11-12)

ஐக்கிய சனசமூக நிலைய
நிர்வாகிகளும், உறுப்பினர்களும்

Jayoda ஜயோதா ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7203408 முதல் 7212631 வரை
சீட்டிழுப்பு இல. 38 திகதி 03-06-2004

வெற்றி எண்கள் 3 7 7 1 3 3 சுப்பர் எண் 3

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,07,64,200/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 01 | 2,07,64,200/- | 2,07,64,200/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 50,000/- | 4,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 82 | 5,000/- | 4,10,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 811 | 500/- | 4,05,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,126 | 50/- | 4,06,300/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 80,513 | 10/- | 8,05,130/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/- | 35,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 83 | 1,000/- | 83,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 816 | 100/- | 81,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 8,048 | 20/- | 1,60,960/- |
| மொத்தம் | 98,495 | | 2,35,51,690/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 2,35,51,690/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,00,00,000/-

தொடர் இல. 6237327 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூன 7 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7208667-2-74
7205257-5-60
7211233-2-04
7208014-6-17
7205680-8-88

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# யாசகம் கேட்கும் நிலையில் இல்லை என்கிறது இ.தொ.கா.!

## எட்டாப் பழம் புளிக்கும் என்ற பாணியில் சீற்றம்

கொழும்பு,ஜூன்5

எவரிடமும் யாசகம் கேட்க வேண்டிய அவசியம் தமக்கில்லை என்கிறது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ். ஜனாதிபதியைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொண்டது அது.

இ.தொ.கா.கேட்கும் எல்லாவற்றையும அள்ளிக்கொடுக்கக்கூடாது என்று அழுத்தம் கொடுகின்றது ஜே.வி.பி.

இதனால் இரண்டுங்கெட்டன் நிலையில் தடுமாறுகின்றார் ஜனாதிபதி எனக் கூறப்படுகின்றது.

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க வேண்டும். அரசமைப்பை மாற்ற வேண்டும் - என்ற அதிமுக்கிய இரண்டு அடிப்படைக் கோரிக்கைகளை ஜனாதிபதி ஏற்றுக்கொண்ட பின்னரே ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் இணைந்து கூட்டமைப்பை ஏற்படுத்தினோம். ஆறுமுகன் தொண்டமான் இந்த இரண்டு விடயங்களையும் தூக்கி எறியும்படி கேட்கின்றார்.

"இது ஜே.வி.பி. - ஸ்ரீல.சு.க. கூட்டிற்கே வேட்டு வைக்கும் நோக்கமாகும். இதற்கு நாம் இடமளிக்க மாட்டோம் - என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சந்திரசேகரன் கூறினார்.

"நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டுவதற்காக இதொ.காவை அரசு அரவணைத்துக்கொள்வதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதையோ, ஐ.ம.சு.கூட்டமைப்புத் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுவதையோ நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமாட்டோம். தேவையானால் உங்களுடைய அமைச்சர்கள் சிலரை இராஜினாமாச செய்ய வைத்து விட்டு அவர்களின் இடங்களை இதொ.காவினருக்கு கொடுங்கள். ஆனால், புதிய அமைச்சுக்களை உருவாக்க முடியாது" என ஜே.வி.பி. திட்டவட்டமாக ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாம். இதை மீறினால் அரசுடனான உறவை ஜே.வி.பி. மீள்பரிசீலனை செய்ய நேரிடும் எனவும் அது அழுத்தம் கொடுத்துள்ளதாம்.

அரசில் இதொ.காவை அரவணைத்துக்கொள்வது தொடர்பாக இ.தொ.கா., ஜே.வி.பி. ஆகிய இரு தரப்பினரது நிலைப்பாடுகள் குறித்தும் ஜனாதிபதி தமது ஸ்ரீல.சு.கட்சிப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தியுள்ளார் எனத் தெரிகிறது.

இதொ.காவினருக்கு இடமளிப்பதற்காக தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமாச் செய்யத் தயார் என்றோ அல்லது இ.தொ.காவை அரசு அரவணைத்துக் கொள்வதற்குச் சார்பாகவோ அவர்கள் எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லையாம்.

அதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இதொ.காதலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு விவரமான கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்றும் கூறப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் நிலைப்பாடு இ.தொ.காவுக்கு திருப்தியளிக்கவில்லை என்றும், இதனாலேயே ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியைச் சந்திப்பதை தவிர்த்துக்கொண்டார் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, இ.தொ.காவுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் நடந்த பேச்சு முறிவடைந்தது என்றும், இ.தொ.காவின் கோரிக்கைகளை ஜனாதிபதி நிராகரித்து விட்டார் எனவும், கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரி ஒன்று செய்திவெளியிட்டிருந்தது.

இதனை இ.தொ.கா. வட்டாரங்கள முற்றாக நிராகரித்துள்ளன. அதேசமயம் ஜனாதிபதி செயலகமும் அத்தகைய சந்திப்பு ஏதும் நடக்கவில்லை என்று அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இந்தியாவிலிருந்து வந்த இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான், ஜனாதிபதியைச் சந்திக்கவில்லை. நேற்று கொட்டகலையில் இ.தொ.கா. சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை அவர் நடத்தினார் என்று இ.தொ.கா.வட்டாரங்கள் தெரிவித்தன.

"இதொ.கா. அமைச்சுப் பதவிகளுக்காக எவரிடமும் யாசகம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. பட்டம் பதவிகளுக்காக எமது கொள்கை கோட்பாடுகளை விட்டுக்கொடுக்க வேண்டிய தேவை இல்லை - என்றும் இ.தொ.கா. வட்டாரங்கள் தொிவித்தன. (க)

## மண்சரிவில் சிக்கி இளைஞர் மரணம்!

கொழும்பு,ஜூன்5

கினிகத்தேனையில் ஏற்பட்ட மண்சரிவுக்குள் சிக்குண்டு இளைஞ் ஒருவர் பலியானார். ஐந்து கடைகள மண்ணுக்குள் புதையுண்டன.

இந்த அனர்த்தம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேனையைச் சேர்ந்த கடை உரிமையாளரான பிரசன்னா அத்தநாயக்க (வயது 23) என்ற இளைஞரே மண்ணுக்குள் புதையுண்டு மரணமானார்.

மத்திய மலையகத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஆங்காங்கே மண்சரிவுகள் இடம்பெற்றுள்ளன. இரத்தினபுரிப் பகுதியில் வெள்ள அபாயம் அதிகரித்து வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கினிகத்தேனையில் நான்கு கடைகள் முற்றாக புதையுண்டதால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஆண்டுவிழாவும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்,ஜூன்,5

பருத்தித்துறை தும்பளை தெற்கு 'தமிழொலி'மாணவர் மன்றத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், கௌரவிப்பும் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

தும்பளை தெற்கு இளந்தென்றல் விளையாட்டுக் கழகத்தினால் தும்பளை தெற்கு திருவள்ளுவர் சன சமூக நிலையத் தலைவர் ப.திருச்செல்வம் தலைமையில்நடைபெறும். (ஒ-15)

## இசை ரசிகர்களுக்கு

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் சாகித்தியம் இசைக் குழு வழங்கும் இதய சங்கமம்.

பல சுவையான பக்திப் பாடல்கள், புதிய, பழைய மற்றும் ஹிந்திப் பாடல்கள், புரட்சிப்பாடல்கள், சகோதர மொழிப் பாடல்களை நீங்கள் விரும்பிய வண்ணம் கேட்டும், பார்த்தும், ரசித்தும் மகிழ எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,
31/1பி, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ. பே. இல. 021 222 7336

(32760)(36-11-16)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2590908 இலிருந்து 2598356 வரை

சீட்டிழுப்பு இல. 1509
திகதி 02.06.2004

வெற்றி எண்கள்
**04 12 16 35 38**

போனஸ் எண் **33**

ஜக்பொட் பரிசு ரூபா. 15,00,000/- வெல்லப்படவில்லை

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|
| 5 | - | 15,00,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 33 | 10,000/- | 3,30,000/- |
| 3 | 2,265 | 500/- | 11,32,500/- |
| 2 | 38,186 | 20/- | 7,63,720/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 46,965 | 10/- | 4,69,650/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
**Rs. 18,62,600/-**

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 27,95,870/-

வளமான வாழ்விற்கு

**2591272-0-79**
**2594584-1-30**
**2592870-5-93**
**2591855-5-40**
**2593153-6-40**



## தேவை

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ள கிளை பொறியியல் (சிவில்) கம்பனிக்கு ஆங்கிலம் நன்கு அறிந்த சந்தைப்படுத்துநர்/நிர்வாகி தேவை. விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

வி.இல. 2288
மே/பா-உதயன் (32768)

**நாகம்ஸ் சுன்னாகம்**

டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், த்ரிசா, பிரகாஷ்ராஜ்
கில்லி (ரீல்ஸ்) நடித்த
தினசரி: 11.00, 3.00, 7.00
வெள்ளி, சனி, ஞாயிறு: 11.00, 3.00, 7.00,10.00
(C/35399)(12)

**ராஜா யாழ்ப்பாணம்**
3 ஆவது வாரம்
சூர்யா, ஈஷா, மாதவன், த்ரிஷா, சித்தார்த்

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30 (பு.நே)
(C/34517) (22)

சிம்பு, த்ரிஷா, ரகுவரன் விவேக் நடித்த
அலை

காட்சிநேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே) (ரீல்ஸ்)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணிக்கு
AMPRICAN PIE
(சி-34420)

**லக்சுமி இணுவில்**
5ஆவது வெற்றிவாரம்...
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

மிகப் பிரமாண்டமான தயாரிப்பில
சூரியா (2 வேடங்கள்).
ஜோதிகா நடித்த
பேரழகன் (ரீல்ஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(32575)(12)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 † 06 † 1935 |  | 06 † 05 † 2004 |

### திருமதி துரைச்சாமி புனிதவதி

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்**
**வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (05.06.2004) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்,
அன்புள்ள கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
(சி-35447)(36-11-16)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் நன்னிப்பிள்ளை



சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் நன்னிப்பிள்ளை நேற்று (04.06.2004) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொனனம்மா, நல்லம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் முருகையா, சிவனாச்சியார், இராசாத்தியம்மா, கணேசகுரு ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுப்பிரமணியம், பரமேஸ்வரி, நாகேந்திரம், கலாரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2004) சனிக்கிழமை 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
(32763)(43-11-16)
தகவல்:
பிள்ளைகள்.

### பொன்னர் சிற்றம்பலம்



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சிற்றம்பலம் 01.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் தர்மராசா, சக்திவடிவேல், தயாபாலசிங்கம், தர்மபாலன், செல்லம்மா, மகாலட்சுமி, மங்கயர்க்கரசி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் தங்கநாதன், கந்தசாமி, கிருஸ்ணா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2004) சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.
(32759)(36-11-16)
தகவல்:
பிள்ளைகள்.

### முருகன் - நாகலிங்கம் (J.P.)



(சமாதான நீதிவான், ஏழாலை கிராமசபை முன்னாள் உபதலைவர், பொதுச்சபை உறுப்பினர் சுன்னாகம் ப.நோ.கூ.ச. கிளைக்குழுத் தலைவர், கிளை இல.23A, சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம், மல்லாகம் சாளம்பை முருகன் ஆலய பரிபாலன சபை முன்னாள் உபதலைவர், மயிலங்காடு அறுமன் கலட்டி ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை முன்னாள் தலைவர், முன்னாள் இணக்கசபை உறுப்பினர், மயிலங்காடு ஸ்ரீ முருகன் கிராமமுன்னேற்றச் சங்க ஆரம்பகால தலைவர், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய ஆரம்ப நலன்விரும்பி)

ஏழாலை தெற்கு, மயிலங்காட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முருகன் நாகலிங்கம் அவர்கள் நேற்று (04.06.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் பத்மநாதன், குணநாயகி,கமலநாயகி, ஜெகநாயகி, தனநாயகி, சிவநாயகி, இந்திரநாதன் (பரிஸ் இந்திரன்), யோகநாதன், தவநாதன் (பிரான்ஸ் நாதன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஜெகசோதி, திருச்செல்வம், தம்பிராசா, முத்துக்குமாரு, தனபாலசிங்கம், நாகேந்திரம், பிரியவினோதினி, சசிகலா, காலஞ்சென்ற வளர்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆச்சிக்குட்டி, காலஞ்சென்ற செல்லத்துரை, ஆனந்தி மற்றும் சோமசுந்தரம், திருப்பதி ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.
(32761)(36-11-16)
தகவல்:
நா.பத்மநாதன்
(மகன்).

# கிழக்கில் இராணுவச் சமநிலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேகப்படும்படியான - நோக்கிலேயே பார்க்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கிழக்கு நிலைமை தொடர்பாக அரசின் செயற்பாட்டுப் போக்கை சில இரகசிய ஆதாரங்களோடு மேற்குலக உயர் மட்டங்களுக்கு புலிகளின் சில வட்டாரங்கள் தெளிவுபடுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

ஒருபுறம் சமாதான நிலையை - யுத்த நிறுத்தத்தை - நீடித்துக் கொண்டு, மறுபுறம் கிழக்கிலங்கையைக் குழப்பி, அதன் மூலம் தற்போதைய இராணுவச் சமநிலையை தனக்குச் சாதகமாக மாற்றியமைக்க இரகசித் திட்டங்களை அரசுப் படைகள் முன்னெடுக்கின்றன என்பதை புலிகளின் உயர் பிரதிநிகள் மேற்கு நாடுகளின் உயர்மட்டங்களுக்கு விலாவரியாக விளக்கியிருக்கின்றனர் என்று தெரிகின்றது.

இவ்வாற முற்பகுதியில் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்டத்திக்கு முன்னர் இவ்விளக்கம் அளிக்கப்பட்டிருக்கின்றது. பிரஸல்ஸ் மாநாட்டில் இவ்விடயம் எதிரொலித்ததாகவும் அறியவந்தது.

அதையடுத்தே உதவும் நாடுகளின் இணைத் தலைமைகள், இலங்கைக்கு உதவி வழங்கும் விடயத்தில் கடும் நிலைப்பாட்டை - கறார் போக்கை எடுத்தன என்று கூறப்பட்டது.

இப்போது இலங்கையில் சமாதான முயற்சிகள் தடைப்பட்டு, அது முன்னெடுக்கப்படாமல் இருந்தாலும் இங்கு அமைதி நிலை நீடிக்கின்றது. யுத்த நிறுத்தம் முழு அளவில் பேணப்படுகின்றது.

ஆனால், இராணுவச் சமநிலையைக் குழப்பும் விதத்தில் அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்படும் இரகசிய சதித்திட்டச் செயற்பாடுகள் அந்த அமைதி நிலைப் போக்குக்கு நிரந்தர அழிவு வைத்துவிடும் ஏது நிலையும் உள்ளது என்பதை புலிகளின் தலைமை சம்பந்தப்பட்ட மேற்கு நாடுகளுக்கு முற்கூட்டியே, எச்சரிக்கைத் தகவலாகத் தெரியப்படுத்தியிருப்பதாகவும் அறியவந்தது. (க)

# சட்டம் - ஒழுங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றோம்.

ஆகவே, இலங்கை அரசின் சாதகமான பதிலைப் பெற்றுக்கொண்டுதான் எதிர்கால முன்னெடுப்புக்கள் பற்றி உறுதியான தீர்மானங்களை எடுக்கலாம்.

*கேள்வி:* கிழக்கில் சமாதானம் நிலவுகின்ற நிலைமையிலும் மக்கள் பயப்பீதியில் வாழ்கின்றார்கள். பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகிறார்கள். இந்த நிலைமையில் மாற்றம் கொண்டு வருவதற்கு நீங்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறீர்கள்?

*பதில்:* யுத்த நிறுத்த சூழலில் இப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்வது யுத்த நிறுத்த மீறலாகத்தான் எமது தலைமைப்பீடம் கருதுகிறது.

இது சம்பந்தமான - அதிகாரபூர்வமான - உறுதியான - நிலைப்பாட்டை நாங்கள் தெரியப்படுத்தி இருக்கின்றோம்.

நேற்றுமுன்தினம் எமது தளபதிகள், படைத்தரப்பினரை நேரடியாகச் சந்தித்து முறையிட்டிருக்கின்றார்கள்.

இப்படியான நடவடிக்கைகளுக்கு இவர்கள் முடிவு கட்டாவிட்டால், இந்த யுத்த நிறுத்த சூழலையும் சமாதான முன்னெடுப்பையையும் மேற்கொண்டு தொடர்ந்து செல்வது மிகவும் கடினமாக இருக்கும் என்கின்ற எமது நிலைப்பாட்டையும் நாம் தெரியப்படுத்தியிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை கிழக்கிலே இப்படியான ஒருபதற்ற சூழலை - இப்படியான ஒரு நெருக்கடி சூழலை - உருவாக்குவது படைத்தரப்பும், படைத்தரப்பினரால் பாதுகாக்கப்படுகின்ற குழுக்களும்தான்.

ஆகவே, இதனைக் கட்டுப்படுத்துகின்ற பொறுப்பு படைத்தரப்புக்கு இருக்கின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தான் இந்தப் படுகொலைகளும் பதற்ற நிலையும் தொடர்கின்றன.

அங்கு சட்டம் - ஒழுங்கைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்பந்தததின் அடிபடையில் படைத்தரப்பின் கையில் இருக்கின்றது.

அவர்களால் அதைச் செய்ய முடியாதுவிட்டால், அதில் இருந்து அவர்கள் விலகிக் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

அதனை நிர்வகின்ற அல்லது சட்டம் - ஒழுங்கைப் பேணுகின்ற பொறுப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கைகளுக்கு வருமாக இருந்தால நாங்கள் அப்பிரதேசங்களைப் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவோம். இதனையும் நாங்கள் படைத்தரப்புக்குக் கூறியிருக்கின்றோம்.

- இவ்வாறு கூறியுள்ளார் தமிழ்ச்செல்வன். (க)

## ...கைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலைக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. நெல்லியடிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை நீதிவான் சடலத்தைப்பார்வையிட்டார்.

மரண விசாரணைக்காக சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (படம் 2ஆம் பக்கத்தில்) 

(ஓ-3-15-70-173)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மலையகத்தில் மலையக மக்கள் முன்னணி வேட்பாளர்களுக்குத் தமிழ் கூட்டமைப்பு தார்மீக ஆதரவு வழங்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளைச் சந்திரசேகரன் வலியுறுத்தியிருந்தார். அவை பற்றி இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பத்திரிகையாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் மேலாக ஊடகத்துறையில் குறிப்பாக பத்திரிகையுலகில் பணியாற்றி தமிழ்த்தேசியத்திற்கும், தமிழ் இனத்தின் எழுச்சிக்கும் மகத்தான சேவையாற்றி உள்ளார்.

அதே நேரத்தில் வாசகர்களின் மனங்களை கவ்விப்பிடித்து அவர்களை அதன்பால் சிந்திகத்தூண்டும் ஈர்ப்பினை கொண்டதாகவும் இருக்கும் இதன் மூலம் எல்லா மக்களையும் போராட்டத்தின்பால் சிந்திக்கத்தூண்டிய சேவையைத் திறம்பட ஆற்றியுள்ளார். இவரின் இச்சேவையைப் பாராட்டி தமிழீழத் தேசியத்தலைவர் புலிச்சின்னம் பதித்த விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இத்தகைய ஒரு சிறந்த பத்திரிகையாளன் தொடர்ந்தும் தனது சேவையை ஆற்றி பத்திரிகை உலகிற்கும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வரலாற்றுக்கும் பெரும்பணியாற்ற வேண்டும். அத்துடன் வளர்ந்து வரும் இளைய ஊடகவியலாளர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் . அவரின் நீண்டகால சேவையைப் பாராட்டுவதோடு தொடர்ந்தும் சிறப்பாகப் பணியாற்ற எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். என்றுள்ளது. (ஓ)

# பெற்றோரின் மோதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுவரெலியா டிக்கோயாவைச் சேர்ந்த இராசதுரை இராஜ்குமார் குடும்பத்தினர் இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசித்து வந்தனர். குடும்பப்பிணக்குக் காரணமாகப் பிரிந்து வாழ்ந்த இராசகுமாரும், அவரது மனைவி ஜெயந்தியும் சமீபத்தில் சேர்ந்து வாழத்தொடங்கினர்.

இந்நிலையில், கணவன் மனைவிக்கிடையே நேற்று தகராறு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

அப்போது கணவனால் வீசப்பட்ட அம்மிக்குழவி மகனின் தலையைத் தாக்கியதாக ஒரு தகவலும் -

தந்தையே ஆத்திரத்தால் சிறுவனைத் தரையில் அடித்துக் கொன்றார் என்று மற்றொரு தகவலும் - தெரிவித்தன. ஆனால் இவை ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

மகன் இறந்ததால் ஆத்திரமடைந்த தாயார், கணவனைக் கொட்டனால் தாக்கினார் என்றும் -

இதனையடுத்து மனைவியையும், மனைவியின் தாயாரையும் கணவர் கத்தியால் வெட்டிக்காயப்படுத்தினர் என்றும் -

இதன்பின்னர் இராசகுமார் ஓடிச் சென்று பனைமரம் ஒன்றில் ஏறிய போது அரைப்பனை உயரத்திலிருந்து கீழே வீழ்ந்து படுகாயமடைந்தார் என்றும் - கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த கணவனும் மனைவியும் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மனைவியின் தாயார் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறுவனின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஓ-9-6-7-15-70-173)


COMPUTER COURSES

New Batches Start on Batch 1 : 5. 06. 2004 Batch 2 : 7. 06. 2004 Batch 2 : 19. 06. 2004 at 10.00 A.M

Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology



கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

Diploma in Internet Technology
Diploma in MS Office
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Hardware Technology
Diploma in Desk Top Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna T.P No: 021-222 2831 Email: iis@sltnet.lk
Branch: IIS, Nelliyady, Karaveddy T.P No: 021-226 3335

யாழ்.மண்ணில் புதிய உதயம்
செய்மதி தொலைத்தொடர்பு மூலமான
"இன்ரநெற் கபே"
Focus Net Cafe & Games Zone
120, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)
(30752)(11-14-33-38)

புலமைப்பரிசில் திட்டத்தில் பங்குபற்றாத மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
30% கட்டணச் சலுகை
SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இதுவரையில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்படாத பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடங்கியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C++
DIPLOMA IN NETWORK ENGINEERING
புதிய பிரிவு ஆரம்பம் 07,11.06.2004
Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170
scclanka@hotmail.com
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. T.P: +91-44-4891286

IBMS
புதிய நிர்வாகத்தின் கீழ் நவீன தொழில் நுட்ப அறிமுகங்களுடன்
COMPUTER COURSES
New Batches Start on 12.06.2004 & 14.06.2004 at 10.00 a.m.
DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN INTERNET TECHNOLOGY
DIPLOMA IN HARDWARE ENGINEERING
DIPLOMA IN DESK TOP PUBLISHING
Certificate Courses
Java, Visual Basic, C++, Oracle, MS Word, MS Excel, MS Access, Photoshop, Page Maker, Corel DRAW
• Registered with Tertiary and Vocational Education Commission, Sri Lanka.
• Registered to Association of Computer Training Organisations, Sri Lanka.
Institute of Business Management Studies
Head Office : # 410, K.K.S. Road, Jaffna. T.P : 021 222 3165
Branches : Nelliady, Karaveddy Chavakachcheri


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.